# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 08 வியாழக்கிழமை (23.12.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 027

## நல்லிணக்க ஆணைக்குழு பூஸா முகாம் சென்று தமிழ்க் கைதிகளிடம் நேரில் சாட்சியம் பெறும்

### எதிர்வரும் 30ஆம் திகதி அங்கு விஜயம்

கொழும்பு,டிசெ.23

தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளிடம் சாட்சியங்களைப் பதிவு செய்து கொள்வதற்காக கற்றுக்கொண்ட பாடங்கள், நல்லிணக்க ஆணைக்குழு காலி - பூஸா தடுப்பு முகாமுக்கு இம் மாதம் 30ஆம் திகதி விஜயம் செய்கிறது என்று நல்லிணக்க ஆணைக்குழுவின் முக்கிய அதிகாரி ஒருவர் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழு இம் மாதம் 30ஆம் திகதி காலை 9 மணிக்குப் பூஸா தடுப்பு முகாமுக்கு விஜயம் செய்து, தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளிடம் நேரடியாகச் சாட்சியங்களைப் பதிவு செய்யவுள்ளது என்றும் அவர் கூறினார்.

கற்றுக் கொண்ட பாடங்கள், நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் தாங்களும் சாட்சியம் அளிக்கவேண்டும் எனவும், அதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருமாறும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள்

(28 ஆம் பக்கம் பார்க்க)

# அபிவிருத்திப் பணிகள் மட்டும் விரோதத்தைத் தீர்த்துவிடா

### மனித உரிமைகள் தின நிகழ்வில் கனேடியத் தூதுவர்



கொழும்பு,டிசெம்பர் 23

நாட்டின் அபிவிருத்தியில் பொருளாதாரப் பிரச்சினைகளில் மட்டும் கவனம் செலுத்துவதால், மோதலுக்கு முரண்பாட்டுக்கு விரோதத்தை முறுகலை தீர்க்க முடியாது.

பல வருடங்களாக வருந்தத்தக்க இழப்புக்களைச் சந்தித்த ஒரு நாட்டினை ஆளும் அரசாங்கம் அதனைக் கட்டி எழுப்புவதற்குப் பொருளாதார விடயங்களில் மட்டும் கவனம் செலுத்துவது பெரும் தவறான காரியமாகும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இலங்கைக்கான கனேடியத் தூதுவர் புரூஸ் லெவி.

பவ்ரல் அமைப்பின் ஆதரவில் கொழும்பில் இந்த மாத முற்பகுதியில் நடைபெற்ற மனித உரிமைகள் தின விழாவில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

மனித உரிமை தின விழாவில் கனேடியத் தூதுவர் ஆற்றிய உரையின் சில முக்கிய பகுதிகள் வருமாறு :-

பல வருடங்களாக வருந்தத்தக்க இழப்புகளுக்குள்ளாகிய தன் பின்னர் முகிழ்த்துக் கொண்டிருக்கும் ஒரு நாட்டை வழி நடத்திச் செல்லும் ஓர் அரசாங்கம் பொருளாதார, பிரச்சினைகளில் மட்டும் கவனம் செலுத்துவது பெரும் தவறாகும். சந்தேகமின்றி பொருளாதார வளர்ச்சியும் அவசியம்தான். ஆனால் அவை, முரண்பாடுகளின் தீச்சுவாலையை ஊதிப் பெருப்பிக்க உதவிய விரோதத்தை, முறுகல்

(28 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்காலத்திற்காக போராடும் மாணவர்கள்



யாழ்ப்பாணம்,டிசெ.23

கடந்த காலப் போர் காரணமாகக் கண்பார்வையை இழந்த அதேநேரம் கைகளையும் இழந்த மூன்று மாணவர்கள் இம்முறை யாழ்ப்பாணத்தில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை எழுதி வருகிறார்கள்.

கைதடி முத்துக்குமார சுவாமி பாடசாலையில் அமைந்துள்ள பரீட்சை நிலையத்தில் பரீட்சை எழுதி வரும் இந்த மாணவர்கள் கைதடி நவீல்ட் விழிப்புலனற்றோர் (28 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.போதனா வைத்தியசாலையினுள் பழுதடைந்த சேலைன்கள் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.23

நோயாளர்களுக்குப் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்த, பங்கசுகளால் பாதிக்கப்பட்டுப் பழுதடைந்த சேலைன் மருந்துகள் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையினுள் கண்டு பிடிக்கப்பட்டன. இதனையடுத்து அந்தத் தொகுதியில் வந்திருக்கக்கூடிய அனைத்து சேலைன் மருந்துப் போத்தல்களையும்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## 160 புலிச் சந்தேக நபர்களுக்கு தடுப்புக்காவல் உத்தரவு நீடிப்பு

கொழும்பு, டிச.23

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 160 புலிச் சந்தேக நபர்களை அடுத்த மாதம் மூன்றாம் திகதிவரை தடுப்புக்காவலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. நிபுணர்குழு வருகையின் பின்னணியில் வெளிவிவகார அமைச்சின் சில அதிகாரிகள்

### தேசிய சுதந்திர முன்னணி குற்றஞ்சாட்டுகிறது

கொழும்பு,டிசெ.23

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் நியமித்த நிபுணர் குழுவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்த நல்லிணக்க ஆணைக்குழு முன் கொண்டுவருவதற்கு இலங்கை வெளிவிவகார அமைச்சு சதித் திட்டமொன்றை வகுத்து செயற்படுத்தி வருகிறது என தேசிய சுதந்திர முன்னணி நேற்றுப் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியது.

தேசிய சுதந்திர முன்னணியின்

(04ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. நிபுணர்குழு கேள்வி கேட்க அனுமதி இல்லை

### நல்லிணக்க ஆணைக்குழு அதிகாரி தகவல்

கொழும்பு, டிச.23

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழு கற்றுக்கொண்ட பாடங்கள், நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியமளிக்க வருகை தந்தால், அக்குழுவினர் கேள்வி கேட்க அனுமதி அளிக்கப்படமாட்டாது. அவர்களிடம் ஆணைக்குழுவே கேள்வி

(28ஆம் பக்கம் பார்க்க)

விட்டையோ வேலைத்தளத்தையோ எந்த நேரமும் எங்கிருந்தும் கண்காணிக்க

Athavan Technology

Security camera, Door phone system, Finger print attandance, Burgler alarm



No. 111/2, Brown Road, Kokuvil East, Jaffna.

Tel - 0750 421 776

## சிரேஷ்ட அமைச்சர்கள் உட்பட 20 பேர் ஐ.தே.கவுடன் இணையத் தயார் நிலையில்

### ஹரீன் பெர்னாண்டோ எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, டிசெ.23

அரச தரப்பில் இருந்து சிரேஷ்ட அமைச்சர்கள் உட்பட 20 உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைய வுள்ளனர் என்றும் இதுதொடர்பான பேச்சு இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது என்றும் ஐ.தே.கட்சி எம்.பி. ஹரீன் பெர்னாண்டோ நேற்றுக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று (28 ஆம் பக்கம் பார்க்க)

சுன்னாகம் சிங்கரின் வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியான செய்திகளுடன் நத்தார் தாத்தா



சுன்னாகம் சிங்கரில் உங்களுக்காக!
மேலதிக விலைக்குறைப்புக்கும் அதிகமாக
விஷேட ...... விலைக்கழிவுகள்.
வாடிக்கையாளர்களை குஷிப்படுத்த
சின்னஞ்சிறு அன்பளிப்புக்கள்!

மற்றும் எதிர்வரும் 25ஆம் திகதி கிறிஸ்மஸ் தினத்தன்று சுன்னாகம் சிங்கரின் வாடிக்கையாளர்களின் இல்லத்துக்கு நிச்சயம் அதிஷ்டத்தை அள்ளித்தரும் செய்தியுடன் நத்தார் தாத்தாவை எதிர்பாருங்கள்.

சிங்கர் பிளஸ்,
இல. 136, கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம். தொ.பே. 0212240555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கக் கோரி ஐ.தே.க. ஆர்ப்பாட்டம்

கொழும்பு, டிச. 23

அரசு வாக்குறுதி வழங்கியது போல் அரச ஊழியர்களுக்கு 2,500 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்கக் கோரி அடுத்த மாதம் 26ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளது என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க நேற்றுக் கூறினார்.

அவரது காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

அரச ஊழியர்களுக்கு 2,500 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என்று ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் வாக்குறுதி அளித்திருந்தார். ஆனால், அந்த வாக்குறுதியை ஏன் மீறிவிட்டார்.

வாழ்க்கைச் செலவீனம் அதிகரித்துக்கொண்டே செல்வதால் மக்கள் மிகவும் துன்பப்படுகின்றனர். இந்த வாழ்க்கைச் செலவீன அதிகரிப்பால் அரச ஊழியர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அந்தப் பிரச்சினையில் இருந்து மீள சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும்.

வாக்குறுதி வழங்கப்பட்டதன் படி சம்பள உயர்வை வழங்குமாறு கோரி நாம் அடுத்த மாதம் 26ஆம் திகதி கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளோம். இதில் அனைத்து மக்களும் கலந்து கொள்ளவேண்டும்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பல அமைப்புகள் ஒன்றிணைகின்றன. மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்வதற்காக 26ஆம் திகதியை ஒதுக்கிவைத்துக் கொள்ள வேண்டும்.

இதனைத் தொடர்ந்து தனியார் துறையினர் மற்றும் பெருந்தோட்டத் துறையினரின் சம்பளமும் அதிகரிக்கப்படவேண்டும் - என்றார்.

உலக சந்தையில் உயர்வு ஏற்பட்டுள்ளபோதும்

# எரிபொருள் விலை அதிகரிக்காது அமைச்சர் சுசில் திட்டவட்டம்

கொழும்பு, டிசெ.23

உலகச் சந்தையில் எரிபொருளின் விலை அதிகரித்துள்ள போதிலும் உள்நாட்டில் எரிபொருள் விலை அதிகரிக்கப்படமாட்டாது என்று பெற்றோலியத் துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் 83 அமெரிக்க டொலர்களாக இருந்த மசகு எண்ணெய் பீப்பாயொன்றின் விலை 91 டொலர்களாகவும் டீசல் பீப்பாயொன்றின் விலை 93 டொலரில் இருந்து 102 டொலர்களாகவும் அதிகரித்துள்ளது என்றும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

இதற்கிடையில், மாதாந்தம் எரிபொருளைக் கொள்வனவு செய்வதை விடுத்து வருடாந்த அடிப்படையில் அதனை இறக்குமதி செய்வதற்கான ராஜதந்திர மட்டப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும் ஏற்கனவே பல நாடுகளுடன் இவ்விடயம் பற்றிக் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மாதாந்தம் கொள்வனவு செய்வதை விட வருடாந்தம் கொள்வனவு செய்வதில் பல அனுகூலங்கள் உள்ளன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ஒ-5-22)

# டக்ளஸை கைது செய்யுமாறு கோரிய மனு சென்னை நீதிமன்று விசாரணைக்கு ஏற்பு

கொழும்பு, டிசெ. 23

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை கைது செய்யக்கோரி சட்டத்தரணி புகழேந்தி தாக்கல் செய்துள்ள மனுவை சென்னை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுகொண்டுள்ளது என இந் திய ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

25 ஆண்டுகளுக்கு முன் சென்னையில் நடந்த கொலை வழக்கு ஒன்றில் ஸ்ரீலங்கா அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பந்தப்பட்டுள்ளார் என குற்றம்சாட்டப்பட்டிருந்தார்.

இந்நிலையில் சென்னை உயர்நீதிமன்றத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை கைது செய்யக்கோரி சட்டத்தரணி புகழேந்தி மனுத் தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவை சென்னை உயர் நீதிமன்றம் நேற்றையதினம் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டது.

# புலிகளின் முக்கிய தலைவர்கள் பலர் வெளிநாடுகளுக்குத் தப்பியோட்டம்!

## இந்தியப் புலனாய்வு விசாரணையில்

கொழும்பு, டிச. 23

இறுதிப்போரின்போது முக்கிய தலைவர்கள் பலர் உட்பட விடுதலைப் புலி உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ளனர் என இந்தியப் புலனாய்வு அமைப்பின் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது என்று இணையங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

இதுகுறித்து மேலும் வெளியாகியுள்ள தகவல்கள் வருமாறு -

தப்பிச் சென்றவர்கள் பெருந்தொகையான ஆயுதங்களையும் தம்முடன் எடுத்துச் சென்றனர் எனவும் அக்கால கட்டத்தில் புலிகளுக்கு ஆயுதம் விநியோகித்த தாவூத் இப்ராஹிம் குழுவினர் இந்தியப் புலனாய்வு விசாரணையாளர்களிடம் தெரிவித் துள்ளனர்.

தாவூத் இப்ராஹிம் குழுவின் முக்கிய புள்ளியான மிர்ஸா பெய்க்கிடம் நடத்தப்பட்ட விசாரணைகளிலிருந்தே மேற்படி தகவல்கள் வெளிவந்துள்ளன.

அது மாத்திரமன்றி யுத்தம் நிறைவுற்ற பின்னரும் கூட விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள் பலர் தலைமறைவாக இருந்து விட்டு வெளிநாடுகளுக்குத்தப்பிச் சென்றுள்ளனர் எனவும் அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

மிர்சா பெக்கிடமிருந்து பொட்டம்மான் பற்றிய தகவல்களையும் பெற்றுக்கொள்வது தொடர்பான விசாரணைகளை இந்தியப் புலனாய்வுத்துறை மேற்கொண்டுள்ள போதிலும், அவற்றின் விவரங்கள் இதுவரை வெளியாகவில்லை.

அதுமட்டுமன்றி தற்போதும் கூட கொழும்பில் இருந்து செயற்படும் தாவூத் இப்ராஹிம் குழுவின் முக்கியஸ்தர் ஒருவர் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களுடன் தொடர்பில் இருக்கிறார் எனவும் இப்ராஹிம், இந்தியப் புலனாய்வுப் பிரிவினரிடம் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் வலையமைப்பு தொடர்பாக அவர் மேலும் பல தகவல்களை வெளியிட்டுள்ள போதிலும், பாதுகாப்புக் கருதி அவற்றை வெளியிட முடியாதுள்ளது என மும்பைப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சி)

# மின்சாரசபை செலுத்த வேண்டிய கடன் 24 ஆயிரத்து 87 கோடி எனத் தகவல்

கொழும்பு, டிசெ.23

இலங்கை மின்சாரசபை கடந்த 2009ஆம் ஆண்டில் செலுத்த வேண்டியிருந்த மொத்தக் கடன் தொகை 24,087 கோடி ரூபாவென மின்சார சபையின் தகவல் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அந்தக்கடன் தொகையில் 5150 கோடி ரூபா பெற்றோலியக் கூட்டுத் தாபனத்திடமிருந்து மின்சாரசபை பெற்றுள்ள எரிபொருள்கள் தொடர் பாகச் செலுத்தப்பட வேண்டி யிருந்த கடன் எனவும் அந்த அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக மின்சாரசபையினால் திறைசேரிக்குச் செலுத்தப்பட வேண்டியிருந்த மொத்தக் கடன் 8,680 கோடி ரூபா எனவும் அந்த அறிக்கைகள் தெரிவித்துள்ளன. (ம-22)

# சுங்கத் திணைக்கள உப அலுவலகம் யாழ்ப்பாணத்தில் 3 ஆம் திகதி திறப்பு

யாழ்ப்பாணம், டிசெ.23

யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலையில் சுங்கத் திணைக்கள உப அலுவலகங்கள் ஜனவரி மாதம் திறந்து வைக்கப்படவுள்ளதாக சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இதன் முதல் கட்டமாக யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 3 ஆம் திகதி சுங்கத் திணைக்களத்தின் அலுவலகம் திறந்து வைக்கப்படவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். சுங்கத்திணைக்களத்தின் யாழ். அலுவலகம் யாழ். பிரதம தபாலக வளாகத்தில் திறக்கப்படவுள்ளது. இதற்கான அலுவலக அமைப்புப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கியதாக இந்த சுங்கத் திணைக்கள உப அலுவலகம் இயங்கும்.

இதுவரை காலமும் திருகோணமலையில் உள்ள சுங்கத் திணைக்கள அலுவலகத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வந்த வெளிநாட்டுத் தபால் பொதிகள் ஜனவரி முதல் யாழ். உப அலுவலகத்தில் வைத்து பரிசோதனைக்குட் படுத்தப்பட்ட பின்னர் அவற்றை தாமதமின்றி உடன் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

25 ஆண்டுகளுக்குப் பின்னர் சுங்கத்திணைக்கள அலுவலகம் யாழ்ப்பாணத்தில் திறக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-26)

# பிரபாகரன் பற்றிய கேள்விக்கு ராகுல் காந்தி பதில்கூற மறுப்பு

மதுரை, டிசெ.23

அகில இந்திய காங்கிரஸ் பொதுச்செயலாளர் ராகுல் காந்தி இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகளைச் சந்திப்பதற்காக இரண்டு நாள் பயணமாக நேற்று தமிழகம் வந்துள்ளார். நேற்று மாலை அவர் மதுரையில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றார்.

ஆலோசனைக் கூட்டத்தின் போது ஒரு காங்கிரஸ் நிர்வாகி எழுந்து நின்று, ''நான், தலைவர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோருக்குத் தூக்குத்தண்டனை பெற்றுத்தரவேண்டும் என்று கடிதம் எழுதினேன். விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனைப் பிடித்து தூக்கில் போட வேண்டும் என்றும் கடிதம் எழுதினேன். அதற்கும் தாங்கள் எந்தப் பதிலும் தெரிவிக்கவில்லையே'' என்று கேள்வி எழுப்பினார்.

காங்கிரஸ் நிர்வாகியின் இந்தக் கேள்விக்கு ராகுல் காந்தி பதில் சொல்ல மறுத்துவிட்டார். அதுபற்றி இப்போது பேசவேண்டாம் என்று சொல்லி விட்டார்.

பின்னர் பேசிய ராகுல் காந்தி, 'நான் தமிழ் கற்றுக் கொள்ளப் போகிறேன். தமிழ் கற்றுக் கொண்டு தமிழில் பேச விரும்புகிறேன்' என்று தெரிவித்தார். (ஒ)

# கொழும்பில் கமெரா பொருத்தும் திட்டம் ஒத்திவைப்பு

கொழும்பு, டிச. 23

கொழும்பு நகரின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று பொருத்தப்படவிருந்த பாதுகாப்புக் கமெராக்கள் பொருத்தும் திட்டம், தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், குற்றச் செயல்களைக் குறைக்கும் நோக்கிலும் கொழும்பு நகரின் கேந்திர நிலையங்களில் பாதுகாப்புக் கமெராக்களைப் பொருத்த அரசு திட்டமிட்டது. இவ்வாறு 108 கமெராக்கள் பொருத்தப்படவிருந்தன.

ஒரு வருடத்திற்கு முன் இந்தக் கமெராக்களைப் பொருத்துவதற்கான திட்டத்தை கோட்டாபய ராஜபக்ஷ முன்வைத்தார். ஆனால், பெரும் பொருள் செலவு ஏற்படும் என்பதால் தொடர்ந்து இத்திட்டம் தாமதமடைந்து வந்தது. மீண்டும் நேற்று தொடங்கவிருந்த இந்தத் திட்டம் பின்னர் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ஒ)

# செல்லப் பிராணிகளுக்கும் பதிவு

## மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, டிச. 23

வீடுகளில் வளர்க்கப்படும் அனைத்து செல்லப் பிராணிகளையும் பதிவு செய்வதற்கான வேலைத்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் கபில கன்னங்கர தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் முதற் கட்ட நடவடிக்கை எதிர்வரும் சில வாரங்களில் சப்ரகமுவ மாகாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து, மேற்படி இத்திட்டத்தை மேல் மாகாணத்திலும், அதன் பின்னர் நாட்டிலுள்ள ஏனைய மாவட்டங்களிலும் முன்னெடுக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கட்டாக்காலி செல்லப்பிராணிகளால் சமூகத்தில் பல்வேறு நோய்கள் பரவுவதுடன், பொது மக்கள் பல்வேறு அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றனர். எனவே, இதனைத் தடுப்பதற்காக இவ்வாறான திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது. (ஒ-05)

# அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு சீனாவில் இருந்து பாரந்தூக்கிகள்

கொழும்பு, டிசெ.23

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் பொருத்துவதற்காக சீனா நாட்டிலிருந்து இரண்டு மிகப் பெரிய பாரந்தூக்கிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக துறைமுக அதிகார சபை தலைவர் பிரியந்த பி.விக்ரம தெரிவித்தார்.

இந்தப் பாரந்தூக்கிகளின் பெறுமதி சுமார் எட்டு மில்லியன் அமெரிக்க டொலர் தொடக்கம் 10 மில்லியன் அமெரிக்க டொலர் வரையாகும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இவற்றைக் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அடுத்த வருடம் பெப்ரவரி மாதமளவில் இந்த பாரந்தூக்கிகள் இலங்கையை வந்தடையும் என்றார் விக்ரம. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியமர்வோர் பிரச்சினைகள் குறித்து அரசுடனும் சர்வதேசத்துடனும் பேசத் தயார்

## மாவை சேனாதிராஜா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.23

எமது மக்களுக்குச் சொந்தமான நிலங்கள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. பல்லாயிலரக் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்தோர் முகாம்களிலும் நண்பர்கள் வீடுகளிலும் தங்கியிருக்கின்றார்கள். அவர்கள் முழுமையாக மீளக்குடியமர்த்தப்படுவதற்காகவும் அவர்களுக்கு மறுவாழ்வு வழங்குவதற்காகவும் மீள்குடியேற்ற அமைச்சுடனும், அரசாங்கத்துடனும், சர்வதேசத்துடனும் பேசுவதற்குத் தயாராக இருக்கின்றோம்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா.

வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளான மீளக்குடியமர்த்தப்பட்ட யாழ். பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 534 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் நிகழ்வு நேற்று பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

யாழ். பிரதேச செயலர் திருமதி சுகுணாரதி தெய்வேந்திரம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு உரை நிகழ்த்துகையில் மேலும் கூறியவை வருமாறு:-



### அமைச்சர் கொடுத்த சாதகமான பதில்

மிக மோசமான கொடிய யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு துயருற்றிருக்கின்ற மக்கள் மழை வெள்ள அனர்த்தத்தினாலும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இந்த மக்களுக்காக நாடாளுமன்றத்தில் நாங்கள் குரல் கொடுத்தோம். நேரடியாக மீள்குடியேற்ற அமைச்சிடம் பேசினோம். மீள்குடியேற்ற அமைச்சர் உடன் எமக்கு எழுத்து மூலமான பதிலைத் தந்தார். நாம் வடபகுதிக்கு நேரில் வருகை தந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாக வும் அதில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் கலந்து கொள்ளுமாறும் அதில் மீள்குடியேற்ற அமைச்சர் தெரிவித்திருந்தார்.

நாம் ஏற்கனவே மக்களுடைய பேரவலத்தைப் பார்த்துவிட்டு அவர்களுடைய மனிதாபிமானப் பணிகள் தொடர்பாக அரசுடன் பேசவும் அவர்களுடைய பணிகளுக்கு ஒத்துழைக்கவும் ஆயத்தமாக இருக்கின்றோம் என்று ஜனாதிபதிக்கும், அரசாங்கத்துக்கும், சர்வதேசத்துக்கும் அறிவித்திருக்கின்றோம்.

அதனுடைய ஒரு நல்லெண்ணமாக முதல் சந்தர்ப்பமாகவும் மீள்குடியேற்றத்துக்குப் பொறுப்பாக உள்ள அமைச்சர் எமக்கு அழைப்பு விடுத்திருக்கிறார். அவரது அழைப்பை ஏற்று ஒரு மணிநேரத்துக்கு மேலாக அவருடன் கலந்துரையாடினோம்.

### எம்மக்கள் இன்னும் அகதி முகாம்களில்

எமது பிரதேசங்களில் மக்களுக்குச் சொந்தமான ஏராளமான நிலங்கள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. இடம்பெயர்ந்தோர் முகாம்களிலும், நண்பர்கள் வீடுகளிலும் பல்லாயிரக் கணக்கானோர் தங்கியிருக்கின்றார்கள். இவர்கள் முழுமையாக மீள்குடியயேற்றப்படுவதற்கும் அவர்களுக்கு மறுவாழ்வு வழங்குவதற்கும் அமைச்சுடனும், அரசாங்கத்துடனும், சர்வதேசத்துடனும் பேசுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்றோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அரசியல் தீர்வு ஒன்று காணப்படுவதற்கான அவசியம் இருக்கின்றது என்ற பொழுதிலும், முதலாவதாக அவலப்படும் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அதற்காக எமது அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாலும் அரசாங்கத்துடனும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பதற்காக நாம், இங்கு வருகின்ற சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு சொல்லியிருக்கின்றோம். நாடாளுமன்றத்தில் எமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கின்றோம்.

ஆகவே எமது பிரச்சினைகள் ஏராளமானவை. எமது மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும். அகதி மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம் முழுமையாக கிடைக்க வேண்டும்.

அதற்கு அப்பால் எமது இனத்தினுடைய பிரச்சினை தீர்க்கப்படவேண்டும். இந்தநல்லெண்ண சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துமாறு அரசாங்கத்துக்கு நாங்கள் அழைப்பு விடுத்திருக்கின்றோம். எமது இனப்பிரச்சினைக்கான தீர்வை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும்படியும் கேட்டிருக்கின்றோம். என்றார்.

### விநாயகமூர்த்தி எம்.பி

இந்த நிகழ்வின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அ. விநாயகமூர்த்தி:-

எமது மக்கள் அனைத்தையும் இழந்து அவல வாழ்வு வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். இனி எமது மக்கள் இழப்பதற்கு ஒன்றுமில்லை. முள்கம்பி வேலிகளுக்குள் வாழ்ந்து அதில் ஒரு பகுதி மக்கள் மீண்டிருக்கின்றார்கள். ஐ.சி.ஆர்.சியின் அறிக்கையின்படி இரண்டு லட்சத்து 50 ஆயிரம் வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

மீள்குடியயேற்ற அமைச்சர், பிரதி அமைச்சர், பாரம்பரிய கைத்தொழில் அமைச்சர் ஆகியோர் இந்த மேடை யில் அமர்ந்திருக்கிறீர்கள். உங்களிடம் நாம் கேட்கின்றோம். யுத்தம் முடிந்த பின்னரும் அதியுயர் பாதுகாப்பு வலையங்கள் தேவையா? உடனேயே அகற்றி விடுங்கள். அதனால் பல்லாயிரக்கண்கான மக்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். பொறுப்பாகவுள்ள அமைச்சர், பிரதி அமைச்சர் உடனடி நடவடிக்கை எடுத்து அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர அனுமதிக்க வேண்டும். அது உங்கள் பொறுப்பாகும்.

வலி. வடக்கிலே 90 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஒரு லட்சம் பேர் அங்கிருந்து வெளியேறினார்கள். அவர்களுக்கு இன்னமும் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை. எனவே இனியும் காலதாமதத்தை ஏற்படுத்தாது அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக் குடியேற்ற நடவடிக்கை எடுங்கள். - என்றார்.

இந்த நிகழ்வின் போது மீள்குடியேற்ற அமைச்சர், பிரதி அமைச்சர் விநாயமூர்த்தி முரளிதரன், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரசு கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் ஆகியோர் உரைகளை நிகழ்த்தினர். (ஐ-14-15)

# உயர்பாதுகாப்பு வலயங்கள் படிப்படியாக தளர்த்தப்படும்

## வேலணையில் பிரதியமைச்சர் தகவல்

யாழ்ப்பாணம்,டிசெ.23

உயர் பாதுகாப்பு வலயங்கள் அனைத்தும் கட்டம் கட்டமாகத் தளர்த்தப்பட்டு மக்கள் விரைவில் மீள்குடியமர்த்தப்படுவார்கள்.

அதற்காக ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றோம்.

மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வேலணை பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிப் பொருள்கள் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த 30 வருடங்களாக கொடிய யுத்தத்துக்குள் சிக்குண்டு நாங்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துக் கொண்டிருந்தோம்.

தமிழ் மக்கள் ஒவ்வொருவரதும் மனங்களில் துயரங்கள் ஆழமாகப் பதிந்துள்ளன. முகங்களில் மலர்ச்சியைத் தொலைத்துவிட்டு நிற்கிறார்கள்.

இனிவருகின்ற எதிர்காலச் சந்ததியினருக்கு இத்தகைய அவலங்கள் ஏற்படக் கூடாது. அவர்கள் சிறந்த சமூகமாக வாழ்வதற்காக அனைத்து அரசியல் கட்சிகளும் இன, மத வேறுபாடின்றி ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்தத்தால் 48 ஆயிரம் பேர் மெனிக்பாம் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 72ஆயிரம் பேர் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாது அல்லற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இதே போல் 52ஆயிரம் முஸ்லிம் மக்கள் இடம் பெயர்ந்து அல்லற்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

முப்பது வருடங்களாக நாம் இழந்ததை 3.வருடத்தில் பெற்றுவிடமுடியாது. வடக்கு - கிழக்கில் கட்டியெழுப்ப சுமார் 10 வருடங்களாவது வேண்டும்.

இன்றைய இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கலந்து கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயக மூர்த்திக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் கருணா அம்மானுக்குமிடையில் முரண்பாடுகள் இருப்பதாக வெளியில் உள்ளவர்களிடம் ஒரு கருத்து உள்ளது.

ஆனால் என்னுடைய அரசியல் நகர்வுகள் தொடர்பான சந்தேகங்களை நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, விநாயகமூர்த்தி ஆகியோரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வேன் என்றார்.

இந்த நிகழ்வு வேலணை பிரதேச செயலர் மு.நந்த கோபாலன் தலைமையில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் நடைபெறுவதற்கு ஏற்பாடாகியிருந்த போதும் முற்பகல் 11.30 மணியளவிலே ஆரம்பமாகியது.

இதில் மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ண வீரக்கோன் நாடாளுமன்ற உறுப்பினர்களான அப்பாத்துரை விநாயக மூர்த்தி, சில்வேஸ்திரி அலன் ரீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 56 குடும்பங்களுக்கு இந் நிகழ்வில் உதவிப்பொருள்கள் வழங்கப்பட்டன.

(ஐ-9-15)

# டயருக்கு காற்று நிரப்பிய வேளையில் அது வெடித்ததில் குடும்பஸ்தர் பலி!

கண்டி,டிசெ.23

லொறி டயர் ஒன்றுக்கு காற்று நிரப்பிக் கொண்டிருந்த நபரொருவர் அந்த டயர் திடீரென வெடித்ததால் பரிதாபகரமாக மரணமானார் என்று ஹங்குராங்கெத்த பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி, தென்னக்கும்புர பிரதேசவாசி யான காமினி ரத்னாயக்க (வயது-51) எனும் இரு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு மரணமானார்.

இவர் வேறொருவருடன் சேர்ந்து அதிகாரிகம பிரதேசத்தில் 'கராஜ்' ஒன்றை நடத்தி வந்தார். கடந்த ஞாயிற்றுக் கிழமை டயருக்குக் காற்று நிரப்பிக் கொண்டிருந்த வேளையிலே இந்த அனர்த்தம் நிகழ்ந் துள்ளது.

விபத்து நடந்தவுடன் உடனடியாகப் பேராதனை போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காமல் அவர் உயிரிழந்தார்.

ஹங்குராங்கெத்த பொலிஸ் பொறுப்பதிகாரி ஜே. [illegible] தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன. (ஒ-5)

# இலங்கை கடவுச் சீட்டுக்களை புதுப்பிக்க மிலானோ நகரில் புதிய பணிமனை திறப்பு

கொழும்பு,டிசெ, 23

இத்தாலி நகரில் வாழும் இலங்கையர்கள் தமது இலங்கைக் கடவுச் சீட்டுக்களை அங்கேயே புதுப்பித்துக் கொள்ளக் கூடிய வகையில் மிலானோ நகரில் புதிய பணிமனை ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது. புதுப்பிப்பதற்கான கட்டணம் 15 யூரோக்கள் ஆகும்.

இத்தாலியில் இலங்கை கடவுச் சீட்டுக்களை புதுப்பிப்பதற்காக இடைத்தரகர்கள் மூலம் ரோமில் உள்ள இலங்கைத் தூதுவர் பணிமனைக்குச் செல்ல வேண்டியிருந்ததுடன் அதற்கான சராசரி செலவு சுமார் 100 யூரோக்களாக இருந்தன.

சுமார் 15 இடைத்தரகர்கள் இந்த வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தனர். எனவே மிலானோ நகரில் திறக்கப்பட்டுள்ள பணிமனையால் அவர்களது வியாபாரம் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாற்றுவலுவுடைய குடும்ப விவரம் திரட்டல்

தென்மராட்சி பிரதேசத்தில் மாற்று வலுவுடைய குடும்பத் தலைவருடன் ஐந்துக்கு மேற்பட்ட அங்கத்தவர் களைக் கொண்ட குடும்பங்களின் விவரங்கள் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினரால் திரட்டப் படுகின்றன.

இவ்வாறான குடும்பங்கள் பிரதேச செயலக சமூக சேவை கள் பிரிவில் பெயர்களைப் பதிவு செய்யுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (ஒ-207)


### துளிர்கள் உள சமூக மேம்பாட்டு நிறுவன அறிவித்தல்

*2011 ஆம் ஆண்டுக்கான புதிய தொண்டர்களை இணைத்தல்*
**சேவை மனப்பான்மையுள்ள அனைவரும் விண்ணப்பிக்கலாம்**
வயது உங்களுக்கு ஒரு தடையல்ல

* ஒவ்வொரு D.S. பிரிவுகளிலுமுள்ள கிராம மட்டங்களில் குடும்ப ஒற்றுமையை முன்னெடுக்கும் முக்கிய பணியில்....
* எமது துளிர்களோடு இணைந்து சேவையாற்றுவதற்கு ஆர்வமுள்ள தொண்டர்களை (Volunteer) இணைக்கவுள்ளோம்.
* பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம்! என்றில்லாமல் நீங்களும் சமூகத்திற்கு ஏதோ ஒரு வழியில் உதவினோம் என்ற மனத்திருப்தியில் வாழ்வைத் தொடரலாமே.....
* உங்கள் ஆற்றலை விருத்திசெய்து கொள்ள! சமூகத்துடனான உங்கள் உறவை மேம்படுத்திக் கொள்ள!
* உங்கள் ஊர்களிலே உங்களுக்கான சேவைகள் தொடர உங்களோடு இணைந்து நாங்கள் வழிகாட்டுகின்றோம்.

(* ஆர்வமுள்ள ஆண், பெண் இரு பாலரும் உங்கள் சுய விவரங்களைD.S., G.S பிரிவுகளைக் குறிப்பிட்டு 31.12.2010 இற்கு முன்பு அனுப்பி வையுங்கள்)

இல. 30, கப்பாஸ் லேன்,
திருநெல்வேலி. *(சி/574011)* இயக்குநர் துளிர்கள்.


## மரண அறிவித்தல்கள்

### *சிதம்பரப்பிள்ளை கனகசபை*



துன்னாலை மத்தி, கரவெட்டியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை கனகசபை நேற்று (22.12. 2010) புதன்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் பத்மாசனியின் அவர்களின் அன்புக் கணவரும், வைத்தியகலாநிதி நிர்மலா, சிவநேசன் (களஞ்சியப் பொறுப்பாளர், Eurovil), கௌசலா (ஆசிரியை , ஞானாசாரியார் கல்லூரி), சிவபாலன் (பொறியியலாளர், Elephant House) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2010) வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தியான்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

துன்னாலை மத்தி,
கரவெட்டி. *(சி/574032)* தகவல்: குடும்பத்தினர்.

### *வைத்தி வீரசிங்கம்*



கற்பக்குணை, உடுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் வைத்தி வீரசிங்கம் நேற்று (22.12. 2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தி - சிந்தாமணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தப்பு - செல்லம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகனும், ராசமலரின் அன்புக் கணவரும், புஸ்பநாதன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சகாயராஜா மற்றும் சாந்தலூசியா (டென்மார்க்), சாந்தகுமார் (பிரான்ஸ்), செபக்குமார் (அனிஸ்ரன் - பிரான்ஸ்), ஜெயக்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (23.12.2010) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு செபமாலை மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில் வடக்கு,
உடுவில். *(107830)* தகவல்: குடும்பத்தினர்.

### *திருமதி பரமேஸ்வரி சிவநேசன்*



சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சிவநேசன் நேற்று (22.12.2010) காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவநேசன் சங்கீத ஆசிரியரின் மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சிதம்பரவல்லி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற தில்லைநாதன் தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற கைலேஸ்வரி மற்றும் ஸ்ரீசண்முகநாதன் ஆகியோரின் சகோதரியும், திருமதி ஜெயதேவி கிருஷ்ணசாமி, கமலாதேவி, சிவதாசன், கௌரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2010) மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டுப்பனை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

சண்டிலிப்பாய் வடக்கு *(சி/574028)* தகவல் ஸ்ரீசண்முகநாதன் (சகோதரன்)

## யாழ்.போதனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்துவதற்கு உடனடி யாகத் தடை விதித்த வைத்தியசாலைப் பதில் பணிப்பாளர், எஸ்.ஸ்ரீ பவானந்தராஜா, அவை எப்படி வைத்தியசாலைக்கு வந்தன என்பது குறித்து விரிவான விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளார்.

களஞ்சியத்தில் இருந்து வைத்திய விடுதிக்கு அனுப்பப்பட்ட சேலைன் மருந்துப் போத்தல் ஒன்று பழுதடைந்திருந்ததை தாதி ஒருவர் பார்த்ததை அடுத்து இந்த விடயம் வெளிச்சத்துக்கு வந்தது. "சுமார் ஒரு மாதத்திற்கு முன்னரே இவ்வாறான ஒரு முறைப்பாடு எமக்குக் கிடைத்தது. அதனை அடுத்து அந்தத் தொகுதியில் இருந்த அனைத்து சேலைன்களையும் பயன்பாட்டுக்கு விடவேண்டாம் என்று உத்தரவிடப்பட்டிருந்தது. எனினும் அவற்றில் ஒன்று நேற்று மீண்டும் வைத்திய விடுதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. உடனடியாக அது எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது" என்று பதில் பணிப்பாளர் உதயனுக்குத் தெரிவித்தார்.

சேலைன் போத்தல்களின் திகதிகள் காலாவதியாகிய போதும் அவை பழுதடைந்திருப்பது ஆபத்தான விடயம் என்று மருத்துவ வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

குறித்த தொகுதியில் 2000 போத்தல் சேலைன்கள் அனுப்பப்பட்டிருந்தன என்றும் அவற்றில் 300 முதல் 400 வரையான போத்தல்கள் மட்டுமே எஞ்சியிருந்த நிலையில் நேற்று அவற்றைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டிருந்தது என்றும் உதயனுக்குத் தெரியவந்தது.

இலங்கை மருந்துக் கூட்டுத்தாபனத்தின் மருந்துப் பொருள்கள் விநியோகப் பிரிவே அரச வைத்தியசாலைகளுக்கு உரிய மருந்துகளை விநியோகித்து வருகின்றது. அவ்வாறு விநியோகிக்கப்படும் மருந்துகளில் அதற்கான இலட்சினை பொறிக்கப்பட்டிருக்கும். குறிப்பிட்ட இந்தத் தொகுதி சேலைன் மருந்துகளில் அந்த இலட்சினை பொறிக்கப் பட்டிருக்கவில்லை.

"அது குறித்து மருந்து விநியோகப் பிரிவின் அதிகாரியிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, கூட்டுத்தாபனத்திடம் கையிருப்பு இல்லாத சமயங்களில் அவசரத்திற்காக வேறு மருந்தகங்களில் கொள்வனவு செய்து அனுப்பும் நடைமுறை இருப்பதாகவும் இந்த மருந்துகளும் அவ்வாறு வந்து சேர்ந்தவையாக இருக்கலாம் என்றும் தெரிவித்தார்கள். எனினும் அது தொடர்பான விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்படும்" - என்றார் பதில் பணிப்பாளர் எஸ். ஸ்ரீ பவானந்தராஜா.

Dextrose எனப்படும் சேலைன் வகையிலேயே இந்தக் குளறுபடிகள் இடம்பெற்றுள்ளமை கண்டுபிடிக் கப்பட்டுள்ளது. இவ்வாறு பழுதடைந்த சேலைன் ஒன்று சில வாரங்களுக்கு முன்னரும் விடுதி இலக்கம் 9 இல் பயன்பாட்டுக்கு வந்த பொழுது, வைத்தியசாலையின் தொற்றுத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்தவர்களால் கண்டறியப்பட்டு பதில் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. (உ-145)

## 160 புலிச்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகதிமுகாம்களில் மக்களோடு மக்களாக வாழ்ந்து வந்த போது இந்த 160 பேரும் படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் பல்வேறுபட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்டு வந்தவர்கள் என்று பொலிஸாரின் விசாரணைகளில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இவர்கள் கைதுசெய்யப்பட்டு பயங்கரவாதப் பிரிவிடம் ஒப் படைக்கப்பட்டனர். பாதுகாப் புச் செயலரின் உத்தரவுப்படி இவர்கள் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வந்தனர்.

தடுப்புக் காவல் காலம் நேற்றுடன் முடிவடைந்ததால் பயங்கரவாத விசாரணைப்பிரிவினர், இவர்களை நேற்று கொழும்பு மேலதிக நீதிமன்ற நீதிவான் அருணி அத்தநாயக்க முன்னிலையில் ஆஜர்படுத்தினர். இவர்களை அடுத்தமாதம் மூன்றாம் திகதிவரை தடுத்துவைத்து விசாரணை செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-சி)

## ஐ.நா. நிபுணர் குழு வருகை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர் மாநாடு நேற் றுக் காலை பத்தரமுல்லையி லுள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்றது. அமைச்சர் விமல் வீரவன்ஸ இச்செய்தியாளர் மாநாட்டுக்கு வருவார் என அறி விக்கப்பட்டிருந்தபோதி லும் அவர் வருகை தரவில்லை. அவருக்குப் பதிலாக முன்னாள் எம்.பியும், அக்கட்சியின் அரசி யல் குழு உறுப்பினருமான பிய சிறி விஜேநாயக்க கலந்துகொண்டார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

பான் கீ-மூனின் நிபுணர் குழுவை அரசின் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்கொண்டு வருவதற்கு வெளிவிவகார அமைச்சில் உள்ள சில சூழ்ச் சியாளர்கள் செயற்படுகின்றனர். இவர்களை இனங்காணவேண்டும். இவர்களை சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அரசை இன்னல்களுக்குள்ளாக்கும் சூழ்ச்சியாளர்கள் வெளி விவகார அமைச்சில் இருக்கிறார்கள். இவர்கள் ஐ.தே. கட்சிக் காகச் செயற்படுகின்றனர்.

இலங்கையில் பயங்கரவாதத்தை நாம் முற்றாகத் தோற் கடித்துவிட்டோம். ஆனால், பிரிவினைவாதத்தை நாம் தோற் கடிக்கவில்லை. உள்ளூர் பிரிவினை வாத சக்திகளும், சர்வ தேச பிரிவினைவாத சக்திகளும் இலங்கைக்கு எதிராகச் செயல் படுவதால் பிரிவினைவாதத்துக்கான அழுத்தம் தொடர்ந்து சர்வதேச ரீதியில் செயற்படுத்தப்படுகின்றது.

இந்தப் பிரிவினைவாதத்தை தோற் கடிக்காமல் இலங்கையில் உண்மையான சுதந்திரத்தை நிலைநாட்ட முடியாது.

ஐ.நாவின் மூவரடங்கிய நிபுணர் குழுவை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என இலங்கை அரசு ஏற்கனவே அறிவித் திருந் தது. அத்துடன் மக்களும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்த னர். எமது நட்பு நாடுகளான சீனாவும், ரஷ்யாவும் கூட இக்குழு நியமனத்தை எதிர்த்தன. இந்த நிலையில் நிபுணர் குழு ஜனாதி பதி நியமித்த நல்லிணக்க ஆணைக் குழுவைச் சந்திக்கவும் கலந்துரையாடவும் நடவடிக்கை எடுத்திருப்பது ஒரு சதித் திட்ட மாகும். இதை நாம் தோற்கடிக்க வேண்டும்.

பிரபாகரன் கொல்லப்பட்ட பின்னர் ஜனாதிபதி, பாதுகாப் புச் செயலாளர் உட் பட எமது படையினரை யுத்தக் குற்றங் களில் ஈடுபட்டவர்கள் எனக் குற்றஞ் சாட்டி சர்வதேச யுத்த நீதிமன்றத் துக்கு முன்னால் நிறுத்த முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன.

இங்குள்ள பலரும் இதற்கு உடந்தை யாகச் செயற்பட்டனர். இந்த நடவடிக்கைக்கு இப்போது வெளிவிவகார அமைச் சிலுள்ள சூழ்ச்சியாளர்களும் துணை போகின்றனர். - என்றார். (ஒ-சி)


### இதய பூர்வமான வாழ்த்துக்களும் ஆசிகளும்



அண்மையில் (கலாபூஷணம்) விருது பெற்ற இசைக் கலைஞர்
*வி.கே.பஞ்சமூர்த்தி*

அவர்கள் மேன் மேலும் பல விருதுகள் பெற்று இசைத் துறையில் சாகரமாக விளங்க வேண்டும் என்று நாம் நித்தமும் ஆராதிக்கின்ற நந்தாவில் மனோன்மணி அம்மனைப் பிரார்த்தித்து நல்லாசிகள் வழங்குகின்றோம்.

இவ்வண்ணம்:
பிரம்மஸ்ரீ.சபா.ஸ்ரீ.சந்தானக்குருக்கள்,
நந்தாவில்.

### வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி மானிப்பாய்

### கூறுவிலை கோரல்

எமது வலிகாமம் கொத்தணியினால் நவாலியில் நடத்தப்படுகின்ற பனம் சாராய வடிசாலையில் வடிசாலைப் பொறித் தொகுதிகள், அதனோடு இணைந்த இயந்திர உபகரணங்கள் என்பனவும் அதனோடு இணைந்த இணைப்புக்களும் திருத்தம் சேவிஸ் செய்வதற்கும், மாற்ற வேண்டிய பொருள்கள் மாற்றுவதற்கும், மாபிள் பெட்டி புனரமைப்பதற்கும் கூறுவிலை கோரப்படுகின்றது.

வடிசாலைப் பொறித் தொகுதி புதிதாக அமைத்தமை அல்லது திருத்தம் சேவிஸ் செய்தமைக்கான உறுதிப்படுத்தல் கடிதம் சமர்ப்பிக்கும் தகுதி வாய்ந்த நிறுவனங்கள் மட்டும் கூறுவிலை சமர்ப்பிக்கலாம். கூறுவிலை சமர்ப்பிக்க விரும்புவோர் இதனைப் பார்வையிட்டு வேலை செய்யவேண்டிய விவரங்களை எமது காரியாலத்தில் பெற்று வேலைக்கான கூறுவிலையையும் குறிப்பிட்டு எதிர்வரும் *14.01.2011 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு முன்னர்* ***'தலைவர், வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி மானிப்பாய்'*** *என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரிலோ ஒப்படைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.*

*(வேலைக்கான உத்தரவாதம் ஒரு வருடம் இருத்தல் வேண்டும்)*

(சி-574027)

பொதுமுகாமையாளர்,
வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, மானிப்பாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## வேதனையை விலைக்கு வாங்காத இராஜதந்திரம்

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கு ஐம்பதாயிரம்(50,000) வீடுகளைப் புதிதாக அமைத்துக் கொடுப்பது என்ற தனது திட்டத்தை இந்திய அரசு மாற்றி விட்டது. ஐயாயிரம் (5,000) வீடுகளை மட்டுமே புதிதாகக் கட்டிக்கொடுப்பது, குறித்த திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் மிகுதியை வீடுகளைப் புனரமைக்க வழங்குவது என்பது அதன் புதிய முடிவாகி உள்ளது.

இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்தியா கீச்சு மாச்சுத் தம்பளம் விளையாட்டில் ஈடுபடுவது ஒன்றும் புதிதல்ல. தமிழகத்தில் தனக்கு ஆதரவாக உள்ள மாநில ஆட்சியின் விருப்பத்தை ஆதரிப்பது போல - இங்கைத் தமிழர் விடயங்களில் தாராளமாக நலன் செய்வது போல - காட்டிக் கொண்டு, தான் வகுக்கும் வாய்ப்பாடுகளுக்கு ஏற்ப மத்திய அரசு, தன்னிச்சையாக நடந்துகொள்வதே காலாதி காலமாக நடைபெற்று வருகிறது.

ஈழத்தமிழர் விவகாரங்களில் தமிழக அரசுகளின், தமிழக மக்களின் நிலைப்பாடு ஒன்றாகவும் மத்திய அரசுகளின் நிலைப்பாடு வேறாகவுமே எப்போதும் இருந்துள்ளது. தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தால் என்ன, தி.மு.க. இருந்தால் என்ன, அ.தி.மு.க. இருந்தால் என்ன, இலங்கைத் தமிழர் பிரச்சினை மத்திய அரசுகளால் வேறுபார்வையுடன் நோக்கப்படுவதும், அதற்கேற்ற கோணத்திலேயே செயற்படுவதும் மாற்றமில்லாத ஒரே தன்மையையே காணலாம். இப்போதும் அந்த நோக்கும் போக்கும்தான்; திரைப்படங்களில் வருவது போன்று காட்சிகளும் கதை வசனங்களும் மட்டுமே வெவ்வேறாக மாறியுள்ளன.

கடந்த சுமார் முப்பது வருடங்களாக நடைபெற்ற போரினால் இலங்கையில் அதிகளவில் பாதிக்கப்பட்டவர்கள் வடக்கு, கிழக்குத் மக்கள். தமது அடிப்படையான வாழ்வாதாரங்களையே இழந்து தவிக்கும் மக்களுக்கு, இந்தியா உதவவேண்டும் என்று தமிழக அரசு சார்பில் விடுவிக்கப்பட்ட வேண்டுகோளுக் குச் செவிசாய்த்து, வடக்கு - கிழக்கில் 300 மில்லியன் (அமெரிக்க) டொலர் செலவில், வீடுகளை இழந்து இருக்க இடமின்றி தறப்பாள் மற்றும் தகரக் கொட்டகைகளில் வசிக்கும் தமிழ் மக்களுக்கு ஐம்பதினாயிரம் வீடுகளை புதிதாகக் கட்டிக் கொடுக்கப்போவதாக இந்திய மத்திய அரசு சண்டப் பிரசண்டத்துடன் அறிவித்து, இந்தத் திட்டத்துக்குரிய பயனாளிகளை இந்தியாவே தெரிவு செய்யும் நிர்மாணப் பணிகளில் இந்தியர்களே ஈடுபடுத்தப்படுவர் என்று மத்திய அரசின் சார்பில் அமைச்சர் சிதம்பரம், தமிழக முதல்வர் கருணாநிதியை நேரில் சந்தித்துத் தெரிவித்திருந்தார்.

பயனாளிகளுக்கு உரிய பணத்தை வழங்குவதற்கென யாழ்ப்பாணத்தில் இந்திய வங்கி ஒன்றின் கிளை நிறுவப்படும் என்று கூடத் தெரிவிக்கப் பட்டது. எல்லாமே கூறப்பட்டது போன்று நடைபெறும் என்று நம்பத்தக்க விதத்தில், இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தவேளை, ஆகப்பிந்தி, கடந்த நவம்பர் 27ஆம் திகதி வீடமைப்புத் திட்டத்தின் தொடக்கமாக அரியாலையில் அடிக்கல்லும் நட்டுச் சென்றார்!

இப்போது, இந்திய அரசு திடீரெனத் தட்டை மாற்றிச் செயற்பட முனைந்துள்ளது; முடிவு செய்துள்ளது. வடக்கு, கிழக்குப் பகுதிகளில் சேதமுற்ற வீடுகளைப் புனரமைப்பதற்கே முன்னுரிமை அளிக்கப்படும் என்று அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் பொருளாதார அமைச்சு அறிவித்த உட்பொருள் இந்தியாவின் நிலைமாற்றம் குறித்தே என்பது இப்போது வெளிப்பட்டிருக்கிறது.

இலங்கை அரசு விரும்பும் ஒரு விடயத்தில் - அது அரசியலாக இருக்கட்டும் அபிவிருத்தியாக இருக்கட்டும் - தான் வகுத்த திட்டத்தை கைகழுவி விடவும் தயார் என்ற நிலைக்கு இந்திய மத்திய அரசு இறங்கி வந்திருக்கிறது. தான் வகுத்த எந்தத் திட்டத்தையும் இலங்கை ஆட்சியாளர்களின் விருப்பத்துக்கு இசைவாக மாற்றவும் அது தயார் என்ற குறியீட்டின் தொடர்புள்ளியாக இந்திய அரசின் இந்த 'பல்டி'யைக் கருதலாம்.

ஒரு வல்லரசு என்று கூறும் அளவுக்கு பல வகைகளாலும் வளர்ச்சி கண்டுள்ள இந்தியா, இலங்கையுடனான உறவில் 'தாழ்ந்து வணங்கிக்' காரியம் பார்க்க முனைந்ததில் ராஜீகக் காரணம் இல்லாமல் இல்லை.

ஏற்கனவே நாம் இப்பத்தியில் தெரிவித்திருந்தது போன்று -

எதிரிநாடுகள் எனக் கருதப்படும் இந்தியாவையும் சீனாவையும் தனது இடக்கரமாகவும் வலக்கரமாகவும் கவர்ந்திருக்கும் இலங்கை, இரண்டு நாடுகளிடம் இருந்தும் தனக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொள்ளும் ஆற்றலைக் கொண்டுள்ளது.

இப்போது மேலும் பாகிஸ்தானையும் ஒரு பக்கத்தில் ஆசனம் போட்டு இருத்தியுள்ளது.

ஆகையால், மேற்கூறிய முக்கோண நாடுகளிடம் இருந்த எந்த உதவியையும் பெற்றுக்கொள்ளும் சக்தி இலங்கைக்கு உண்டு. அதேவேளை சம்பந்தப்பட்ட மூன்று நாடுகளும் தமது அரசியல்கொள்கைகளை வளைத்துக் கொண்டு நட்புறவு என்ற பெயரில் இலங்கையுடனான ராஜீகப் பணிகளை ஆற்றவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியிருக்கிறது. இதற்கும் சிறப்பு ஆற்றல், ஆளுமை, சாதுரியம், ராஜதந்திரம் என்பன தேவை என்பதும் அவை இப்போதைய இலங்கை அரசுக்கு நிறையவே உண்டு என்பதும் வேறு விசேஷம்.

இதனாலேயே, இனப்பிரச்சினை விவகாரத்தில் இலங்கை அரசுக்கு அழுத்தம் எதனையும் கொடுக்கமுடியாது என்று இந்தியா திட்டவட்டமாக ஈழத்தமிழர்களிடம் முகத்தில் அடிப்பது போன்று கூறும் நிலை உருவாகியது.

அதனை நோக்கும்போது, வீடமைப்பு விவகாரம் இந்தியாவுக்கு ஒரு சுண்டங்காய்ச் சமாச்சாரம். ஈழத்தமிழ் மக்களை நம்பவைத்து ஏமாற்றுவதால் அதற்கு எந்த நட்டமும் இல்லையே. இலங்கை அரசுடன் முரண்டு பிடித்தால் வெளியுறவுச் சக்கரத்தில், ராஜீக வட்டகையில், பல சங்கடங்களைச் சந்திக்க நேரிடும். வேதனையை விலைக்கு வாங்கவேண்டும் என்ற நியதி இந்தியாவுக்கு இல்லையே!

# தனிநாடு அல்லாத கூட்டாட்சித் தீர்வுக்கு பிரபாகரன் தயாராக இருக்கவில்லை

### எரிக் சொல்ஹெய்ம் பேட்டி

கொழும்பு,டிசெ.23

தனிநாடு அல்லாத ஒரு கூட்டாட்சித் தீர்வுக்குப் பிரபாகரன் தயாராக இல்லாததால் எமது சமாதான முன்னெடுப்பில் சவால்கள் தோன்றின.

இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் இலங்கை இனப்பிரச்சினையில் சமாதானத் தூதுவராகப் பணியாற்றிய எரிக் சொல்ஹெய்ம். நாளிதழொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

எமது சமாதான முயற்சிகளில் அமெரிக்கா அதீத ஈடுபாடு காட்டியதுடன் திருப்தியும் வெளியிட்டது. இந்தியாவும் எமக்குச் சிறந்த ஒத்துழைப்பினை வழங்கியிருந்தது. என்னைப்பொறுத்த வரையில் அமெரிக்கா இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக மறைமுக நோக்கங்கள் அற்ற நேர்மையான ஈடுபாட்டைக் கொண்டிருந்தது என்று சொல்வேன்.

சமாதான முயற்சிகள் யாவும் மிகவும் நுணுக்கமான முறையில் கையாளப்பட்டன. அமெரிக்காவின் சிறந்த ஒத்துழைப்பும் கிடைத்தது. எம்மிடமிருந்து பெற்ற தகவல்களை அவர்கள் ஊடகங்களுக்குத் தெரிவிக்கமாட்டார்களொன நாம் உறுதியாக நம்பினோம்.

ஆனால் சமாதான முன்னெடுப்பில் இரு அடிப்படையான சவால்கள் காணப்பட்டன. இதில் முதலாவது இலங்கையரின் கட்சிகளுக்கிடையிலான ஒத்துழையாமைப் போக்கு. அடுத்தது தமிழர்களுக்கான தனிநாடு அல்லாத ஒரு கூட்டாட்சித் தீர்வுக்குப் பிரபாகரன் தயாராக இல்லாமை. இதனைப் பல நிகழ்வுகள் எமக்கு உணர்த்தின என அவர் மேலும் தெரிவித்தார். (க)

# ஆசிரியப்பணியில் இணையும் அனைவருக்கும் ஒரு வருட காலத்துக்குக் கட்டாயப் பயிற்சி

### கல்வி அமைச்சருக்கு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு,டிசெ.23

எதிர்காலத்தில் ஆசிரியப் பணியில் இணையும் சகலரும் நியமனத்தின் முன் கட்டாயமாக ஒரு வருட கால கற்பித்தல் பயிற்சியில் ஈடுபடுத்தப்படவேண்டும். அத்தகைய பயிற்சியைப் பெறாதவர்களுக்கு நியமனம் வழங்கப்படக்கூடாது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கல்வியமைச்சர் பந்துலகுணவர்த்தனவுக்கு மேற்கண்ட அறிவுறுத்தல் விடுத்துள்ளார் என கல்வியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

அடுத்த வருடம் முதல் இந்தக் கட்டாயப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படும். ஆங்கில மொழி மூலம் கற்பிப்பதற்கான பட்டதாரி ஆசிரியர்கள் 554 பேர் சம்பந்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். எனினும் அவர்கள் நியமனம் பெற்ற பின் அதில் ஏராளமானவர்கள் ஆங்கிலத்தில் கற்பிக்கும் திறனற்றவர்களென அதிபர்களும் பெற்றோர்களும் கல்வியமைச்சிடம் முறையிட்டுள்ளனர். அத்தகைய முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே ஜனாதிபதி இந்தக் கட்டாயப் பயிற்சி நெறியை அறிமுகப்படுத்துமாறு பணித்துள்ளார்.

அண்மையில் ஆங்கில மொழி மூலம் பரீட்சைக்கு சுமார் 8 ஆயிரம் பட்டதாரிகள் தோற்றினர். அதில் 4 ஆயிரம் பேர் சித்தியடைந்தனர். அவர்களுள் 554 பேர் நேர்முகப் பரீட்சையில் தெரிவாகினர். நியமனம் பெற்ற பின் அவர்களில் அநேகமானோர் ஆங்கில மொழி மூலம் கற்பிக்க முடியாத நிலையில் நியமனக் கடிதங்களை அமைச்சில் திரும்ப ஒப்படைத்து விட்டனர்.

கொழும்பின் அயலிலுள்ள பிரபல பாடசாலைகளில் நியமனம் பெற்ற இத்தகைய ஆசிரியர்களுக்கு அந்தப் பாடசாலைகளின் மூலமாகவே கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மூலம் கற்பித்தல் பாடநெறியொன்று நடத்தப்பட்டது.

நேற்றுமுன்தினம் கல்வியமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற வித்தியா பீட டிப்ளோமா தகுதி பெற்ற ஆசிரியர்களுக்கும் மௌலவி ஆசியர்களுக்கும் நியமனக் கடிதங்களை வழங்கும் வைபத்தில் கலந்துகொண்டு உரை யாற்றிய போதே கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன மேற்கண்ட தகவல்களைத் வெளியிட்டார்.

இந்த வைபவத்தில் 364 வித்யா பீட டிப்ளோமா பெற்றவர்களுக்கும் பொலிஸ் சேவையிலிருந்து ஆசிரிய சேவையில் இணைந்து கொண்ட 18 பேருக்கும் மௌலவி ஆசிரியர்கள் 21 பேருக்கும் நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டன. (ம-5)

# பல்கலை. அனுமதி விண்ணப்பத்தில் மாற்றங்கள் செய்ய அனுமதிக்கப்படும்

### மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் அறிவிப்பு

கொழும்பு,டிசெ.23

அடுத்த வருடத்துக்கான பல்கலைக்கழக அனுமதிகளுக்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் விண்ணப்பதாரி ஏதாவது மாற்றங்கள் செய்ய விரும்பினால் அதற்கு அனுமதியளிக்கப்படுமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

அதற்கமைய விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின் ஒரு மாத காலத்துக்கு அந்த விண்ணப்பங்களில் தேவையான மாற்றங்களைச் செய்ய விண்ணப்பதாரிக்கு அனுமதியுண்டு.

விண்ணப்பித்த பாடநெறிகளின் மாற்றம், தெரிவு செய்த பல்கலைக்கழகத்தில் மாற்றம் போன்றவற்றை இக்கால எல்லைக்குள் விண்ணப்பதாரி செய்து கொள்ளலாம்.

விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் ஏராளமான மாணவர்கள் தரப்பட்ட அறிவுறுத்தல்களை சரியாகப் பின்பற்றாததாலும் தான் தகுதி பெற்றுள்ள பாடநெறியை சரியாகத் தேர்வு செய்யாத படியாலும் அவர்களது அனுமதியில் பல்வேறு குளறுபடிகள் ஏற்படுகின்றன.

இதன் காரணமாக கடந்த காலங்களில் பல மாணவர்கள் தமது அனுமதிகளை இழந்துள்ளனர். அதனைக் கருத்தில் கொண்டே இம்முறை மாற்றங்களைச் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார். (ம-5)

## நாளை

| | | |
|---|---|---|
| மார்கழி 09 | | 24.12.2010 வெள்ளிக்கிழமை |
| திதி: | : | திருதியை மு.ப.10.25 வரை |
| நட்சத்திரம் | : | பூசம் பி.ப.02.49 வரை |
| [illegible] | : | [illegible] |
| [illegible] | : | [illegible] |

## தெய்வீகத்தை அடையும் வழி

மனிதர்கள் பல்வேறு சாதனைகளைச் செய்கிறார்கள். ஆனால் அந்தச் சாதனைகள் ஊடாக அவர்கள் கடவுளை அடைய முடியாது. சரியான பாதையைக் காட்டுபவர்கள் ஒருவரும் இல்லாதபடியால் இன்றய மனிதன் இந்த உண்மையை உணர முடியாமல் இருக்கிறான். இந்தப் பாதைகள் எதுவும் கடவுளை அடைய ஒருவனுக்கு உதவி செய்யமாட்டாது. கடவுளை எப்படி அடைவது? கடவுள் உன் மீது அன்பைச் சொரிவது போல, உன்னுடய அன்பை மற்ற எல்லோருடனும் நீ பகிந்து கொள்ள வேண்டும். சமத்துவத்தைக் கொண்டுள்ள எல்லோர் மீதும் கடவுள் தனது அருளைப் பொழிகிறார். எல்லோருடனும் இங்கே உள்ளது ஒன்று என்ற தன்மையை அனுசரித்து உனது அன்பைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். அப்படி என்றால்தான் நீ கடவுளை அடையமுடியும். கடவுளை அடைவது என்பது கடவுள் உன்னில் இருந்து வேறானவர் என்பதைக் குறிக்கவில்லை. அவர் உன்னிலிருந்தே பிரத்தியட்சமாவார். பிரதிபலிப்பு, எதிரொலி, தாக்கம் வெளியில்தான். ஆனால் நிதர்சனம் உள்ளேதான். அதுதான் மூலாதாரமான அடிப்படை. இதை ஒருவரும் புரிந்து கொள்ள முயற்சிப்பதில்லை. தெய்வீக கட்டளைகளின் படி நடந்துகொள். அப்படி என்றால் நீ நிச்சயமாக தெய்வீகத்தை அடைந்து விடலாம்.



சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Security 360⁰ & Premises Services, 122/26A, Lake Edge, Wet Park Road, Attidiya, Sri Lanka**

We have appointed S.Ganendrarajah of No-958/41, K.K.S. Road, Jaffna as our Area Coordinator for Jaffna / Killinochchi & Mannar districts.

The under signed may be contacted for any futher clarification/ information if required Security 360⁰ & Permises Services.

Capt. S. K. Ranathunga C.E.O


## மறக்க முடியாத ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 13 ★ 01 ★ 1932



உதிர்வு 16 ★ 12 ★ 2005

திதி: அபரபட்ச பிரதமை-22.12.2010

அமரர் **முருகேசு தாமோதரம்பிள்ளை**

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

எங்கள் குல தெய்வமே!
ஆண்டுகள் ஐந்து போனதென்று
எண்ணிப் பார்க்க முடியவில்லை
இன்றுவரை எம்முடனே இருக்கின்றாய்
என்ற நினைவில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்
உங்கள் பாதையில், உங்கள் வழிகாட்டலில்
எங்கள் வாழ்க்கைப் பயணம் ஓடிக்கொண்டிருக்கின்றது.

"கோகுலம்"
சங்கத்தானை,
சாவகச்சேரி. (574021)

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மைத்துனி மற்றும் உறவினர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி காந்திமதி செல்வத்தம்பி



புலோலி கிழக்கு, கணையந் தோட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி காந்திமதி செல்வத்தம்பி புலோலியில் நேற்று (22.12.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் தம்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற வழக்கறிஞர் மாணிக்கம் செல்வத்தம்பியின் அன்பு மனைவியும் கலாபூசணம் மாணிக்கவாசகர், சிறிஸ்கந்தராசா (UK), பத்மாவதி, நவரத்தினராசா (Canada), தருமராசா (Holand), ஆனந்தநடராசா, குலராசா (Australia), துரைராசா (Lankem), கணேசராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2010) வியாழக்கிழமை புலோலியில் பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
(கி/573649) மாணிக்கவாசகர் (மகன்).

### முத்துக்குமாரு கந்தையா

(ஓய்வுபெற்ற கூட்டுறவு ஆணையாளர்)



தொல்புரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமான முத்துக்குமாரு கந்தையா நேற்று முன்தினம் (21.12.2010) செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் சாரதாவின் அன்புக் கணவரும் ஜெயராணி (வசந்தா - கனடா), வனஜா (கனடா), சுதாகரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் வெங்கடேஸ்வரதாசன் (ஈசன் - கனடா), மனோகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் கேதா (கனடா), நிமால் (கனடா), அஜந்தா (கனடா), கிஷோன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் பாக்கியம், செல்லப்பா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2010) வியாழக்கிழமை கனடாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

M.Kandiah,
411-30, Aurora Crt,
Scarborough ONT,
M1W2M3, Canada.
0014165021393 (107817)

தகவல் :
தி.சாரத்தினர்
(தொல்புரம் கிழக்கு)
(பெறாமகன்)

## மைதானத்துக்கு அரச காணியை பெற்றுத்தரக் கோரிக்கை

கோண்டாவில், டிசெ.23

கோண்டாவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகத்தினர் அப்பகுதியிலுள்ள அரச காணியை விளையாட்டு மைதானமாகப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவை நேற்றுச் சந்தித்த சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அங்கத்தவர்கள் மேற்படி கோரிக்கையை விடுத்தனர்.

அரச காணிக்குரிய அமைச்சுடன் தொடர்புகொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் நிலைய நிர்வாகிகளிடம் தெரிவித்தார். (ஓ-135)

## பண்ணாகத்தில் முன்பள்ளி சிறார்களின் கலைவிழா நாளை

சுழிபுரம், டிசெ.23

வலிகாமம் மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கம் நடத்தும் முன்பள்ளி சிறார்களின் கலைவிழா, பண்ணாகம் அம்பாள் கலைமன்ற கலாசார மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் சங்கத்தலைவி செல்வி இ.சத்திய குமாரி தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வலி. மேற்கு பிரதேச சபைச் செயலாளர் சு. புத்திசிகாமணியும் சிறப்பு விருந்தினர்களாக சி.குகனேசன், செ. வைத்தியநாதன், செல்வி ம.சுபோதினி, திருமதி பா.புஷ்பராணி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினராக திருமதி இ.பொன்மலர் கலந்து கொள்ளவுள்ளார். கலை நிகழ்ச்சிகள் நடைபெற்று பரிசளிப்பு வைபவமும் இடம்பெறும். (ஓ-28)


### தவறிவிட்டது

19, குவாறி வீதி, தெஹிவளை எனும் விலாசமுடைய (651731232v) எனும் இலக்கமுடைய திருஞானலிங்கம் புருஷோத்தமன் என்பவருடைய NIC, Job IC, லைசன்ஸ் என்பன குளப்பிட்டிச் சந்திக்கும் - ஆனைக்கோட்டைச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கொக்குவில் சந்தியிலுள்ள ஷாருஜன் கொமினிகேஷனில் கொடுத்து உதவவும்.

தொடர்பு:-071 8431908, 077-9084779, 021 321 6668.

### வேலை ஆள்கள் தேவை

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள NET CAFE (கணனி அறிவுள்ள பெண்), Fancy & Stationary ஆகியவற்று நிறுவனங்களுக்கு ஆண், பெண் இருபாலரும் தேவை.

தொடர்பு:-0772557020.

### German Swiss மொழிகள்

German, Swiss மொழி வகுப்புக்கள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றது. ஜேர்மனியில் படித்து வந்த ஆசிரியராலும் புத்தகம் மற்றும் CD வினாக் கொத்துனும்.
German Institute. 10 Palaly Road Jaffna.
T.P. 0771604823

### மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட 39 வயது நிரம்பிய M.A படித்த இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த தற்சமயம் கனடாவில் வசிக்கும் பெண்ணுக்கு கல்வித் தகைமையுடைய வடமாகாணத்தைச் சேர்ந்த வரன் விரும்பத்தக்கது.

தொடர்பு: 021 2220459
0719709498
கனடா: 001469089941

### வான் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 61 - XXXX ஹைஏஸ்வான் விற்பனைக்குண்டு

தொடர்பு:-0776332926

### தவறிவிட்டது

கோப்பாய் தெற்கு, கோப்பாய் என்னும் முகவரியைச் சேர்ந்த ஜெ. ஜெயதாசன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (682221887v), சாரதி அனுமதிப்பத்திரம் அடங்கிய பேர்ஸ் கிளிநொச்சி - யாழ்ப்பாணம் இடையில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் 07[illegible] என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.


## துயர் பகிர்கின்றோம்



யா/நுணாவில் கிழக்கு, அமிர்தாம்பிகை வித்தியாலய அதிபர் க. சண்முகதாஸ் அவர்களின் பாசமிகு தந்தை

அமரர் சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

அவர்கள் 20.12.2010 அன்று இறைவனடி சேர்ந்ததையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர் சங்கம், தென்மராட்சி.

## மரண அறிவித்தல்கள்

### சின்னையா சுப்பிரமணியம்



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சுப்பிரமணியம் 19.12.2010 ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் காலமானார்.

அன்னார் சின்னையா - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், சின்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சிவராசா, புவனேஸ்வரி மற்றும் செல்வரத்தினம் (லண்டன்), செல்வராணி ஆகியோரின் தந்தையும் இராசலட்சுமி, சந்திரன் ஆகியோரின் மாமனாரும், ஜானி, நிசான், நிதுரா, ரவிசங்கர் - சர்மிளா, சயித்தா, சிந்துஜா ஆகியோரின் பேரனும் டினோஜனின் பாட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.12.2010) வெள்ளிக்கிழமை மு.ப.11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாவற்குழி பிண முருங்கை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை வீதி,
நாவற்குழி. (107683)

தகவல்:
க. சந்திரன் (மருமகன்).

### இராமசாமி உமாரேகா (ரேகா)

(வணிகபீட மாணவி, யாழ். பல்கலைக்கழக வெளிவாரி)



D4, மருதநகர், கிளிநொச்சியைச் சேர்ந்த இராமசாமி உமாரேகா நேற்று (22.12.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் இராமசாமி - வசந்தி தம்பதியரின் அன்புப் புதல்வியும், கவிப்பிரியா (B.A) வசந்தப்பிரியா (B.A. லண்டன்), பிரசன்னா, ஜீவஸ்ரீ (1ம் வருட கலைப்பீட மாணவி, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கருணாகரன் (பட்டதாரி, உதவியாளர், பிரதேச செயலகம், வலி. கிழக்கு), விஜேந்திரன் (B.B.A லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் மாரியம்மாவின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2010) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 2 மணியளவில் தகனக்கிரியைக்காக கிளிநொச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

D4, மருதநகர்,
கிளிநொச்சி. (107814)

தகவல்:
கு. இராமசாமி (தந்தை).

### சற்குணராசா தேவரஞ்சனா



அராலி தெற்கு, மாவத்தை வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சற்குணராசா தேவரஞ்சனா நேற்று (22.12.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் நடராசா - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், சற்குணராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்பு மருமகளும், நிகேஸ் (யாழ். பல்கலைக்கழக கலைப்பிரிவு), ஆதர்ஸ் ஆகியோரின் அன்புத் தாயும் மனோரஞ்சிதன், விமலரஞ்சிதன் (லண்டன்), பாலரஞ்சனா (ஜேர்மனி), ஜெயரஞ்சனா (கொலண்ட்), கமலரஞ்சிதன் (சுவிஸ்), கிருபானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் விக்னேஸ்வரி, சசிவதனா, பவானந்தன், ரவீந்திரன், கலாரஞ்சினி, சுகன்யா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2010) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. ஒரு மணியளவில் பூநாவோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி தெற்கு, மாவத்தை வீதி,
வட்டுக்கோட்டை.
தொ.பே. 0773614009.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் பகுதியில் அதிகரிக்கும் வழிப்பறி, கொள்ளைச் சம்பவங்கள்

## பயப்பீதியில் உறையும் மக்கள்

சண்டிலிப்பாய், டிசெ.23

யாழ். மாவட்ட வலிகாமம் பகுதியில் மானிப்பாய், சுன்னாகம் பொலிஸ் பிரிவுகளில் துப்பாக்கி, கத்தி, வாள் போன்ற ஆயுதங்கள் முனையில் இரவு, பகல் என்றுபாராமல் பல இடங்களில் குற்றச் சம்பவங்கள் இடம் பெறுகின்றமையால் இப்பகுதி மக்கள் இரவில் நிம்மதியாகத் தூங்க முடியாமலும், பகலில் பெண்கள் தயக்கமின்றி நடமாடமுடியாமலும் திண்டாடுகின்றனர்.

இரு மாதங்களுக்குள் ஏழு இடங்களில் இடம்பெற்ற வழிப்பறிக் கொள்ளைச் சம்பவங்கள் மக்கள் மத்தியில் ஒருவித பீதியை ஏற்படுத்தியுள்ளன.

கடந்த மாதம் சுன்னாகம் பொலிஸ் பிரிவிலுள்ள உடுவில் தெற்கு, மடத்தடி என்னும் இடத்தில் பதிவுத் திருமணம் இடம்பெற்ற வீட்டிற்குள் இரவு நேரம் புகுந்த கொள்ளையர் கத்தி, வாள் போன்ற கூரிய ஆயுதங்களைக் காட்டிப் பயமுறுத்தி பதிவுத் திருமணம் செய்த இளம் பெண் உட்பட அங்கிருந்த ஏனைய பெண்கள் அணிந்திருந்த சுமார் 25 பவுண் தங்க நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றிருந்தனர்.

அன்றைய தினம் மானிப்பாய், ஆனந்தன் வீதியிலுள்ள வீட்டிற்கு இரவு நேரம் சென்ற கொள்ளையர் கைத்துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தி ஆறு பவுண் எடையுள்ள தங்க நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இதே போல் சங்குவேலியிலுள்ள ஆசிரியர் ஒருவரின் வீட்டிற்கு இரவு நேரம் சென்ற கொள்ளையர் ஆயுதங்களைக் காட்டிப் பயமுறுத்தி ஆசிரியரும் அவரின் தாயாரும் அணிந்திருந்த 10 பவுண் தங்க நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளார்கள்.

பட்டப்பகலில் சண்டிலிப்பாய்ப் பகுதியில், வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த பெண்ணொருவரின் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடிய கொள்ளையர், அப்பகுதி இளைஞர்களினால் துரத்திப் பிடிக்கப்பட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதேபோல் சுதுமலையிலுள்ள மாப்பியன் வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த பெண்ணின் தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அபகரித்துச் சென்றுள்ளனர்.

கடந்த வாரம் சங்கானையிலுள்ள அந்தணர் ஒருவரின் வீட்டிற்குச் சென்ற கொள்ளையர் அங்கிருந்தவர்களைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டு மோட்டார் சைக்கிளில் ஏறித் தப்பிச் சென்றுள்ளனர்.

இரு தினங்களுக்கு முன் சங்கானைப் பகுதியில் ஒரு வீட்டிற்குச் சென்ற கொள்ளையர், அங்கிருந்தவர்களைத் துப்பாக்கிமுனையில் பயமுறுத்திப் 15 பவுண் தங்க நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இவ்வாறு வலிகாமம் பகுதியில் தொடர்ந்து இடம்பெற்று வரும் கொள்ளை, வழிப்பறிச் சம்பவங்களால் மக்கள் நிம்மதி இழந்து வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(204-115)

# பட்டம் விடும் 'சீசன்' ஆரம்பம்

வடமராட்சி,டிசெ.23

வடமராட்சிப் பிரதேசத்தில் பட்டம் விடும் சீசன் ஆரம்பமாகியுள்ளது.

சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை சிறிய பட்டங்கள் தொடக்கம் ஆறு அடி உயரம் வரையிலான பட்டங்களைப் பல்வேறு வடிவங்களில் பறக்க விடுவதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

பனை, பிளாஸ்டிக் நார்கள் பட்டங்களில் இணைக்கப்பட்டு அவை வானில் பறக்கும் போது விண் நாதம் பலத்த சத்தத்தில் ஒலித்தபடி பறப்பதைக் காண முடிகிறது.

அது மாத்திரமன்றி இரவில் பறக்க விடப்படும் பட்டங்களில் மின் ஒளியும் இணைக்கப்பட்டுள்ளன. அந்த ஒளியில் பட்டங்கள் வானில் எவ்வளவு உயரத்தில் பறக்கிறது என்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

(ம-236)

# எதிர்காலத்தை பயனுள்ளதாக மாற்றியமைக்க தொழில் பற்றிய இலக்கு இருக்க வேண்டும்

## என்.டி.பி.வங்கியின் வணிக ஆலோசகர் உரை

யாழ்ப்பாணம்,டிசெ.23

இளம் சமுதாயத்தினர் தமது எதிர்காலத்தைப் பயனுள்ளதாக மாற்றியமைப்பதற்கு தொழில் பற்றிய இலக்கு இருப்பதுடன் ஆங்கில அறிவையும் வளர்க்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் என்.டி.பி.வங்கியின் வணிக ஆலோசகர் மயூரன் சிவப்பிரகாசம்.

கடந்த திங்கட்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்ற தொழில்சார் வழிகாட்டல் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

யாழ்.மாவட்டத்தில் இளம் சமுதாயத்தினர் கணினி மற்றும் தொலைபேசி போன்ற நவீன தொழில் நுட்பவியல்களுக்கு உள்வாங்கப்பட்டு சீரழிந்து போகின்றார்கள் எனப் பலதரப்பட்ட கருத்துக்கள் கூறப்பட்டாலும் அவற்றுக்கான காரணம் என்ன? தீர்மானம் என்ன என்பதை யாரும் கூறமுற்படவில்லை.

கல்வியின் பிரதான நோக்கமே தொழில்தான். ஜி.சீ.ஈ உயர்தரத்தின் பின்னரே தொழில் பற்றிய அக்கறை இருக்க வேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் 'கப்ஸ்ரோன்' நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி சிவலிங்கம் முகுந்தன் உரையாற்றுகையில்:-

அறிவுக்கு மட்டும் கல்வி என்ற நிலைமாறித் தொழிலுக்காகத்தான் கல்வி என்றாகிவிட்டது. வசதி, ஏழை என்ற வேறுபாடின்றி மாணவர்கள் தொழில்சார் கல்வியைக் கற்கலாம். அதற்காக வங்கிகள் மூலம் கடனுதவிகளும் வழங்கப்படுகின்றன - என்றார்.

இந்த நிகழ்வில் சீமா நிறுவனத்தின் விற்பனைச் சந்தைப்படுத்தல் பொறுப்பதிகாரி விதுஷன், சீமா நிறுவனத்தின் வணிக அபிவிருத்தி தொடர்பான தெற்காசியாவின் பிராந்திய முகாமையாளர் ரட்லிஸ்ரீபன், தொழில்சார் கல்வி ஆலோசகர் தியாகலிங்கம், கணாதீபன் மற்றும் தொழில் வாய்ப்பினைத் தேடும் இளைஞர், யுவதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(204-313-311)

முன்னேற்றம்.....




வழிகாட்டல்:- யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற தொழில்சார் வழிகாட்டல் கருத்தரங்கில் 'கப்ஸ்றோன்' நிறுவனத்தின் பிரதான பொறுப்பதிகாரி சி.முகுந்தன் உரையாற்றுகிறார்.
என்.டி.பி.வங்கியின் வணிக ஆலோசகர் சி.மயூரன், சீமா நிறுவனத்தின் தெற்காசியப் பிராந்திய முகாமையாளர் ரட்லி, தொழில்சார் கல்வி ஆலோசகர் தி.கணாதீபன், சீமா நிறுவனத்தின் விற்பனைச் சந்தைப்படுத்தல் பொறுப்பதிகாரி விதுஷன் ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர். (313-311)

பக்திப் பரவசம்.....



வீதியுலா:- திருவாதிரையை முன்னிட்டு நல்லூர் சிவன் கோயிலில் நேற்று தேர்ப்பவனி இடம்பெற்றது. (7)




# மூலதன நன்கொடை

யாழ்ப்பாணம்,டிசெ.23

வலி.தெற்குப் பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு 2010 ஆம் ஆண்டுக்கான மூலதன நன் கொடை வலி.தெற்குப் பிரதேச சபைக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது என்று வலி.தெற்கு பிரிவு சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.ஞானவேல்ராசா தெரிவித்துள்ளார்.

நன்கொடைக்குரியவர்கள் அலுவலகத்தில் உரிய விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி சமர்ப்பித்து உடன் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

# தேங்காய், மரக்கறிகளின் விலைகள் குடாநாட்டில் தினமும் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.23

யாழ். குடாநாட்டில் தேங்காய் மற்றும் மரக்கறி வகைகளின் விலைகள் தினமும் அதிகரித்துச் செல்வதாக நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் பெய்த கனத்த மழையால் விவசாய நிலங்களில் பயிரிடப்பட்ட மரக்கறி வகைகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அதனைவிடத் தென்னை மரங்களிலும் குறைந்த எண்ணிக்கையான தேங்காய்களே காய்க்கின்றன.

எனவே இதனால் தேங்காயின் விலை அதிகரித்துச் செல்கின்றது.

தேங்காய் ஒன்று 50 ரூபா விற்குமேல் விலை அதிகரித்துள்ளது.

அதனைவிட திருநெல்வேலிச் சந்தையில் நேற்றைய சந்தை நிலவரப்படி கத்தரிக்காய்- கிலோ 120 ரூபா, பாகற்காய்- கிலோ-140 ரூபா, பயிற்றங்காய்- கிலோ-140 ரூபா, லீக்ஸ் - கிலோ- 160 ரூபா, பூசணிக்காய்- கிலோ- 80 ரூபா, தக்காளிப்பழம் - கிலோ- 120 ரூபா, கோவா- கிலோ-160 ரூபா, பச்சைமிளகாய் - கிலோ- 350 ரூபா, வெங்காயம்- கிலோ -120 ரூபா, கீரை 1 பிடி - 40 ரூபா,

இதேவேளை குடாநாட்டு மரக்கறிச் செய்கை மழையால் பாதிக்கப்பட்டதால் தற்போது தம்புள்ளவில் இருந்தே அதிகளவிலான மரக்கறிவகைகள் எடுத்துவரப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(201-26)

# யாழ்.நகரில் கடை உடைத்துத் திருட்டு

யாழ்ப்பாணம்,டிசெ.23

யாழ். நகரில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருள்கள் சில திருடப்பட்டுள்ளன.

கே.கே.எஸ்.வீதியில் வண்ணைச் சிவன் கோயிலுக்கு முன்பாகவுள்ள வர்த்தக நிலையமே நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு திருடர்களின் கைவரிசைக்கு இலக்கானது.

வர்த்தக நிலைய முன்கதவை உடைத்து உள்ளே சென்ற திருடர்கள் அங்கிருந்த சில பெறுமதி மிக்க பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர். இது தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(201-26)

# மூடப்பட்டிருந்த ச.ச.நிலையம் மீண்டும் இயங்க ஆரம்பம்

சண்டிலிப்பாய்,டிசெ.23

பல வருடங்களாக இயங்காமல் மூடப்பட்டிருந்த நவாலி வடக்கு சனசமூக நிலையம் அப்பகுதி மக்கள் எடுத்துக் கொண்ட முயற்சியினால் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

இந்தச் சனசமூக நிலையம் மூடப்பட்டிருப்பதினால் ஏற்பட்டுள்ள நிலைப்பாடு குறித்து இப்பகுதி மக்கள் வலி.தென்மேற்குப் பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசத்திடம் எடுத்துக் கூறியதைத் தொடர்ந்தே பல வருடங்களாக மூடப்பட்டிருந்த சனசமூக நிலையம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

தற்காலிக நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டு சனசமூக நிலையம் இயங்க ஆரம்பித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(204-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மறைந்தும் மறையாத ஒளிவிளக்கு

### திருமதி நேசரத்தினம் கனகரெத்தினம்

அன்னைமடியில்: 10.03.1935

தெய்வமாக: 02.01.2010

திதி: துதியை

எங்கள் குடும்பத்தின் ஜோதியாக தலைவியாக
தாயாக எமைத்தாங்கி வையத்துள் வாழ்வாங்கு
வாழவைத்துத் தெய்வமாக இருந்த எம் தாயே!
கண்கண்ட தெய்வமே! பாசமழை பொழிந்து
வளர்த்தெடுத்த எம் தாயே!
அவனியை விட்டு நீங்கள் சென்று ஓராண்டு
ஆனாலும் அணையாத ஒளி தீபமாய் என்றும்
எம் இதயத்தினுள் சுடர்விட்டு வாழும் உங்கள் நினைவு!

இல.588/2, நாவலர் வீதி,
அரியாலை. (107745) குடும்பத்தினர்.

## நெஞ்சை விட்டகலாத முதலாம் வருட நினைவலைகள்



மலர்வு :
24.04.1952

உதிர்வு :
03.01.2010

### அமரர் வேலுப்பிள்ளை மோகனநாதன்

(முன்னாள் அதிபர், SLPS - I, யா /அராலி இந்துக் கல்லூரி)

வருடம் ஒன்று கழிந்தாலும்
தங்களின் பாச நினைவலைகள்
எம் நெஞ்சைவிட்டு நீங்காது.

பிரிவால் துயருறும் :
கலைநகர், வட்டு-வடக்கு, சித்தன்கேணி. (C-573701) குடும்பத்தினர்

## நினைவலைகள்



முதலாம் ஆண்டு
### இரங்கசாமி கதிரவேலு
மலர்வு: 01.07.1926
உதிர்வு: 03.01.2010
திதி: 23.12.2010

16 ஆம் ஆண்டு
### கதிரவேலு சிவகாமசுந்தரி
மலர்வு: 20.04.1930
உதிர்வு: 18.01.1994

கூடத்தில் கோலுவிருந்த - எம்
மாடத்து மணி விளக்குகளே
பாசமும் பரிவும் காட்டி -இவ்வுலகில்
ஈடுஇணையில்லா தம்பதியராய் வாழ்ந்தீர்கள்
உணவூட்டி கல்விபுகட்டி-எமை
வாழ்வில் ஏற்றமுற வைத்தீர்கள்
காலத்தின் கட்டளையால்-எமை
கண்ணீரில் மிதக்கவிட்டு
காற்றாகிப்போனதெங்கே
காலங்கள் விடைபெற்றாலும்-எம்
கோலங்கள் மாறவில்லை
கண்முன்னே நிழலாடும்-உங்கள்
நினைவுகள் மட்டும் என்றும் எம்முடன் உயிர்வாழும்

நெஞ்சு கனத்த நினைவுகளுடன்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கற்பொக்குணை,
கந்தரோடை, சுன்னாகம். (107715)

## ஆன்மீக நிகழ்வு

அல்வாய்,டிசெ.23

தொண்டமனாறு செல்வசந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ''முருக நாம பஜனை'' இடம்பெறும்.

முருகன் அடியார்களால் மேற்படி பஜனை வழங்கப்படவுள்ளது. (201-36)

## ஆன்மீகச் சொற்பொழிவு

அல்வாய்,டிசெ.23

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் கிருஷ்ண வழிபாடு என்றும் விடயம் பற்றி மதுரகவி கரை எம்.பி. அருளானந்தம் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார்.

(201-36)

## தெஹிவளை ஆஞ்சநேயர் ஆலயத் திருவிழா

கொழும்பு,டிசெ.23

தெஹிவளை ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயத்தின் வருடாந்த திருவிழா இன்று காலை 9 மணிக்கு கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழா இடம்பெறும்.

மறுநாள் திங்கட்கிழமை ஆஞ்சநேயரின் ஜெயந்தி விழா இடம்பெறும். அன்று காலை 6 மணிக்கு கடல் தீர்த்தம் இடம்பெறும் 9 மணிக்கு 409 சங்குகளினால் சங்காபிஷேகமும் விஷேட பூசைகளும் நடைபெறும். (311)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,டிசெ.23

யாழ்.பெரியபுலம் மகாவித்தியாலயத்துக்கு அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தப் பதவிக்கு யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த மாகாணப் பாடசாலைகளில் கடமைபுரியும் சேவை நீடிப்பில்லாத இலங்கை அதிபர் தரத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்தும், ஆசிரியர் சேவை வகுப்பு I,IIஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகுதியுடையவர்கள் விண்ணப்படிவங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி வேதநாயகம் அறிவித்துள்ளார்.

(204-313)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ23

வல்வை ஒன்றியத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வல்வை தென்மேற்கு கிராம சேவையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளன.

(ற)

## நெஞ்சம் நெகிழும் ஈராண்டு நினைவலைகள்

தாய் மடியில்
07
.
06
.
1963



இறைவன் அடியில்
23
.
12
.
2008

### சிவசுந்தரலிங்கம் கெங்காதரன்

(Staff, I.C.R.C.,Jaffna)

கடமை சுமந்து பயணித்த செல்வத்தின்
கனக்கும் இதய சோகங்களுடன்....

''கிருஷ்ணவாசா'',
கரவெட்டி மேற்கு, கரவெட்டி. (105476) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்



### அம்பலம் குணராசா

காரைநகர், கொள்ளடைப்பைப் பிறப்பிடமாகவும் காரைநகர், பொன்னம்பலம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலம் குணராசா கடந்த 19.12.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலம்- இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லமுத்துவின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான அன்னமுத்து, அப்புத்துரை ஆகியோரின் அருமைச் சகோதரனும் காலஞ்சென்ற சிவலோகராஜபுஷ்பம் (காரைநகர்) மற்றும் அற்புதமலர் (கனடா), உருக்குமணி தேவிஅம்மா (காரைநகர்), மல்லிகாதேவி (காரைநகர்), இராஜேஸ்வரி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கார்த்திகேசு (காரைநகர்) மற்றும் கணபதிப்பிள்ளை (கனடா), காலஞ்சென்றவர்களான நடராசா (காரைநகர்), பரலோகராசா (காரைநகர்) மற்றும் திருநாதன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அருமை மாமனும் தவராசா, காலஞ்சென்ற தவர்ஜனி மற்றும் தபேந்திரன், தவரஞ்சினி, மஞ்சுளா (லண்டன்), பேபிசாலினி, அஜந்தன் (கனடா), சாருஜன் (கனடா), தபோதினி, தயாபரன், தயானந்தன், தவப்பிரியா, தயாளினி, காண்டீபன், கார்த்தீபன், கஜேந்திரன், கபிலன், மயூரன் (டோகா), மயூரகா, மலர்விழி (திருகோணமலை), மலரவன் ஆகியோரின் அன்புப் பேரனும் சுபராஜ், கிருபரன், டனுஜன், கிருத்திகா, ஆதவன், நிலவன், ஆர்த்தி, நிதர்சனா, ஆரணி, டிலான் (லண்டன்), கர்னி (லண்டன்), தமிழினி, லவிசன், நிவேதினி ஆகியோரின் அருமைப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2010) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொன்னம்பலம் வீதி, காரைநகர். (107744) குடும்பத்தினர்.

### வேலுப்பிள்ளை சிவநாதன்



அச்சுவேலி, பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் கனடா, ஸ்காபரோவை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சிவநாதன் (சிவா- காவியா புடைவை மாளிகையின் உரிமையாளர், கனடா) 19.12.2010 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தர் வேலுப்பிள்ளை மற்றும் வேலுப்பிள்ளை கனகம்மாவின் அன்புமிகு மகனும் வியாபாரிமூலை, பருத்தித்துறையைச் சேர்ந்த சோமசுந்தரம்- ராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெகதீஸ்வரியின் பாசமிகு கணவரும் கலாதேவி (கனடா), கமலநாதன் (கமல்- நியூயோர்க்), கோசலாதேவி (கனடா), சத்தியநாதன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற குகதாசன் (புட்டன்) மற்றும் ஸ்ரீகந்தராசா (கனடா), யசோதா (நியூயோர்க்), புஸ்பலதா (கனடா), ரதீஸ்வரி (லண்டன்), சசிகலா (பிரான்ஸ்), நளாயினி, காந்தரூபன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் தெய்வேந்திரன் (லண்டன்), துஸ்யேந்திரராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் சகலனும் கஜனன், கீர்த்தனன்,விபூசா, காவியா ஆகியோரின் அன்பு மாமனும் சேவிதன், சுவர்ணன்ஆகியோரின் அன்புமிகு சித்தப்பாவும் தமிழீழா, தமிழினி, ஈழநிலா, துவாரகன், சபிதா, சாரூஜன் ஆகியோரின் அன்பு மிகு பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கனடாவில் (22.12.2010) புதன்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 9 மணிவரை Elgin Mills Funeral Home (1591 Elgin Mills Road East, Richmond Hill, ON L4S IM9) இல் பார்வைக்கு வைக்கப்பட்டு மறுநாள் (23.12.2010) வியாழக்கிழமை காலை 9 மணிதொடக்கம் 12 மணிவரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பழவத்தை,
வியாபாரிமூலை, பருத்தித்துறை. (10741)
வடிவேலு சோமசுந்தரம்.
021 2262 742, 021 321 0420.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாங்குளத்தில் அரச செயலகங்கள் அமைக்கும் திட்டம் விரைவில் நிறைவேறும் சாத்தியம் ஏதுமில்லை

## தகவல் தருகிறார் வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர்

கிளிநொச்சி,டிசெ.23

மாங்குளத்தில் அரச செயலகங்கள் அமைக்கும் முன்திட்டம் விரைவில் முன்னகர்த்தப் படமாட்டாது. இவ்வாறு கூறியுள்ளார் முல்லைத்தீவு - கிளிநொச்சிப் பிராந்திய ஆணையாளரும், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளருமான தி. இராசநாயகம்.

வடக்கு மாகாணத்திற்கான அரச செயலகங்கள் அமைப்பதற்காகக் காணியை வளப்படுத்தி நில அளவை செய்யப்பட வேண்டுமானால் 2 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா தேவைப்படும். ஆனால் அரசு 100 மில்லியன் ரூபாவை மட்டுமே ஒதுக்கியுள்ளது. இதனாலேயே செயலகங்கள் அமைக்கும் திட்டம் தாமதமடையக் கூடும்.

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்ட பின்னர் வடக்கு மாகாணத்திற்கான பிரதான செயலகங்கள் திருகோணமலை நகரிலுள்ள வரோதய நகரில் இருந்து செயற்பட்டன. தற்போது வடக்கு மாகாண அபிவிருத்திக்கான நடவடிக்கைகள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் முன்னகர்த்தப் படுகின்றது. இந்நிலையில் வடக்கு மாகாணத்திற்கான அரசாங்க செயலகங்கள் கிளிநொச்சியில் உள்ள பெருநிலப் பரப்பில் செயற்படுவதனூடாகத் துரித அபிவிருத்திகளை மேற்கொள்வதுடன் நிலங்களையும் அபிவிருத்திக்குப் பயன்படுத்தி இருக்கலாம். ஆனால் திருகோணமலையில் இருந்து அரச செயலகங்களை யாழ். நகரின் மையத்துக்கு மாற்றுவதனால் எந்தவித அபிவிருத்தியும் எதிர்காலத்தில் ஏற்படப் போவதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு மாகாண சபை அலுவலகங்களை வடமாகாணத்தில் மாங்குளம் பிரதேசத்திற்குக் கொண்டு செல்லப்பட வேண்டுமானால் அரசு முதற் கட்டமாக 5 ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்கி உதவ வேண்டும் எனவும் அவர் மேலும் கேட்டுக் கொண்டார். (க-302)

# மின்சாரம் பெறுவதற்கு கிளிநொச்சிக்கு அலைந்து திரியும் ஒட்டுசுட்டான் மக்கள்

முல்லைத்தீவு, டிசெ.23

ஒட்டுசுட்டான் பகுதியில் மின்சாரம் பெறவிரும்புவோர் கிளிநொச்சிக்கு அலைந்து திரிய வேண்டியுள்ளதாக இந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தற்போது ஒட்டுசுட்டான் பகுதியில் மின்சாரம் பெற விரும்புவோர் கிளிநொச்சி சென்று விண்ணப்பப் படிவத்தைப் பெறவேண்டி உள்ளது. அதனை உரியவர்கள் உறுதிப்படுத்திய பின்பு மீண்டும் கிளிநொச்சிக்குச் சென்று அதனை ஒப்படைத்தல் வேண்டும்.

கிளிநொச்சியில் இதற்கான அனுமதி வழங்கப்பட்ட பின்னரே மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதனால் இந்தப் பகுதி மக்கள் பல்வேறு போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொள்வதோடு நேரவிரயமும் ஏற்படுகின்றது. இவர்கள் தமது சொந்த வேலைகளை மேற்கொள்வதிலும் இதன் காரணமாக இடர்களைச் சந்திக்கின்றனர்.

எனவே இந்த மக்களின் நன்மை கருதி ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் பணிமனையிலோ அல்லது அதற்கென வேறு இடத்தை ஏற்பாடு செய்தோ மக்கள் அலைந்து திரியாது மின்சாரத்தைப் பெறுவதற்கு ஆவன செய்யுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் மின்சார சபையினரைக் கேட்டுக்கொள்கின்றனர். (க-500)




# நடமாடும் சேவையில் விண்ணப்பித்தும் அடையாள அட்டை கிடைக்காத நிலை

முல்லைத்தீவு,டிசெ.23

நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களுக்கு மூன்று மாதங்கள் கடந்த நிலையிலும் அவை இன்னமும் வந்து சேர வில்லையென ஒட்டுசுட்டான் மக்கள் தெரிவிக்கின்றனர்.

சுமார் மூன்று மாதங்களுக்கு முன்னர் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கான நடமாடும் சேவை நடத்தப்பட்டது. இதில் தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்காகப் பலர் விண்ணப்பங்களையும் உரிய ஆவணங்களையும் சமர்ப்பித்திருந்தனர். ஆனால் மூன்று மாதங்கள் கழிந்துவிட்ட நிலையிலும் அடையாள அட்டைகள் வந்து சேரவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் மீள்குடியமர்ந்துள்ள நிலையில் எந்தவொரு அலுவலை மேற்கொள்வதற்கும் தேசிய அடையாள அட்டை அவசியமானதாகும். அத்துடன் பிரயாணம் செய்வதற்கும் இது முக்கியமாகத் தேவைப்படுகின்றது.

ஆகவே தமக்குரிய தேசிய அடையாள அட்டை விரைவில் கிடைப்பதற்கு ஆவன செய்யுமாறு விண்ணப்பித்த மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.(க-500)

## குறைவில்லாத வெள்ள நீர்.....




நீரின் ஆதிக்கம்: அண்மையில் பெய்த பெரு மழையினால் கிளிநொச்சி கணேசபுர வீதியோரம், கச்சேரி வளாகம் ஆகிய இடங்களில் வெள்ளநீர் தேங்கிக் காணப்படுகின்றது. (405)

# வீடமைப்பு அதிகாரசபையின் மாவட்ட அலுவலகம் பல மில்லியன் ரூபா செலவில் மாங்குளத்தில்

## அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவிப்பு

முல்லைத்தீவு, டிசெ.23

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலகம் மாங்குளத்தில் பல மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது.

வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச இத்தகவலைத் தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தினைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு -கிழக்குப் பகுதிகளை மீளக்கட்டியெழுப்புவதற்கான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டுவருகிறோம்.

அந்த வகையில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தின் புனரமைப்புப் பணிகள் 90 நாள்களில் நிறைவு பெற்றுள்ளன.

அதேபோல் முல்லைத்தீவு மாவட்ட அலுவலகத்தினையும் புனரமைக்கத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

தற்போது அரசு தேசிய வீடமைப்பு அதிகார சபையின் செயற்பாடுகளை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(க-9)

# புதிய கமக்காரர் அமைப்பை நிறுவுமாறு பதவி விலகிய பொருளாளர் கோரிக்கை

முல்லைத்தீவு, டிசெ.23

முல்லைத்தீவு மாவட்டம் பேராறு கிராமத்தின் கமக்காரர் அமைப்பைப் புதிதாகத் தெரிவுசெய்ய வேண்டுமெனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

தற்போது இயங்கிவரும் இந்த அமைப்பின் செயலாளரும், பொருளாளரும் தலைவர் மீது அதிருப்தி தெரிவித்துத் தமது பதவிகளைவிட்டு விலகியுள்ளதாக இதன் பொருளாளராகப் பதவி வகித்த க.குமாரசாமி தெரிவித்துள்ளார்.

தமது பதவி விலகலுக்கான காரணங்களைத் தெரிவித்து கமநலச் சேவை பெரும்பாக உத்தியோகத்தரிடம் கடிதங்களை வழங்கியதாகவும், அவர் தற்போதைய கமக்காரர் அமைப்பைக் கலைத்து புதிய அமைப்பைத் தெரிவுசெய்வதாக வாக்குறுதியளித்த போதும் அது இதுவரை செயலுருவம் பெறவில்லையெனவும் அவர் கூறினார்.

இந்தக் கமக்காரர் அமைப்பு சீராக இயங்காததால் விவசாயிகள் உள்ளீடுகளைப்பெறுவதில் சிரமங்களை எதிர் நோக்குவதாகவும் ஆகவே இனியும் தாமதமின்றிப் புதிய கமக்காரர் அமைப்பு அமைக்கப்பட வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-500)

# நெல்சிப் திட்டத்தில் உள்ளூராட்சிச் சபைகள்

மன்னார்,டிசெ.23

வடமாகாணத்தில் 'நெல்சிப்' அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் மூன்று உள்ளூராட்சிச் சபைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

நெல்சிப் அபிவிருத்தியின் கீழ் முதலாண்டு அபிவிருத்திக்கு மன்னார் பிரதேச சபைக்கு 33 மில்லியன் ரூபாவும், நானாட்டான் பிரதேச சபைக்கு 29 மில்லியன் ரூபாவும், முசலி பிரதேச சபைக்கு 31 மில்லியன் ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

முதற்கட்டத் தெரிவில் மன்னார் நகர சபையும், மாந்தை மேற்குப் பிரதேச சபையும் தெரிவு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-302)

# முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளின் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள்

ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம்

கலைப்பிரிவு

வேலுப்பிள்ளை தர்சன்- பிசிஎஸ், சிறீதரன் சிறி வொகாசன்-3சி, அருளானந்தம் ரவிராஜ்-3சி, தங்கவேல் தவயோகி - 2சிஎஸ், தேவசேனாபதி மகீசன்-2சிஎஸ், சாந்தலிங்கம் தேவிகா- பி2சி, பாலசுந்தரம் அகிலா- 3பி, சண்முகராசா விஜோஜா- 3சி, செல்லத்துரை சுவாப்பினா-3சி, விநாயகமூர்த்தி விசித்திரா- 3எஸ், சிவராசா சுபத்திரா-பி2சி, வரேந்திரன் இந்திராதேவி- 3எஸ், நாகராசா சுகந்தினி- சி2எஸ், யோகலிங்கம் சுதர்ஸனா -3சி, பிரான்திஸ் பிரியதர்சா- 2சிஎஸ், முத்துலிங்கம் சுகிர்தன் - 2சி எஸ், சிவலிங்கம் கோகிலா- 3எஸ்.

வர்த்தகப்பிரிவு

சிவபாலன் தீபா-3எஸ்.(க-500)

# பஸ் சேவையைத் தமக்கு நீடிக்குமாறு பேராறுப் பகுதி மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு,டிசெ.23

யாழ்ப்பாணத்திலிருந்து மாங்குளம், ஒட்டுசுட்டான், முத்துஐயன்கட்டு ஊடாக கற்சிலைமடுவரை சென்று திரும்பும் பேருந்து சேவையைப் பேராறு வரை நீடிக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் இயக்கப்படும் இந்தப் பேருந்து கற்சிலைமடுவரை சென்று பிற் பகல் 2 மணிக்குத் திரும்பிச் செல்கின்றது.

இதன் சேவையினால் பயன் பெறும் இப்பகுதி மக்கள் பேருந்தின் சாரதியையும், நடத்துநரையும் வெகுவாகப் பாராட்டுகின்றனர்.

ஆனால் இந்தப் பேருந்துச் சேவையை பேராறுவரை நீடித்தால் இன்னமும் பயனுள்ளதாக விளங்குமென மக்கள் தெரிவிக்கின்றனர்.

கற்சிலைமடுவிலிருந்து பேராறு இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. அந்தக் கிராமத்திலே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் உட்படக் கிராம மக்கள் அனைவரும் பேருந்துச் சேவை இல்லாது சிரமமுறுகின்றனர். ஆகவே மேற்படி பேருந்து பி.ப.இரண்டு மணிக்கு கற்சிலைமடு பாடசாலையிலிருந்து திரும்பாது பேராறுவரை சென்று திரும்பினால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இதற்கான ஒழுங்குகளை யாழ்ப்பாணம் பேருந்துச் சாலை முகாமையாளர் மேற்கொண்டு தமக்கு உதவுமாறு பேராறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்

# பொது அறிவித்தல் - 2011

**01. படவரைஞராகப் பதிவு செய்தல் - 2011**

2011ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும், ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2011ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைச் செய்துகொள்ளவும். மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

**02. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2011**

இப் பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் 2011ஆம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவத்தினை 2010ஆம் ஆண்டு டிசெம்பர் 25ஆம் திகதிக்குள் பெற்று அதனை பூரணப்படுத்தி நல்லூர்/கொக்குவில் உப அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறு உரிய கட்டணங்களை 31.01.2011ஆம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

**03. வீடமைப்பு நகர சீர்திருத்தக் கட்டளைச் சட்டம் பிரிவு-268இன் பிரகாரமான அறிவித்தல்**

3.1 நல்லூர் பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள், மதில், மலசல கூடங்கள், குழாய்க்கிணறுகள் என்பவற்றை அமைத்தல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல் போன்றன சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமென்பதை அறியத்தருகின்றேன்.

எனவே நல்லூர் பிரதேச சபையால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து சபையின் முன்னங்கீகாரம் பெறப்படாது கட்டப்படும் மேற்படி கட்டடங்கள் யாவும் எதுவித நட்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும்.

3.2 ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் கட்டடம் கட்டி முடிக்கப்படாத பட்சத்தில் அனுமதியைப் புதுப்பித்தல் வேண்டும்.

3.3 அனுமதி பெற்றுக் கட்டடம் கட்டி முடித்தவர்கள், கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்துக்கு அறியத் தந்து உரிய அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**04. துவிச்சக்கர வண்டி, மிருகங்களின் உரிமம் பெறல்**

2011ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கர வண்டி, மிருகங்களுக்கான உரிமத்தை பங்குனி மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுச் சபையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**05. நல்லூர்/கொக்குவில் உப அலுவலக ஆதன வரி அறிவித்தல் - 2011**

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி நடப்பு வருடம் அறவிடப்பட்ட ஆதனவரி வீதத்தின் பிரகாரம் 2011ஆம் ஆண்டுக்கான ஆதனவரி அறவீடு செய்யப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2011ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை 31.01.2011ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோருக்கு அவ் வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டுக்குமுரிய வரியை அந்தந்தக் கந்தாயத்தின் முதல் மாத முடிவுக்குள் செலுத்துவோருக்குக் காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதன வரியைச் செலுத்தத் தவறின், வசிப்பிடங்களுக்கும் வெற்றுக் காணிகளுக்கும் முறையே 15% உம் ஏனைய ஆதனங்களுக்கு 20% உம் விறாந்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே தங்கள் ஆதனங்களுக் குரிய வரியை 31.01.2011ஆம் திகதிக்கு முன் அந்தந்த உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்றுச் சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். மேலும் எமது சபை எல்லைக்குள் ஆதனங்களைக் கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே கொள்வனவு செய்து சோலை வரி பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகங்களுடன் தொடர்புகொண்டு பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

**06. சூழல் பாதுகாப்பு உரிமம்**

மத்திய சூழல் அதிகார சபைத் தலைவர் 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்கத் தேசிய சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு எனக்கு வழங்கப்பட்ட, குறிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ், நல்லூர் பிரதேச சபையின் நிர்வாக பாதுகாப்புப் பிரதேசத்தில், 1533/16 இலக்க 2008.01.25ஆம் திகதிய மற்றும் 1534/18 இலக்க 2008.02.01ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகைகளில் விதந்துரைக்கப்பட்ட தொழில் நடவடிக்கைகளுக்கு அமைவாக மேற்குறிப்பிட்ட அறிவித்தலுக்கு இணங்க வியாபாரத்தை / தொழிலை நடத்துகின்ற உரிமையாளர்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்கவேண்டிய பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் நல்லூர் பிரதேச சபையின் தலைமைப் பணிமனையுடன் தொடர்புகொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற நடவடிக்கை எடுக்கவும். இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2011ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட தொழில்களை நடத்த அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதனையும் இத்தால் அறியத் தருகின்றேன். விதந்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகள் பற்றிய விவரங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல்கள் நல்லூர் / கொக்குவில் உப அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

*நல்லூர் பிரதேச சபை,*
*கொக்குவில்.*
*15.12.2010.*

(அ/573288)

**மேரியோசப் சாந்தசீலன்,**
*செயலாளர்,*
*நல்லூர் பிரதேச சபை.*

## தலதா மாளிகைக்கு புத்தர் சிலை இந்தியா அன்பளிப்பு

கொழும்பு, டிசெ. 23

புத்தர் சிலை ஒன்றை கண்டி தலதா மாளிகைக்கு அன்பளிப்புச் செய்ய இந்திய அரசு தீர்மானித்துள்ளது என கண்டி தலதா மாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

5ஆவது நூற்றாண்டின் கலை வடிவத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இச்சிலை சமய அனுஷ்டானங்களைத் தெடர்ந்து இலங்கைக்குக் கொண்டுவரப்படவுள்ளது என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தலதா மாளிகையில் அமைக்கப்பட்டிருக்கும் சர்வதேச பௌத்த நூதன சாலையில் காட்சிக்கு வைப்பதற்காகவே 16 அடி நீளமான இச்சிலை வழங்கப்படவுள்ளது. (சி)

## மார்பகப் புற்றுநோய்: வருடாந்தம் 2 ஆயிரம் பெண்கள் மரணம்

கொழும்பு, டிசெ. 23

மார்பகப் புற்றுநோய் காரணமாக வருடாந்தம் 2 ஆயிரம் பெண்கள் உயிரிழக்கின்றனர் என்றும், அவர்களின் உயிர்களைக் காப்பாற்றும் சவாலை இலங்கையின் சுகாதாரத் துறை எதிர்நோக்கியுள்ளது என்றும் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வருடாந்தம் 15 ஆயிரம் புற்றுநோயாளிகள் இனங் காணப்படுகின்றனர். இவர்களில் 25 வீதமானவர்கள் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பெண்களாவர். மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள பெண்களில் வருடாந்தம் 2 ஆயிரம் பெண்கள் உயிரிழக்கின்றனர். இவர்களில் 99 வீதமானவர்கள் 40முதல் 55 வயதிற்குட்பட்டவர்கள் எனவும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (சி)

## 5ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு: 09.02.1948

உதிர்வு: 23.12.2005



### அமரர் K.K. செல்வநாயகம் (நீர்வேலி)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட
எங்கள் குடும்ப விளக்கே!
ஆண்டுகள் ஐந்தாகி விட்டாலும்
இன்றும் உங்கள் வழிகாட்டலே
இவ்வுலகில் எம்மை வாழவைக்கின்றது.
என்றும் எமது வாழ்க்கைப் பயணத்துக்கு
தெய்வமாக விண்ணில் இருந்து வழிகாட்டுவீர்கள்
என்ற நம்பிக்கையுடன் வாழ்கின்றோம்

சுவிஸ்

(107739)

மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரன்.

## திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி கோயில் ஆதீன கர்த்தாவின்

# கண்ணீர் அஞ்சலி



சங்கானை சிவப்பிரம்மஸ்ரீ

### சிவா.நித்தியானந்த

சிவாச்சாரியாரின் மறைவு சைவ உலகிற்கே பேரிழப்பாகும். சாந்த குணமும் சிரித்த முகமும் பண்பிற்கே இலக்கணமான குருக்கள் அவர்கள் பல நூற்றுக்கணக்கான கும்பாபிஷேகம், மஹோற்சவங்களை பிரதமகுருவாக இருந்து நடத்தியதோடு, வைதீக கிரியைகளையும் சிறப்புற நடத்தி பலரின் நன்மதிப்பையும், பாராட்டையும் பெற்றவர்.

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் மட்/வீரமுனைப்பிள்ளையார் ஆலய 33 குண்ட சஹித மஹா கும்பாபிஷேகத்தை சிறப்புறத் தலைமை ஏற்று நடத்தியவர். சிவா.நித்தியானந்த சிவாச்சாரியாரின் பிரிவால் துயர்கொண்டுள்ள குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் குருக்களின் ஆத்மா சாந்தியடைய ஸ்ரீபத்திரகாளி அம்பாளின் பாதாரவிந்தங்களைப் பிரார்த்தித்து எமது கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்
தேவஸ்தானம்,
திருகோணமலை.

(107735)

'வேதாகம சூடாமணி'
சிவஸ்ரீ சோ.ரவிச்சந்திரக் குருக்கள்,
ஆதீன கர்த்தாவும் பிரதமகுருவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 198 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே தீர்வையற்ற வாகன இறக்குமதி அனுமதி

## 27 பேருக்கு இம்முறை அது இல்லை

கொழும்பு, டிசெ.23

புதிய நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 198 பேருக்கு இதுவரை தீர்வையற்ற வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்றச் செயற்பாடுகளின் அமைச்சரான திருமதி சுமேதா ஜீ. ஜயசேன ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் தீர்வையற்ற வாகன அனுமதிப் பத்திரங்களின் கீழ் வாகனங் களைக் கொள்வனவு செய்து 5 வருடங்கள் கழிந்திராத 27 நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கு இம்முறை வாகன அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவில்லையெனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இவர்களுள் 24 பேர் மாகாண சபை உறுப்பினர்களாக இருந்து இம்முறை நாடாளுமன்றத்துக்குத் தெரிவானவர்கள் எனவும் அவர்கள் மாகாண சபை உறுப்பினர்களாகப் பதவி வகித்த வேளையில் தீர்வையற்ற வாகன அனுமதியின் கீழ் வாகனங்களைக் கொள்வனவு செய்துள்ளதுடன் இன்னமும் ஐந்து ஆண்டு நிறைவடையவில்லை எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஜப்பான் யென்களின் பெறுமதி அதிகரித்துள்ளதால் வாகனங்களை இறக்குமதி செய்வதற்குப் பெருந்தொகைப் பணம் தேவைப்படும் என்பதைச் சுட்டிக் காட்டியுள்ள மேற்படி 24 பேரும் தமக்கு இம்முறை வழங்கப்படும் வாகன அனுமதிப் பத்திரங்களை வழங்க ஆவன செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர் எனவும், ஆயினும் முன்னர் வாகனங்களை இறக்குமதி செய்து ஐந்தாண்டுகள் நிறைவடைந்துள்ள நபர்களுக்கு மாத்திரமே வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளதால் இது தொடர்பாகத் தம்மால் தீர்மானம் எதையும் மேற்கொள்ள இயலாதுள்ளதாகவும் அமைச்சர் திருமதி சுமேதா ஜயசேன தெரிவித்துள்ளார்.

மேலும் மேற்படி வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரத்தின் கீழ் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தலா 50 லட்சம் ரூபா வங்கிக்கடன் வசதிள் வழங்கப்பட்டுள்ளதுடன் மேற்படிச் சலுகை மூலம் வாகனம் ஒன்றை இறக்குமதி செய்யும் சந்தர்ப்பத்தில் 18 வீத வரியைச் செலுத்த வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு நேரும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (த-22)

# ஓர் அமைச்சுக்கு ஓர் ஆலோசகர்

## அரசு தீர்மானம்

கொழும்பு, டிசெ.23

அமைச்சுக்களின் ஆலோசகர்களை நியமிக்கும் விடயத்தில் ஓர் அமைச்சுக்கு ஆலோசகர் ஒருவரை மட்டுமே நியமிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

அமைச்சொன்றுக்கு ஆலோசகரொருவர் அவசியமெனக் கருதும் பட்சத்தில் மட்டுமே அத்தகைய ஆலோசகரொருவரைக் கூட நியமிக்க முடியுமென ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க அனைத்து அமைச்சர்களுக்கும் தெரியப்படுத்தியுள்ளதாக அரச வட்டாரங்களின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் ஆலோசகரொருவர் நியமிக்கப்பட வேண்டியுள்ளதற்கான நியாயமான காரணங்கள் முன்னதாகவே அமைச்சரவைக்குத் தெரிவிக்கப்பட வேண்டுமெனவும் அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், அமைச்சுக்களுக்கு அவசியமின்றி ஆலோசகர்கள் நியமிக்கப்படுவதை தடுத்து நிறுத்தவும் செலவினங்களைக் கட்டுப்படுத்தவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மேற்படி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன்னர் நிலவிய அமைச்சரவைகளில் அமைச்சொன்றுக்கு குறைந்த பட்சமாக இரு ஆலோசகர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன் ஒரு சில அமைச்சுக்களுக்கு நான்கு ஆலோசகர்கள் என்றவாறும் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-22)

# பொலிஸ் குதிரைகளுக்கு புதிதாக இரு லாயங்கள்

## தங்காலை, அநுராதபுரம் பகுதிகளில்

கொழும்பு, டிசெ.23

பொலிஸ் குதிரைகளைத் தங்கவைத்துப் பராமரிப்பதற்குத் தங்காலை மற்றும் அநுராதபுர பிரதேசங்களில் இரண்டு குதிரை லாயங்களை அமைக்குமாறு பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

தெற்கில் மற்றும் வடமத்திய மாகாணங்களில் நடைபெறும் அரச விழாக்களின் போது பொலிஸ் குதிரைகளை எடுத்துச் செல்வதை இலகுவாக்கும் வசதியைக் கருத்தில் கொண்டு இந்த இரு புதிய குதிரை லாயங்கள் அமைக்கப்படவுள்ளதாக பொலிஸ் தலைமையகத்தின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரொருவர் ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பொலிஸ் துறைக்கென புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்டுள்ள பதினைந்து குதிரைகளையும் அமைக்கப்படவுள்ள புதிய குதிரை லாயங்களில் தங்கவைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் பொலிஸ் துறைத் தகவல்களுக்கு அமைய தற்போது பொலிஸ்துறை வசமுள்ள மொத்தக் குதிரைகளின் எண்ணிக்கை 37 ஆகும். (த-22)

## குருவே சரணம்...



அழைப்பு: கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் தினவிழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர். (204-11)

# உள்ளூராட்சி சபை தேர்தல் குறித்து இதுவரை தீர்மானம் இல்லை

கொழும்பு, டிசெ.23

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் தொகுதி அடிப்படையிலா அல்லது வழக்கமான முறையிலா இடம் பெறும் என இதுவரை தீர்மானிக்கப் படவில்லை என அரசு தெரிவித்துள்ளது.

ஊடகம் ஒன்றுக்கு அளித்த விசேட செவ்வியில் சிறிலங்கா சுதந்திர கட்சியின் பொருளாளர் அமைச்சர் டளஸ் அழகப்பெருமா இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தத் தேர்தல்கள் நடத்தப்படுவது குறித்து அரசு தரப்பில் கலந்துரையாடல்கள் இடம் பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே திருத்தப்பட்ட உள்ளூராட்சி சபைச் சட்டமூலம் எதிர்வரும் ஜனவரி மாதம் 4 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (சி)

# மூன்று நிலையங்களில் வினாத்தாள் மதிப்பீடு

யாழ்ப்பாணம், டிசெ.23

யாழ் மாவட்டத்தில் ஜி.சீ. ஈ (சாதாரண) தரப் பரீட்சையின் வினாத்தாள் மதிப்பீட்டுப்பணி மூன்று நிலையங்களில் இடம் பெறவுள்ளது.

வேம்படி மகளிர் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி, வடமராட்சி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் ஆகிய நிலையங்களில் இந்தப் பணி இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பருத்தித்துறை சிற்றாலய ஆண்டு விழா

பருத்தித்துறை, டிசெ.23

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அமைந்துள்ள சிற்றாலயத்தின் ஆண்டு விழா எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3மணிக்கு நடைபெறவுள்ளது. இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் பருத்தித்துறை கட்டைவேலி சேகர முகாமைக் குரு அருட்திரு.ந. அருள்நாதன் தலைமையில் இந்த விழா நடைபெறவுள்ளது. (த-190)

# பேலியகொடவில் 7கோடி ரூபா வங்கிக் கொள்ளை; பொலிஸ் கான்ஸ்டபிள் உட்பட நான்கு பேர் கைது

## முன்னாள் சிப்பாய்க்கு வலை

கொழும்பு, டிசெ.23

கொழும்பின் புறநகர்ப் பகுதியான பேலிய கொட பிரதேசத்தில் வைத்து எச்.எஸ்.பி.சீ. வங்கிக்குச் சொந்தமான ஏழு கோடி ரூபா பணம் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பிலுள்ள 'ஹொங்கொங் ஷெங் காய் பேங்கிங் கோர்ப்பரேஷன்' எனும் வெளிநாட்டுத் தனியார் வங்கிக்குச் சொந்தமான சுமார் ஏழு கோடி ரூபா பணம் 'கெப்' ரக வாகனமொன்றில் எடுத்துச் செல்லப்பட்ட போது ஹுணுப்பிட்டிய, வனவாசல வீதியில் தெலங்கபாத்த எனும் இடத்தில் வைத்து இனந்தெரியாத குழுவொன்றால் துணிகரமாகக் கொள்ளையிடப்பட்டிருந்தமை தெரிந்ததே.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் கொழும்பு பிரதேசத்திலுள்ள பொலிஸ் நிலையமொன்றில் பணிபுரியும் கான்ஸ் டபிள் எனவும், மற்றுமொருவர் குறிப்பிட்ட வங்கியில் சிறிதுகாலம் பணியாற்றிய பின் விலகிச் சென்ற எழுதுவினைஞர் எனவும் தெரிய வந்துள்ளது.

மற்றுமொரு சந்தேகநபர் கணேமுல்ல பிரதேசத்தில் உள்ள ஜிம்னாஸ்டிக் நிலைய உரிமையாளராவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த துணிகரக் கொள்ளைக்குப் பயன்படுத்திய ரி 56 ரகத் துப்பாக்கியொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது எனப்பொலிஸ் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

கொள்ளையின் சூத்திரதாரியெனச் சந்தேகிக்கப்படும் முன்னாள் இராணுவ விசேட படையணிச் சிப்பாய் ஒருவரையும், ஏனைய சிலரையும் கைது செய்யும் தீவிர முயற்சிகளை கொழும்பு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

பிரதான சூத்திரதாரியான சிப்பாய் இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்ற பின் கணேமுல்ல பிரதேசத்தில் பழக்கடையொன்றை நடத்தி வந்துள்ளார் எனக் கூறப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் கொள்ளைப் பணத்தில் தமக்குக் கிடைத்த பங்கைக் கொண்டு நில புலன்கள், வாகனங்கள், நகைகள், சொகுசு வீட்டுத் தளபாடங்கள் போன்றவற்றை வாங்கியுள்ளனர் என விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட கான்ஸ்டபிள் தனக்குக் கிடைத்த பங்கில் 20 லட்சம் ரூபாவுக்கு நகைகள் வாங்கி கண்டியில் வசித்து வரும் அவரது கள்ளக்காதலிக்கு பரிசளித்துள்ளார் எனவும், சுமார் 4 லட்சம் ரூபாவை அந்தப் பெண்ணின் வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டுள்ளார் எனவும் தெரிய வருகிறது. அப்பெண்ணும் அவரது கணவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பணம் கொண்டு சென்ற வானை தெலங்கபாத்த பிரதேசத்தில் குறித்த கான்ஸ்டபிளே நிறுத்தினார் என்றும், அதற்காக அவருக்கு ஒரு கோடி ரூபா சன்மானமாகக் கொடுக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட நாலாவது நபர் வெயாங்கொட பிரதேசத்தில் நடந்த கொள்ளை யொன்றுக்காக நீதிமன்றில் ஆஜராக்கப்பட்டு பிணையில் வெளி வந்தவராவார்.

கொள்ளையர்கள் ஒவ்வொருவருக்கும் தலா ஒரு கோடி ரூபா கிடைத்துள்ளது. அப்பணத்தைக் கொண்டு அவர்கள் வாங்கிய வாகனங்கள், பொருட்கள் ஆகியவற்றின் ஒரு பகுதி மீட்கப்பட்டுள்ளது. கொழும்பு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (சி)

# வர்த்தகப் பிரமுகர்களுக்கு விசேட கடவுச் சீட்டுக்கள்

கொழும்பு, டிசெ.23

வர்த்தகப் பிரமுகர்களுக்கு விசேட கடவுச் சீட்டொன்று அறிமுகப்படுத்தப்பட உள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. 16 வயதுக்குக் குறைந்தவர்களுக்கும், வர்த்தகப் பிரமுகர்களுக்கும் விசேட கடவுச் சீட்டுக்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

எதிர்வரும் காலங்களில் பயோமெற்றிக் முறையிலான கடவுச் சீட்டுக்களை அறிமுகம்செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் அபிவிருத்தி அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

விசா வழங்கும் முறைமைகளிலும் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதுவரை குடியுரிமை பெறாத இந்திய வம்சா வழியினருக்கும் பிரஜா உரிமை வழங்குவது குறித்து புதிய நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

என்னிடம் "அளவையியலும் விஞ்ஞானமுறையும்" என்ற பாடத்தைக் கற்று அப்பாடத்தில் "A" "B" தரச் சித்திபெற்ற மாணவர்களைக் கல்வியில் மேன்மேலும் வளர்ச்சியடைய வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

## N.C.A. கல்வி நிலையம், முதலாம் கட்டை, பருத்தித்துறை

| | | | |
|---|---|---|---|
| 01. மு.சுகன்யா | -A | 16. பிலிப்நிறோஜன் | - B |
| 02. சி.சுதர்சினி | -A | 17. யே. லக்சியா | - B |
| 03. ப.மிதிலா | -A | 18. க. நர்மதா | - B |
| 04. அ.துளசிமாறன் | -A | 19. சிந்துஜா | - B |
| 05. இ.ஜெயதீபன் | -A | 20. து.பிரியா | - B |
| 06. இ.வினோத் | - B | 21. இ.சாரங்கா | - B |
| 07. செல்வறஜிதன் | - B | 22. இ.சிறீவித்தியா | - B |
| 08. ஜீ.சரத்பாபு | - B | 23. ம.மாலினி | - B |
| 09. செ.ஜசிதரன் | - B | 24. ஆ.மரியலுடிற் | - B |
| 10. வ.கரிகரன் | - B | 25. எஸ்.கோசிகன் | - B |
| 11. த.ரவிராஜ் | - B | 26. ந.தமிழ்ப்பிரியா | - B |
| 12. ஜெயபிரதீபன் | - B | 27. சி.அனுசியா | - B |
| 13. சி.கோபிராஜ் | - B | 28. ச. ராதிகா | - B |
| 14. பா.ஆனந்தராசா | - B | 29. க.றொபிந்தா | - B |
| 15. கரிகாலன் | - B | | |

## சதா பொன்ஸ் கல்விநிலையம், மாலுசந்தி, அல்வாய்

| | | | |
|---|---|---|---|
| 01. ந. துவாரகா | -A | 06. தி.சுகிர்தா | - B |
| 02. பிரியதர்சினி | -A | 07. எஸ்.பிரவீணா | - B |
| 03. இ.வாசுகி | -A | 08. ர.மேதினி | - B |
| 04. ந.ரேதிகா | -A | 09. இ.சுபந்தா | - B |
| 05. வ.வசந்தா | - B | 10. சிந்துஜா | - B |

## PERSONAL GROUP CLASS

| | | | |
|---|---|---|---|
| 01. இ.துஸ்யந்தி | - A | 15. அ.ஜெனித்தா | - B |
| 02. த.அபிராமி | - A | 16. எஸ். எழிலரசி | - B |
| 03. சி.காந்தரூபன் | - A | 17. ஜெ.மேரி | - B |
| 04 கு.தாயளன் | - A | 18. கு.நிஷாந்தினி | - B |
| 05. சி.மணிவண்ணன் | - A | 19. ம.கலைச்செல்வி | - B |
| 06. சி.துஷாந்தினி | - A | 20. சே.டயானா | - B |
| 07. யே.கொன்சி | - B | | |
| 08. ச.தாரணி | - B | | |
| 09. இ.தாட்சாயனி | - B | | |
| 10. சு.சிவதர்சினி | - B | | |
| 11. ம.ஜெயந்தினி | - B | | |
| 12. வ.ராதை | - B | | |
| 13. இ.சிந்துஜா | - B | | |
| 14. மு.கேமதட்சனி | - B | | |

ஆசிரியர் கற்பிக்கும் இடங்கள்:
N.C.A கல்விநிலையம், பருத்தித்துறை.
சதா பொன்ஸ் கல்விநிலையம், அல்வாய்.
நியூட்டன் அக்கடமி, குடத்தனை.
பிறைற் கல்வி நிலையம், வல்வெட்டித்துறை.

வன்னியசிங்கம் அரவிந்தன்
( B.A.HONS 2nd Upper)
(POLITICAL SCIENCE SPECIAL).

(சி/573899)

# உணவகங்களும், சிற்றுண்டிச்சாலைகளும் அடுத்தவருடம் முதல் தரப்படுத்தப்படும்

கொழும்பு, டிச.23

நாட்டில் இயங்கி வரும் உணவகங்கள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் உணவுப் பொருள் விற்பனை நிலையங்கள் யாவும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அவற்றின் தரத்துக்கேற்ப தரச்சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன எனச் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிரிசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் சுகாதார அமைச்சின் உயரதிகாரியொருவர்தெரிவித்தவை வருமாறு:

இத்தகைய நிலையங்களில் பேணப்படும் சுத்தம், சுகாதாரம், விற்கப்படும் உணவுப் பண்டங்களின் தரம் ஆகியவை கவனத்தில் கொள்ளப்பட்டு அதற்கேற்ப உயர்தரம் ஏ, மத்திய தரம் பி, சாதாரண தரம் சீ என்ற அடிப்படையில் அவற்றுக்கான தரச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

சான்றிதழ்கள் வழங்கப்பட்ட நிலையங்களின் சேவைகள் திருப்திகரமாக உள்ளனவா என அவ்வப்போது பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.

நாடெங்கும் உணவுப் பண்டங்களை விற்பனை செய்யும் சுமார் இரண்டு லட்சம் ஹோட்டல்கள், உணவகங்கள், சிற்றுண்டிச்சாலைகள் உள்ளன. எனினும், அவற்றில் பெரும்பாலானவை திருப்தியற்ற முறையில் நடத்தப்படுகின்றன. அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காகவே இந்தத் தரச்சான்றிதழ் வழங்கும் முறை அறிமுகம் செய்யப்படவுள்ளது - இவ்வாறு சுகாதார அமைச்சின் உயரதிகாரி தெரிவித்தார். (சி)



## சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்தும்

## வருடாந்த திருவாசக விழா- 2010

காலம்: 24.12.2010 வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில்
இடம்: சந்நிதியான் ஆச்சிரமம்
தலைமையுரை: ஞானபண்டித சேவாசுரபி வைத்திய கலாநிதி
**சி.கதிரைவேற்பிள்ளை**
சிறப்புச் சொற்பொழிவு:
விடயம்: "ஆர்கொலோ சதுரர்"
**திருமதி மனோன்மணி சண்முகதாஸ்**
(யாழ்.பல்கலைக்கழகம்)
வாராந்த வெள்ளி நிகழ்வு:
முருகன் அடியார்கள் நிகழ்த்தும் "முருக நாம பஜனை"

குறிப்பு:
ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நாயன்மார்களின் திருவுருவப் படங்களும் திருவாசக ஏடுகளும் ஊர்வலமாக எடுத்துவரப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சந்நிதியான் ஆச்சிரமம்,
செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு. (சி/573250) **பேரவை.**


நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு

# Jaffna Electricals இன்

## விசேட விலைக்கழிவு

10% முதல் 40%

21.12.2010 முதல் 31.12.2010 வரை

- Mixer Grinders
- Iron
- Toaster
- Electric Kettle
- Oven
- Charger Light
- Egg beater
- Rice Cooker
- Gas Cooker
- Water filter
- Flask
- Double hot plate
- Table fan
- Stand fan
- Industrial Pedastal fan
- Industrial Wall fan
- Orbit fan
- Ceiling fan
- Air cooler
- Water dispensar
- Ironing board
- Chandiliers
- Wall Lamps
- Exhaust fan
- Single hot plate

அனைத்துப் பொருள்களும் ஒரு வருடகால உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

**Jaffna Electricals**
No.94 (6), Stanley Road, Jaffna.
Tel: 021 222 2353
Fax/ Tel: 021 222 4302





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவாரி மாட்டை இறைச்சிக்கு வெட்டியோர் தொடர்பான விவரங்கள் பொலிஸாரால் கோரல்

அச்சுவேலி,டிசெ.23

புத்தூரில் சவாரிக் காளை மாட்டை திருடி இறைச்சிக்கு வெட்டியவர்கள் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் பொருத்தமான முறையில் பொலிசுக்கு தகவல் தரலாம்.

தொலைபேசி மூலமோ கடித மூலமோ நேரடியாகவோ தரப்படும் தகவல்களை ஏற்றுக் கொண்டு சந்தேக நபர்களை கைது செய்வதோடு மேற்கொண்டு இத்தகைய சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

விசேட பொலிஸ் குழு இது தொடர்பாகப் புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது என்று அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜீ.ஸ்ரீ.நிஸங்க ஜயரத்தினா அறிவித்துள்ளார்.

கந்தையா சுப்பிரமணியம் என்பவரின் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான சவாரி மாடு திங்கட்கிழமை இரவு களவாடப்பட்டு புத்தூரில் தோட்டவெளியில் வைத்து இறைச்சிக்காக வெட்டப்பட்டுள்ளதாக அச்சுவேலி பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அச்சுவேலி பொலிஸ்நிலைய பொறுப்பாதிகாரியுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும் தெரிவிக்கையில்:

புத்தூரில் சவாரிக் காளை மாடு திருடப்பட்டு இறைச்சிக்கு வெட்டப்பட்டது தொடர்பாக சிவில் நிர்வாக பொலிஸ் பிரிவும் குற்றத் தடுப்புபொலிஸ் பிரிவும் இணைந்த நிலையில் விசேட பொலிஸ் அணி விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு பொது மக்கள் தகவலை தந்துதவுவது குற்றவாளிகளை விரைவில் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்த உதவும் என்று கூறினார். (ம-11)

# மீசாலை வீரசிங்கம் ம.வி. மாணவரின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய மாணவர்களின் குடி தண்ணீர்ப் பிரச்சினையை தீர்க்க ''யுனிசெப்'' நிறுவனத்தினர் முன்வந்துள்ளனர்.

இதன் அடிப்படையில் கிணறும் குடிதண்ணீர் தாங்கியும் அமைக்க 12 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளனர்.

வித்தியாலயத்திற்கு அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட காணியில் கிணறும் தண்ணீர் தாங்கியும் அமைக்கப்படவுள்ளன.

வித்தியாலய அதிபர் வே.விநாயகமூர்த்தி 'யுனிசெப்' நிறுவனத்திற்கு மாணவர்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பாக விடுத்த வேண்டுகோளையடுத்து இந்த நிதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சி கல்வி வலயத்தின் நவோதயா பாடசாலையாக உள்ளதால் இந்த வித்தியாலயத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்பதாகவும் இதனால் கோடை காலங்களில் மாணவர்கள் குடிதண்ணீரை வெளியிடங்களிலிந்து எடுத்து வந்து பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-207)

# முற்றவெளியில் புனரமைப்புப் பணிகள்

யாழ். முற்றவெளிப்பகுதியில் வெள்ளம் தேங்கி நிற்கும் தாழ்ந்த பிரதேசங்களைக் கிரவல் மண்ணைப் பயன்படுத்தி மேட்டு நிலமாக மாற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்.பிரதம தபாலக சுற்றாடலை அண்டிய பகுதியிலும் மற்றும் வீரசிங்கம் மண்டபக் கட்டடத் தொகுதியின் முன் பக்கச் சுற்றாடலிலும் காணப்படும் தாழ்ந்த இடங்கள் கிரவல் மண்ணைக் கொண்டு சீர் செய்யப்பட்டு வருகின்றன. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தொழிலாளர்களால் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (201-26)




# மாற்றுவலுவுள்ள மூன்று மாணவர்கள் சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றல்

தென்மராட்சி,டிசெ.23

கடந்த வருடம் வன்னிப் பகுதியில் இடம்பெற்ற யுத்தத்தில் இரு கண்களையும் இருகைகளையும் இழந்த மூவர் கைதடி முத்துக்குமார சுவாமி ம.வியில் ஜி.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

இரண்டு மாணவிகளும் ஒரு மாணவனுமே இவ்வாறு பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

இவர்கள் ஒவ்வொருவருக்கும் பரீட்சை மண்டபத்தில் ஒரு மேற்பார்வையாளரும் உதவியாளரும் உதவி புரிகின்றனர். பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் மாணவருக்குக் கேள்வியை வாசிக்க மாணவர் கூறும் பதிலினை ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்வதுடன் உதவியாளரால் விடைத்தாள்களில் எழுதப்பட்டு வருகிறது.

மாணவனுக்கு ஷெல் வெடித்து முகத்தில் பலத்த காயங்களை ஏற்படுத்தியதுடன் ஒரு கண்ணையும் சேதப்படுத்தியுள்ளது. மற்றக் கண் பாதிப்படையாத போதிலும் அதன் பார்வை குறைவாக உள்ளது. இவருக்குக் கண் சத்திரசிகிச்சை செய்தால் பார்வை கிடைக்கலாமென கண்சிகிச்சை நிபுணர் தெரிவித்ததாகக் கூறப்பட்டுள்ளது.

மாணவனுக்குப் பரோபகாரிகள் உதவி செய்தால் கண்பார்வை கிடைப்பதுடன் மாணவரின் எதிர்கால கல்வியும் சிறந்து விளங்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

பரீட்சை முடியும் வரை கைதடி நவீல்ட் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ள இந்த மாணவர்கள் பரீட்சை முடிவடைந்ததும் சொந்த இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.(201-207)

## மனித உரிமை...



ஊக்குவிப்பு: சண்டிலிப்பாய் பிரதேச மாநாட்டு மண்டபத்தில் மனித உரிமைகள் தின நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ், யு.என்.எச்.சி.ஆர். நிறுவன வெளிக்கள உத்தியோகத்தர் பிறைன் கண்டர், டி.ஆர்.சி. யாழ். பிரதிநிதி பபிலோ புளோரஸ் ஆகியோர் மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவிகளுக்குப் பரிசில்கள் வழங்குகின்றனர். (313)

# சிங்கள மொழிநடையைக் கற்பிக்க வேண்டும்

## கல்வி நிறுவக மொழி அபிவிருத்திப் பணிப்பாளர் உரை

கோப்பாய்,டிசெ.23

சிங்களமொழியை அந்த மொழி மூலம் கற்றவர்கள் கற்பிப்பதன் மூலம் மொழி நடையை சிரமமின்றிக் கற்கலாம் என்று தேசிய கல்வி நிறுவக மொழி அபிவிருத்திப் பிரிவு பணிப்பாளர் லியாணி அமரசிங்க தெரிவித்தார்.

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆசிரிய பயிற்சி பெறும் மாணவர்களுக்கு அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கில் தலைமை உரை ஆற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

ஆசிரிய மாணவர்களுக்கென நடத்தப்பட்ட மேற்படி சிறப்புச் செயலமர்வில் 260 இற்கு மேற்பட்ட ஆசிரிய மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று தமது மேலதிக மொழித் தேர்ச்சியில் சிறந்த அடித்தளத்தைப் பெற்றுள்ளனர்.

இந்தச் செயற்றிட்டத்தில் சிங்கள மொழியை சம்பாசனை, நாடகம், பாட்டு, கட்டுரை, குழுச்செயற்பாடு, வினா-விடை முறை, மாணவர் மைய அணுகுமுறை போன்ற கற்பித்தல் உத்திகள் பயன்படுத்தப்பட்ட போது அதிக பயன் கிடைத்தது.

இரண்டாம் மொழியை கற்பிக்கும் போது முதல் மொழியை கற்பிப்பது போன்று கற்பிக்க கூடாது. அதற்கு உரிய பயிற்சியை ஒழுங்கமைக்கப்பட்ட செயற்திட்டங்களுடாக முன்னெடுப்பதன் மூலம் இலகுபடுத்தப்படும்.

அதற்காக தேசிய கல்வி நிறுவகத்தில் சிறப்பு மொழி ஆய்வுகூட வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இருமொழிச் செயற்றிட்டம் ஆரம்பக்கல்வி பிரிவு ஆசிரிய மாணவர்களுக்குப் பாட விதானத்தில் கட்டாய பாடமாக உள்ளது. இடைநிலைப் பிரிவு ஆசிரிய மாணவர்களுக்கு உள்ள[illegible] பீட்டிற்குள் அடங்குகின்றது.

அந்த வகையில் தற்போது இரு மொழியை கற்றிருப்பதன் மூலம் பல்வேறு தொடர்பாடல் திறன் மேம்பாடு அடைவதுடன் நல்லிணக்கச் சூழ்நிலை ஏற்படுவதும் இலகுபடுத்தப்படும். இதற்காகச் சிங்களப் பிரதேசத்திலும் இவ்வாறான செயற்றிட்டங்கள் கல்வியியற் கல்லூரியூடாக முன்னெடுக்கப்பட்டு அவை சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இவ்வாறான செயற்திட்டத்தில் தென்னிந்திய பணியக மூலம் (தென்னிந்திய மொழிப் பயிற்சி தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்கு) தமிழில் சிறப்பு பயிற்சியை இதுவரை 50 ஆசிரியர்கள் பெங்களூரில் அமைந்துள்ள மேற்படி நிலையத்தில் பெற்றுள்ளனர்.

அதேபோன்று சிங்கள மொழியை கற்பதற்கு தேசிய கல்வி நிறுவகத்தில் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற் [illegible] தென்னிந்திய மொழிப் பயிற்சிக்கும் இந்த நிறுவகம் அனுசரணை வழங்குகின்றது.

இந்தக் கலைத்திட்டம் ஆசிரியப் பயிற்சிநெறியை பின்பற்றும் அணைவருக்கும் இருந்த போதும் அதாவது சிங்கள மொழி மூல ஆசிரியர்களுக்குத் தமிழும், தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்குச் சிங்களமும் இருந்து வருகிறது. கடந்த காலங்களில் இது தொடர்பான பயிற்சி நெறியை சிறப்பாக வழங்க போதிய வளவாளர்கள் இன்மையால் அதில் தாமதமான நிலை இருந்தது.

ஆனால், தற்போது இரு மொழிகளையும் கற்பிக்கப் போதிய வளவாளர்கள் தேசிய கல்வி நிறுவகத்தில் உள்ளனர். இதன் மூலம் எதிர்வரும் காலங்களில் இந்தப் பயிற்சிநெறி சிறப்பாக நடைபெறுவதன் மூலம் பாடசாலை மட்டத்திற்கு இரண்டாம் மொழி பயிற்சியை மாணவர்களுக்கு எடுத்துச் செல்லக் கூடிய வாய்ப்பு ஏற்படும்- என்று கூறினார். (201-72)

# திருவாசகம் முற்றோதல்

வடமராட்சி,டிசெ.23

தென்புலோலி, உபயகதிர்காமம் தான்தோன்றி ஈஸ்வரச் சக்கர சண்முகப்பெருமான் ஆலயத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது. (204-236)

# சாரதா தேவியின் ஜெயந்தி விழா

வடமராட்சி,டிசெ.23

பருத்தித்துறை ஸ்ரீ இராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 158 ஆவது ஜெயந்தி விழா எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 6 மணிக்கு மங்கள ஆராத்தி, நண்பகல் 12 மணிக்கு விசேட பூசை, பிரசாதம் வழங்கல் என்பன இடம்பெறும்.

இந்த நிகழ்வில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் வட்டக்கச்சியைச் சேர்ந்த செல்வி ம.நிரோஜினி, தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் வி.ஜதீசு ஆகியோருக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளன. (204-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேஷர்:**



எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். மற்றவர்கள் உங்களைப் பார்த்து பொறாமைப்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். நண்பர்கள், உறவினர்கள் ஆதாயம் பெற நீங்கள் உதவிகரமாக இருப்பீர்கள். உங்களிடம் வாக்குக் கொடுத்தவர்கள் அதைக் காப்பாற்றி பெருமை சேர்ப்பர். அனுகூலமான நாள்.

**இடபர்:**



கையிலிருக்கும் பணத்தை தாராளமாக செலவு செய்து விட்டு, மற்றவர்களிடம் கைமாத்து வாங்கலாம். சொத்து வாங்கல், கொடுக்கல் விடயங்களில் எச்சரிக்கை அவசியம். எதிர்பாராத சந்திப்பு நிகழும். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். கனவுகளால் குழப்பம் நேரும்.

**மிதுனர்:**



கொடுத்த வாக்கைக் காப்பாற்றிப் பெருமிதம் அடைவீர்கள். வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்த பெரிய மனிதர் ஒருவரை சந்திப்பீர்கள். பெண்கள், மனைவி வழியில் சுபச்செலவுகளை சந்திக்கலாம். உங்களுக்குத் தேவையான பொருள் ஒன்றை வாங்குவீர்கள். குடும்பப் பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**கடகர்:**



தெய்வ காரியங்களுக்காக, சிறிதளவு பணத்தை செலவிடலாம். கடன் பிரச்சினைகளை சமாளிப்பீர்கள். பல நாள்களாக எதிர்பார்த்த பணவரவு ஒன்று எளிதில் கிடைக்கலாம். பிரியமான சிலருடன் ஏற்பட்ட பிரச்சினை, மனஸ்தாபம் தீரும். சில விவகாரங்களை நினைத்து பெரியளவில் கோபம், பதற்றம் அடையலாம்.

**சிங்கர்:**



குழப்பங்கள் இல்லாமல் எதிலும் தெளிவான முடிவு எடுப்பீர்கள். மனைவி, குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். நீங்கள் எதிர்பாராத ஒருவர், உங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். உறவினர்களுக்காக சில செலவுகளை செய்யலாம். விருப்பமான உணவை சாப்பிடுவீர்கள்.

**கன்னி:**



தொல்லை கொடுத்த உறவினர்கள் தோள் கொடுக்க முன்வருவர். வரவேண்டிய பணவரவுகள் வரலாம். உடல் நலத்தில் அக்கறை காட்டுவீர்கள். வழக்கு விவகாரங்களில் திருப்பங்களைச் சந்திக்கலாம். அரசியல்வாதிகளுக்கு அலைச்சல் கூடும். உங்களின் திறமையான செயற்பாடுகளைப் பார்த்து மற்றவர்கள் வியப்படைவர்.

**துலார்:**



வெளியூர்களில் இருந்து வரும் செய்திகளால், சந்தோஷம் அடைவீர்கள். குறைவாக செலவாகும் என நினைத்த காரியம் ஒன்றுக்கு அதிகமாக செலவாகும். நண்பர்கள் ஆதாயம் பெற நீங்கள் உதவிகரமாக இருப்பீர்கள். குறுக்கு வழி சிந்தனைகளைத் தவிர்த்து, எதிலும் நேர்வழியில் செயற்பட நினைப்பீர்கள். பக்தி நாட்டம் கூடும்.

**விருச்சிகர்:**



பிரியமான சிலரிடம் சண்டை போடலாம். நீங்கள் சொல்லும் யோசனையை கேட்காமல், சிலர் ஏட்டிக்குப் போட்டியாக செயற்படலாம். சோர்வு, சோம்பலால் நீண்ட நேரம் தூங்கலாம். முக்கியமான ஒருவரை சந்திக்க முற்பட்டு அவர் இல்லாமல் போகலாம். வீட்டுக்குத் தேவையான பொருள் ஒன்றை வாங்குவதற்கு அலைந்து திரியலாம்.

**தனுசு:**



மற்ற சிலரின் வேலைகளையும் நீங்கள் சேர்த்து செய்யலாம். கடன் பிரச்சினை ஒன்றை மாற்றி அமைக்க முற்படுவீர்கள். எந்த விடயத்திலும் தெளிவாக யோசித்து செயற்பட்டு சாதனை படைப்பீர்கள். எதிர்பாராத சில நல்ல நிகழ்ச்சிகள் நடக்கலாம். உங்களின் திறமையான வேலை ஒன்றை பற்றி மற்றவர்களிடம் பெருமை பேசுவீர்கள்.

**மகரர்:**



வீண் பிடிவாதங்களைத் தவிர்க்க, எதிலும் நெகிழ்வுத்தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். எதிர்பாராத திடீர் பணவரவுகள் இருந்தாலும், அதற்கேற்ற செலவுகளும் உண்டு. பொதுவாழ்வில் உள்ளவர்கள் வேண்டாத விவகாரங்களில் தலையிட வேண்டும். தந்தை வழியில் அன்பு தொல்லைகளுக்கு ஆள்படலாம். உற்சாகம் கூடும்.

**கும்பர்:**



ஊக்கம், உற்சாகத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். சகோதரர்கள் நலனுக்காக மேற்கொண்ட முயற்சிகளில், வெற்றி கிடைக்கலாம். சுயதொழில் புரிவோர் புதிய இயந்திரங்கள் வாங்கலாம். கடந்த காலத்தில் நண்பர் ஒருவர் செய்த உதவிக்கு, நீங்கள் பதில் உதவி செய்வீர்கள். வயிறு உபாதைகளை சந்திக்கலாம்.

**மீனர்:**



சொந்த பந்தங்களுடன் ஏற்பட்ட அதிருப்தி விலகி பாசம் அதிகரிக்கும். உத்தியோகத்தர்கள் பரபரப்பாக செயற்படலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் வேலைப்பளு கூடும். கணவன், மனைவி இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். வெளியூர்களில் இருந்து வரும் சிலருக்காக காத்திருக்கலாம். கோபம், வேகம் கூடும்.

# ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.23

கோப்பாய்க் கோட்ட கணித, விஞ்ஞான ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (204-313)

## ஒளி பரவட்டும்...



மாணவர் திறமை: சுன்னாகம் வாழ்வக இல்லத்தில் இல்லத்தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் ஒளிவிழா அண்மையில் இடம்பெற்றது. வாழ்வக இல்ல மாணவர்கள் கலை நிகழ்வை அரங்கேற்றுகின்றனர். (201)

# என்றுமே ஏழையா?

பணக்காரன் ஆவது எப்படி? என்று நண்பர்கள் நான்கைந்துபேர் பேசிக் கொண்டிருந்தனர். ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமான யேசனை சொன்னார்கள்.

ஒருவர் மட்டும் ''நமது தேவைகளை எவ்வளவுக்கெவ்வளவு குறைத்துக் கொள்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நாம் பணக்காரர் ஆகலாம்'' என்று பொறி தட்டிய மாதிரிக் கூறினார். நமது தேவைகள் சுருங்கச் சுருங்க நாம் தனவான் கள் ஆகலாம். பண்டாரம் என்கிற சொல் தமிழிலே துறவிகளையும் குறிக்கும், பணம் வைக்கும் அறையையும் குறிக்கும். பண்டாரங்கள் என்பது எல்லாம் உடையவர்களையும் குறிக்கும்.

எமது தேவைகளின் பட்டியல் அனுமார் வால் மாதிரி முடிவதே இல்லை. எவ்வளவு அவற்றில் நிறைவேற்றினாலும் எப்போதும் அதில் மிகுதி இருந்து கொண்டே இருக்கிறது. நாம் வளர வளரத் தேவைகளும் வளர்ந்துகொண்டே போவதால் நாம் என்றைக்குமே ஏழைகளாகவே இருக்கிறோம். காந்தியடிகள், வினோபாஜி, காஞ்சி மகா சுவாமிகள் போன்றவர்கள் தமது உணவு, உடை, உறைவிடம், வாழ்க்கைமுறை எல்லாவற்றிலும் எப்போதும் எளிமையைக் கையாண்டார்கள். அரசியலில்கூட காமராசர் மறைந்த பின்னர் அவர் அறையில் தேடியபோது நாணயக் குற்றிகளும் சில வேட்டி சட்டைகளும் மட்டுமே இருந்தன. இதனைக் கண்ட பலர் திகைத்தனர்.

அறிஞர் அண்ணா முதல்வராக இருந்த போது அவரது துணைவியார் ''வீடு கட்ட வேண்டும்'' என்ற கோரிக்கையைத் தமது பேர்த்தி மூலம் சொல்லி அனுப்பியதும், பேர்த்தியிடம் ஒரு காகிதத்தில் வீட்டை வரைந்து அனுப்பியிருக்கிறார் அண்ணா. “இது வீட்டின் மாதிரிப் படமா?'' என்று அவர் துணைவியார் கேட்ட போது ''ஆம்... இது தான் வீடு....நம்மால் இதைத்தான் கட்ட முடியும்'' என்று சொல்லிச் சிரித்தாராம் அண்ணா''. பதவிகள் பலரைப் பணவெறியர்களாக ஆக்கியுள்ளன. ஆனால் அறிவு தெரிந்தவர்கள் அப்படி ஆவதே இல்லை. உலக சிந்தனையாளர்களில் ஒருவரான சோக்ரடீஸ் பற்றிய சிறந்த விடயம் ஒன்று உண்டு. சோக்ரடீஸ் நாள் தோறும் கடை வீதிக்குப் போவார். ஒவ்வொரு கடையாக ஏறி இறங்குவார். எல்லாப் பொருள்களையும் உற்று உற்றுப் பார்ப்பார். ஆனால் எதையுமே- என்றைக்குமே வாங்கியதில்லை! தினந்தோறும் இந்தக் காரியம் நடந்தது.

ஒரு நாள் அவரது சீடர்கள் சோக்ரடீசைப் பார்த்து இந்தச் சந்தேகத்தைக் கேட்டு விட்டார்கள். ''நாள் தோறும் நீங்கள் கடை வீதிக்குப் போகிறீர்கள் எதையுமே வாங்குவதில்லை. ஆனால் எல்லாப் பொருளையும் ஏன் உற்று உற்றுப் பார்க்கிறீர்கள்?'' என்று கேட்டனர்.

''எந்த எந்தப் பொருள்களின் உதவி இல்லாமல் நான் மகிழ்ச்சி யாக இருக்கிறேன் என்கிற பட்டியலைத் தெரிந்து கொள்வதற்காவே நான் நாள்தோறும் கடை வீதிக்குப்போய் பொருள்களைப் பார்த்து வருகிறேன்'' என்றார் சோக்ரடீஸ்.



பொருள்களைச் சார்ந்து வாழப் பழகிவிட்டால் நாம் எப்போதும் “அது இல்லை...... இது இல்லை என்று இல்லை என்னும் பாட்டே பாடிக் கொண்டி ருப்போம். எம்மிடம் இருப்பது தெரியாது.

இந்தியாவின் வட நாட்டில் வாழ்ந்த ஏழைத் துறவி ராம்தீர்த்தம் தம்மைப் ''பாதுஷாராம்'' என்றே சொல்லிக் கொள்வார். பாதுஷா என்றால் சக்கரவர்த்தி என்று பொருள்.

''நீர் ஏழையல்லவா? உமக்கு ராஜ்யம் எங்கே உள்ளது? சொத்துக்கள் எங்கே? நீர் எப்படிப் பாதுஷா என்கிறீர்? என்று மக்கள் கேட்டார்கள். ''என்னைப் பாருங்கள் நான் ராஜா மாதிரித்தான் இருக்கிறேன். என் உடைமையை ஏன் பார்க்கிறீர்கள்? என்பார் பாதுஷாராம்.

நதிக்கரைகளில் ஏழை இந்தியப் பெண்கள் நீராடுவதில்கூட நாம் பெருமிதப்படும் ஒரு விடயம் இருக்கிறது. திருநெல்வேலி, தாமிரபரணி நதியில் மாற்றுச்சேலை இல்லாமல் உடுத்திருந்த சேலையுடன் நீராடப்போவார்கள். ஆனால் பாதிப் புடைவையை உடம்பில் சுற்றியபடி மீதிப் பாதியைப் படிக்கல்லில் நசுக்கித் துவைப்பார்கள்.

பிறகு துவைத்த பகுதியை உடம்பில் சுற்றிக் கொண்டு மீதிப் பாதியைத் துவைப்பார்கள். பின்பு பாதிப்புடைவையை மரத்தில் கட்டி காற்றில் காய விடுவார்கள். காய்ந்ததும் உடுத்துக்கொண்டு மீதிப்பாதியைக் கையால் உலர்த்தியபடி நடந்து கொண்டே காயவைத்து விடுவார்கள்.

மாற்றுச் சேலை இல்லாதபோதுகூட அவர்கள் முகத்தில் உள்ள மிகுந்த சந்தோசம், கேலி, பத்தாயிரம் மதிப்புள்ள பட்டுப்புடைவையைச் சுற்றியுள்ள உம்மணாமூஞ்சி அம்மணிகளிடம் அந்தச் சிரிப்பும் கலகலப்பும் பார்க்கவே முடியாது.

பல்வேறு பொருள்களைச் சார்ந்து வாழ்பவர்கள் ஒருபோதும் மகிழ்ச்சியாக இருக்க முடிவதில்லை. இரவில் மூட்டை முடிச்சுடன் ஓடிவந்து, ஏறும் பயணிகளைக் கவனித்துப் பார்த்தால் அது எங்கே? இது எங்கே? என்று குடைவார்கள். வியர்க்க விறுவிறுக்க, மூச்சிறைக்க விதவிதமான மூட்டைகளைத் தூக்கிக் கொண்டு தடுமாறுவார்கள். மாற்றி மாற்றிப் பைகளை, மூட்டைகளைப் பிரித்து எதை யாவது குடைந்து குடைந்து தேடிக் கொண்டே இருப்பார்கள். தானும் வசதியாக இருக்கமாட்டார் கள். தமது சுமைகளால் பிறரையும் வசதியாக இருக்க விடமாட்டார்கள். குறைந்த சுமையுடன் வருவபவர்கள். என்ன ஆனந்தமாகப் பயணம் செய்கிறார்கள் தெரியுமா?

அதனால்தான் ரயில் பெட்டிகளில் குறைந்த பொருள்கள் நிறைந்த வசதி என்று எழுதி வைத்திருக்கிறார்கள். ரயில் பயணத்தின் உண்மை வாழ்க்கைப் பயணத்துக்கும் பொருந்தும்.

சுகி சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகதேகியாக வாழ்வதற்கான புதிய உணவு வகைகள்

யாழ்ப்பாண மக்களிடையேயான உணவுப் பழக்கமானது பல்வேறு நீண்ட கால நோய்களுக்கு (நீரிழிவு/ சலரோகம், மாரடைப்பு, உயர் குருதி அமுக்கம், அதிகரித்த உடல்நிறை -obesity) காரணியாக அமைகின்றது. இதனால் எமது உணவு வகையின் போசாக்குப் பற்றிச் சிறிது சிந்திக்க வேண்டியுள்ளது. வைத்தியசாலைக்கு வருகைதரும் இவ்வகையான நோயாளிகளுடன் வைத்தியர்கள், மருத்துவ மாணவர்கள், தாதிமார் போன்றோர் சரியான உணவுப் பழக்க வழக்கங்கள் பற்றிக் கலந்துரையாடினும் நோயாளிகளில் எத்தனை பேர் அதனைப் பின்பற்றுகின்றனர் என்பது கேள்விக்குரிய இடமாகவே உள்ளது. எனவே நாம் யாழ்ப்பாண உணவு வகை பற்றிச் சற்று ஆராய்வோம்.

சமபோசனை உணவு (Balanced diet) என்பது எல்லா வகையான உணவுக்கூறுகளையும் குறிப்பிட்ட விகிதத்தில் கொண்டிருக்கும் உணவாகும். அந்த உணவுக் கூறுகளாவன காபோவைதரேற்று, புரதம் கொழுப்பு, விற்றமின்கள், கனியுப்புக்கள், நார்ப் பொருள், நீர்ச்சத்து என்பனவாகும். ஒவ்வொருவரும் திட ஆரோக்கியமாக வாழ்வதற்கு சமபோசனை உணவு அவசியமாகும். உணவுக் கூறுகளின் தொழிற்பாட்டைப் பார்ப்போம் ஆயின்,

1. காபோவைதரேற்று - உடலுக்கு சக்தியை அளிக்கின்றது. ஒருநாளுக்குத் தேவையான அளவைவிட கூடுதலாக உட்கொண்டால் கிளைகோஜன் மற்றும் கொழுப்பாக சேமிக்கப்படுகிறது. (உடலின் நிறை அதிகரிப்புக்கு காரணமாக அமைகிறது)

ஊடக அனுசரணை : உதயன்

2. புரதம் - உடல் வளர்ச்சிக்கும் உடல் இழையங்களைப் பழுது பார்ப்பதற்கும் அவசியம்.

3. கொழுப்பு- உடலுக்குச் சக்தியைத் தருகிறது. மேலதிகமாக உட்கொள்ளின் கொழுப்பாக சேமிக்கப்படும்.

4. விற்றமின்கள்- பல்வேறு அனுசேபத் தாக்கங்களுக்குத் தேவை.

5. கனியுப்புக்கள்- இழையங்களின் வளர்ச்சிக்கும், அவற்றைப் பழுது பார்ப்பதற்கும் நொதியங்களின் தொழிற்பாட்டுக்கும் தேவை. (பல், எலும்பு வளர்ச்சிக்கு அவசியம்)

6. நார்ப்பொருள்கள்- மலச்சிக்கலைத் தவிர்ப்பதற்கும் உடலில் குளுக்கோஸ் (சீனி) மற்றும் கொலஸ்ரோல் அளவைக் குறைந்த மட்டத்தில் வைத்திருக்கவும் உதவுகிறது.

ஒரு நபருக்கு நாளாந்தம் தேவையான சராசரியான உணவுக்கூறுகள் (அட்டவணை 1)

மேலைத்தேய நாட்டவரின் உணவு முறையை எடுத்துக் கொண்டால் அவர்கள் மரக்கறிவகைகள், பழங்களை அளவிட முடியாத அளவு அதிகமாக உட்கொள்வதன் மூலம் தமது காபோவைதரேற் (சக்தி) தேவையைப் பூர்த்தி செய்கின்றனர். அவர்கள் மரக்கறிகளை சமைக்காமல் (பச்சையாக)- சலட் அல்லது சூப் போன்று உண்பதால் விற்றமின்கள், கனியுப்புக்கள், போன்றன அழிவடையாது கிடைக்கின்றன. மற்றும் அவர்கள் கோழி இறைச்சி, வேறு கொழுப்புக் குறைந்த இறைச்சி, தேவையான அளவு மீன், முட்டை, பால் என்பவற்றைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் பிரதானமாக புரதம், கொழுப்புக் கூறுகளை நிவர்த்தி செய்கின்றனர். அதுமட்டுமன்றி மேலைத்தேயத்தவர் ஒழுங்காக குடும்ப வைத்தியரையோ/ உணவு ஆலோசனை நிபுணரையோ சந்தித்து தமது உணவு நடைமுறைகளைச் சரியாக மாற்றியமைத்து நீண்டகால நோய்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்கின்றனர்.

யாழ்ப்பாண மக்களிடையே யான பிரதான, வழமையான உணவு முறையைப் பார்ப்போமாயின் சோறு, பிட்டு, இடியப்பம், பாண் என்பன அமைகின்றன. இவை காபோவைதரேற்று நிறைந்த உணவுகளாகும். இவ்வாறான உணவுமுறையை மேற்கொண்டால் எமது நாளாந்த உணவில் காபோவைதரேற்றானது 65வீதத்திலும் அதிகமாகக் காணப்பட்டு உடலின் நிறை அதிகரிப்புக்குக் காரணமாகிறது. அத்துடன் தேங்காய் எமது சமையலில் பிரதான பங்காற்றுவதனால் கொழுப்பும் மித மிஞ்சிய அளவில் உடலில் சேர்கின்றது. யாழ்ப்பாணத்தவர்கள் பொதி செய்யப்பட்ட உணவுகளின்மேல்மோகம்கொண்டு பிஸ்கட், சொக்லேட், கஜூ, நிலக் கடலை, மிக்சர், பட்டர், மாஜரின், சிப்ஸ் போன்றவற்றை உட்கொள்வதனால் உடலில் தேவைக்கதிகமாகக் கொழுப்பு, சீனி, சேர்ந்து கொள்கிறது. இதே நேரம் புரதம், விற்றமின், கனியுப்புக்கள் போதியளவில் இன்மையால் அடிக்கடி தொற்றுநோய்கள், குருதிச் சோகை, முரசுகரைதல், கண்பார்வை குறைவு என்பன ஏற்படுகின்றன.

எனவே இவற்றை தவிர்த்துக் கொள்ள எமது உணவில் பழங்கள், இலைவகை, மரக்கறிகள் (பச்சையாக) போன்ற எமது சூழலில் கிடைக்கின்ற உணவு வகைகளையும், பருப்புவகைகளையும் கோழி இறைச்சி சிறிய மீன்,பால், முட்டை வெள்ளைக்கரு, வாசனைத் திரவியங்களும் சரக்குவகைகளையும் உணவில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

நாம் அதிகளவில் எடுத்துக் கொள்ள வேண்டிய உணவுகளின் சில உதாரணமும் 100கிராம் அவ் உணவுகளிலுள்ள உணவுக் கூறுகளும்.( அட்டவணை 2)

நீரிழிவு நோயாளிகள் பக்க விளைவுகளைத் தவிர்த்துக் கொள்ளக் கடுமையான உணவுக் கட்டுப்பாட்டை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இவற்றில் சிலர் இம்முறையை ஏற்றுக்கொள்கின்றனர், வேறு சிலர் இந்த உணவுக்கட்டுப்பாட்டை மேற்கொண்ட போதும் தமது புதிய உணவுப் பழக்கம், தமக் கென்று மட்டும் பிறிதாக தயாரிக்கும் உணவு மற் றும் நோய் பற்றிய பயத்தால் கடுமையான மன உளைச்சலுக்கு உள்ளாகின்றனர். இன்னும் சிலர் உணவுக் கட்டுப் பாட்டை ஏற்காது தாம் வாழும் வரை நாக்குக்குச் சுவையாக உண்ண வேண்டும் என்ற கொள்கையில் வரையறையின்றி உணவை உட்கொண்டு கண்பார்வை இழத்தல், கால்களை இழத்தல், மாரடைப்பு எனக் கடைசியில் பிறரில் தங்கி வாழும் நிலையிலும் குறைந்த வயதில் உயிரையும் இழக்கின்றனர்.

## மாபெரும் சமையல் போட்டி

எனவே இவ்வாறான நிலையில் இருந்து நீரிழிவு நோயாளிகளைப் பாதுகாக்கவும், குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் ஒன்றாக சமபோசனையான ஆரோக்கியமான சுவையான ஒரே உணவை உண்ண வேண்டும் என்ற நோக்குக்காகவும் இப் புதிய உணவைக் கண்டறியும் சமையற் போட்டி நடத்தப்படுகிறது. இந்தப் போட்டியில் பங்கு பற்றி சமபோசனைமிக்க உணவை (மேலைத்தேயத்தவரின் ஊட்டமிக்க உணவுபோல்) யாழ்ப்பாண மக்களிடையே அறிமுகப்படுத்தி நோயற்ற சமுதாயத்தை உருவாக்குவது ஒவ்வொருவரதும் கடமையாகும். எனவே இப்புதிய முயற்சியான சமையற் போட்டியில் ஆர்வத்தோடு பங்குபற்றி யாழ். சமூகத்தை நீண்டகால நோய்களிலிருந்தும் அவற்றின் பக்க விளைவுகளிலிருந்தும் காக்குமாறு அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

**இப்போட்டியின் விண்ணப்ப முடிவு திகதி 31.12.2010 வரை நீடிக்கப்பட்டுள்ளது. போட்டியில் வெற்றிபெறுபவர்கள் மற்றும் பங்கு பற்றுபவர்களுக்கும் பணப் பரிசில்கள் வழங்கவுள்ளன.**

Dr.ஹரிசாந்தி
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(அட்டவணை 1)

| உணவுக்கூறுகள் | நாள் ஒன்றுக்கு சராசரியாகத் தேவையான உணவுக் கூறுகள் | யாழ்ப்பாண உணவில் உள்ள கூறுகள் | மேலைத்தேய உணவிலுள்ள கூறுகள் |
| --- | --- | --- | --- |
| காபோவைதரேற்று | 55% | 75% | 50% |
| புரதம் | 15% | 10% | 15% |
| விற்றமின்கள் | 53mg | | |
| கனியுப்புக்கள் | 650mg | தேவையான அளவிலும் குறைவு | தேவையான அளவு |
| நார்ப்பொருள் | 20-35g | | |

(அட்டவணை 2)

| உணவுவகை | ஈரலிப்பு | சக்தி | காபோவைதரேற்று(g) | புரதம்(g) | கொழுப்பு (g) | விற்றமின் [m(g)] | கனியுப்பு [m(g)] | நார்ப்பொருள் (g) |
| --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| 1.பருப்பு வகை- பயறு, | 10.4 | 334 | 56.7 | 24 | 1.3 | 837 | 457 | 4.1 |
| கௌபி | 13.4 | 323 | 54.5 | 24 | 1.0 | 497 | 723 | 3.8 |
| 2. இலைவகை- அகத்தி | 73.1 | 93 | 11.8 | 8.4 | 1.4 | 1214 | 5870 | 2.2 |
| 3. மரக்கறி- வெண்டிக்காய் | 89.6 | 35 | 6.4 | 1.9 | 0.2 | 235 | 123 | 1.2 |
| 4. பழங்கள்- கொய்யா | 81.7 | 51 | 11.2 | 0.9 | 0.3 | 270 | 39.4 | 5.2 |
| 5. பால் -(பசுப்பால்) | 87.5 | 67 | 4.4 | 3.2 | 4.1 | 298 | 210 | - |
| 6. மீன்- சூடை | 72.8 | 119 | 2.2 | 20.3 | 3.2 | - | 744 | - |
| 7. சிங்க இறால் | 78.3 | 94 | 1.2 | 17.9 | 1.4 | 118 | 289 | - |
| 8.கோழி இறைச்சி | 72.2 | 109 | - | 25.9 | 0.6 | 140 | 270 | - |
| 9. முட்டை (வெள்ளைக்கரு) | 87.4 | 52 | 1.1 | 10.7 | 0.2 | 42 | 23 | - |

## பாவிக்கக் கூடிய பொருள்கள்

* பருப்பு வகை - துவரம்பருப்பு, மைசூர், கடலைப் பருப்பு போன்றவை.
* பயறு, கௌபி, கொண்டைக் கடலை, உழுந்து வகை,
* சோளம், சோயா, அவரை, சோயாமீற்.
* மரக்கறி (உ-ம்) வெண்டி, கத்தரி, போஞ்சி, தக்காளி, வாழைக்காய், பூசணி, கரட், பீற்றூட்.
* இலைவகை (உ-ம்) வல்லாரை, பொன்னாங்காணி, அகத்தி, முருங்கை.
* பழவகை - அப்பிள், கொய்யா, பப்பாசி, விளாம்பழம், வாழைப்பழம், தோடம்பழம், ஜம்பு.
* கோழியிறைச்சி
* மீன், சுறா, கருவாடு, இறால்
* முட்டை
* பால், தயிர், பால்மா, பன்னீர்
* வெந்தயம், கடுகு, மிளகு போன்ற வாசனைத் திரவியங்கள்
* உள்ளி, வெங்காயம், புளி, மிளகாய், நிறமூட்டிகள்
* சுவையூட்டிகள்(Sugar substitute உட்பட)

## அளவாகச் சேர்க்கப்பட வேண்டிய உணவுப் பதார்த்தங்கள்

* சூரியகாந்தி எண்ணெய், நல்லெண்ணெய்
* தேங்காய்த் துருவல்.

## தவிர்க்கப்பட வேண்டிய பொருள்கள்

* சீனி, சர்க்கரை, பனங்கட்டி, பழப்பாகு, ரின்பால், ஐசிங்சீனி போன்ற இனிப்பு வகைகள்.
* கிழங்கு வகைகள்.
* எண்ணெய்வகை (சூரியகாந்தி எண்ணெய், நல்லெண்ணெய் பாவிக்கலாம்)
* இறைச்சி வகை (கோழியிறைச்சி பாவிக்கலாம்)
* நண்டு, கணவாய்.
* சகல அரிசி வகை.
* அரிசிமா, கோதுமைமா, ஆட்டாமா, குரக்கன்மா.
* பட்டர்/ மாஜரின், நெய்.
* பலாப்பழம், மாம்பழம், திராட்சை, பேரிச்சம்பழம்.
* ரவை, சவ்வரிசி, நூடில்ஸ்.
* கச்சான்,கஜூ
* பாண் ( றஸ்க் தூள் பாவிக்கலாம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது இளையோரிடம் 'எய்ட்ஸ்' பற்றிய விழிப்புணர்வு

### இருக்கிறது

யாழ். மாவட்டத்தில் கிராமங்கள் ரீதியாகவும் நகரங்கள் ரீதியாகவும் குடும்பநல தாதியர் சேவை வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன் பல்வேறுபட்ட சமூகசேவை தனியார் நிறுவனங்களும் ஆண்கள், பெண்கள் மத்தியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தக் கூடிய வகையில் செயன்முறை ரீதியான வழிகாட்டல் கருத்தரங்குகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

ஏனைய நாடுகளைப் போல் இல்லாமல்




யாழ். மாவட்டம் கலை, கலாசாரம் பண்பாடு ஆகியவற்றிற்கு இங்குள்ள பெயர் பெற்ற பிரதேசமாகும். அதனால் மக்கள் ஆன்மீகம் உட்பட மருத்துவம் சார்ந்த கல்வி அறிவு கூடியவர்கள்.

அத்துடன் குடும்பநல தாதியர் சேவை மூலம் பிரதேசங்களில் 'எய்ட்ஸ்' நோய் தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வருகின்றார்கள். இதனால் ஏனைய நாடுகள் போல் அல்லாமல் 'எய்ட்ஸ்' நோயாளிகள் யாழ். பிரதேசத்தில் மிகக்குறைவாகும்.

தற்போது தோன்றியுள்ள "எய்ட்ஸ்' நோயாளிகள் வேறு மாவட்டங்கள், நாடுகளில் இருந்தே 'எய்ட்ஸ்' நோயை உள்வாங்கியுள்ளார்கள். இதனால் 'எய்ட்ஸ்' நோயாளிகள் யாழ். மாவட்டத்தில் குறைவு.

அத்துடன் பாடசாலைகள், கல்லூரிகள் பல்கலைக்கழகங்கள் இவற்றில் 'எய்ட்ஸ்' நோய் தொடர்பாக பாடங்கள் நடத்தப்படுவதால் இளைய சமுதாயம் உட்பட ஏனையோர் மத்தியிலும் 'எய்ட்ஸ்' நோய் தொடர்பான விழிப்புணர்வுகள் உள்ளன.

க.நிஸா

### இல்லை

இயற்கையின் சவாலிற்கு விஞ்ஞான வளர்ச்சி மனிதனிற்கு கை கொடுக்கின்றது. இளம் சமுதாயத்தினரது அறிவுப் பசியை நீக்கப் பல்வேறு வழிவகைகள் காணப்படுகின்றன. ஆனால் தமக்கு தேவையானவற்றை தேடுவதனை விடுத்து அன்னிய கலாசாரங்களிலும் தேவையற்ற விடயங்களிலும் தம் நேரத்தை கழிக்கின்றனர்.

இதன் காரணமாக எய்ட்ஸ் என்றால் என்ன என்பது பற்றிக்கூட அறியாத பலர் இன்றைய நாடுகளில் மட்டும் தான் எய்ட்ஸ் தாக்கம் அதிகமாக உள்ளது. எம் நாட்டிலும் இதன் தாக்கம் உள்ளதை யாவரும் அறிவதில்லை. அண்மையில் கூட யாழ். மாவட்டத்தில் எய்ட்ஸ் நோயாளி ஒருவர் இனம் காணப்பட்டார் என்பது யாவரும் அறிந்ததே.

எம்மையும், எமது அயலவர்களையும் இந்த நோயிலிருந்து பாதுகாக்க மருத்துவ ஆலோசனை பெறுவது மட்டுமல்லாது, 'எய்ட்ஸ்' எவ்வாறு தொற்றுக்குள்ளாகிறது போன்ற விடயங்களை அறிந்து கொள்வது மிக முக்கியமானது. ஒவ்வொரு மனிதனதும் அலட்சியமே தொற்றுக்கு காரணமாகும்.

பாலியல் தொடர்புகளால் மட்டுமே இந்தநோய் பரவுவது இல்லை என்பதனையும் அனைவரும் அறிய வேண்டும்.

இன்றைய இளம் சமுதாயத்தினருக்கு 'எய்ட்ஸ்' பற்றிய விழிப்புணர்வு காணப்படுவதில்லை என்பது மட்டுமல்லாது விழிப்புணர்வுச் செய்திகளை 'பேஸ்புக்' 'ஈ-மெயில்', கையடக்கத் தொலைபேசி போன்றவற்றில் அனுப்புவதன் மூலமே பெற்றுக் கொள்வர் காரணம் அவர்களது வாழ்க்கை இவற்றினூடாகவே மிதந்து செல்கின்றது.

"வரும்முன் காப்போம்" என்பது இவ் நோய்க்கு மிக முக்கியமானதொன்றாகும். எம்மையும், எமது அயலவர், நண்பர்களை இதிலிருந்து பாதுகாப்பதற்கு விழிப்புணர்வான சமுதாயத்தை உருவாக்க வேண்டிய கட்டாய நிலையில் நாம் உள்ளோம்.

வி.கீர்த்தனா.
சுதுமலை மேற்கு, மானிப்பாய்

# மனிதநேயம்

மனிதமே செத்து விட்ட
மானிட உலகமதில்
இதயமே இல்லாத
ஈனப் பிறவிகளாய் நாம்!

ஏட்டுக் கல்விக்காய்
ஏங்கும் ஏழைக் குழந்தை
பள்ளி வாசலில்
பரிதவித்து நிற்கிறது
கட்டவேண்டிய காரணத்தால்!

வீதிச் சந்திதனில்
விபத்தொன்று அகோரமாய்
விழுந்து கிடக்கிறது
விழுதான வயோதிபம் ஒன்று
வம்பளக்க ஆயிரம் பேர்
வைத்தியரை நாட யாருமில்லை

கண் தெரியாத் தம்பி
கையில் வெள்ளைப் பிரம்பு
மஞ்சள் கோட்டை கடக்க
மணிக்கணக்காய் காத்திருக்கிறான்
கண்ணிருந்தும் குருடராய்
கடந்து செல்கிறது சனக்கூட்டம்

ஓ மனிதமே!
ஐந்தறிவு ஜீவனிடம்
இரக்கத்தை இரவல் வாங்கி
மீதி வைக்காமல்
மிகையாய் நீ காட்டு!

மனித நேயம் பேணும்
மாண்புமிகு பணியாலே
உன்னோடு சேர்ந்து
உலகமும் உய்யட்டும்!

டிஷானி கிறிஸ்தோப்பர்,
கலைப்பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.




# விவாதமேடை

இளைய சமூகத்தின் விவாதத்திறனுக்குக் களம் அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே

**குடாநாட்டு மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளில் முக்கிய பங்கு வகிப்பது தனியார் கல்வி நிறுவனங்களா? பாடசாலைகளா?**

என்ற விவாதத்துக்கு உங்கள் கருத்துக்களை முன்வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றிபெறும் என நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

# சிந்தனைக்கு

- புத்தகங்கள் மனிதப் பிறவிகள் அல்ல. ஆயினும் அவை என்றென்றும் உயிருடன் இருக்கின்றன.
- நீங்கள் வாழ விரும்புகிறீர்களா? வாழ விரும்பினால் நேரத்தை வீணடிக்காதீர்கள். பெரிய வேலைகளைப் போலவே சிறிய வேலைகளையும் நேரம் தவறாமல் முழுமுயற்சியுடன் செய்து முடியுங்கள். ஏனெனில் வாழ்க்கை என்பது நேரத்தால் ஆனது. நாம் முழு முயற்சியுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ்ந்த நேரமே உண்மையில் நாம் வாழ்ந்த வாழ்க்கையாகும்.
- தனி மனிதனின் தனி உரிமையான சிந்தனையால் சாதிக்க முடியாதது என்று எதுவுமில்லை.
- சரியாகத் திட்டமிட்டால் முதல் முயற்சியிலேயே பாதித் தூரத்தை நிச்சயம் அடைந்து விடலாம்.
- நன்மை செய்யப் பிறந்த நாம் நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாதிருக்க வேண்டும்.



சிலையூர் தனம்

# சுதந்திரம்

சிறை என்னும் வாசத்தில்
மூழ்கியது எனது இதயம்
பத்து மாதம் பக்குவமாய் கருவில்
நான் இருந்தேன்- என்று
பூமியில் உதித்தேனோ
அன்றே அறுந்து போனது
சுதந்திரம் என்னும்
தொப்புள்கொடி
அன்றே தெரிந்திருப்பேன்
கருவிலே சிதைந்திருப்பேன்
இன்று இருளில் மூழ்கி
வெளிச்சமதைத் தேடுகிறேன்
அதுவோ என்னை விட்டு
நெடு தூரத்தில் நிற்கிறது
இலட்சியம் என்னும் விளக்கை
அடைந்துவிட்டால் இலகுவில்
வெளிச்சத்தைக் கண்டு விடலாம்
ஓ........... அதுதான் என் மனம்
இலட்சியப் பாதையைத்
தேடுகிறதோ...

செல்வி.யசிந்தா பாலச்சந்திரன்
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

# கோழிமுட்டை

கோழி வருடத்தில் 120 முதல் 150 முட்டைகள் வரை இடுகின்றது. இது அடைகாத்து குஞ்சு பொரிக்க 30 நாள்கள் எடுக்கும்.

முட்டையில் வெள்ளை, மஞ்சள் என இரு பகுதிகள் உண்டு. இதன் வெள்ளைப் பாகம் முட்டையிலிருந்து குஞ்சு வளரும் போது அவற்றின் ஆகாரத்திற்கு உதவுகின்றது. மஞ்சள் பாகத்தில் சிறிது கருமையுள்ள பாகம் தான் கோழிக்குஞ்சின் கருவாகும். இவற்றில் இருந்துதான் கோழிக் குஞ்சு உருவாகின்றது.

வெள்ளைக் கருவில் அதிகளவு சத்துக்கள் உண்டு. அதனால் தான் நோயாளிக்கு முட்டையின் வெள்ளைக் கருவை ஆகாரமாகக் கொடுக்கப்படுகின்றது.

கோழி முட்டை கோழியினால் அடைகாக்கப்படுமாயின் 21 நாள்களில் பொரிக்கும். கோழி அடை இருந்து மூன்றாவது நாளில்தான் முட்டையில் இருதயத்துடிப்பு காணப்படும்.

க.நிஸா

## இளவல்கள் வட்டம் வாக்குச்சீட்டு

**எமது இளையோரிடம் 'எய்ட்ஸ்' பற்றிய விழிப்புணர்வு**

| இருக்கிறது | | இல்லை | |
|---|---|---|---|

பெயர் :-..............................................
முகவரி:-..............................................
:-..............................................
அடையாள அட்டை இல:..............................................

உங்கள் தீர்ப்புகளை 30.12.2010 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இவ் வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் **'இளவல்கள் வட்டம்'** என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..............................................
முகவரி:-..............................................
:-..............................................
.............. ..............................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தும்புப்பொருள் உற்பத்தியில் அச்சுவேலி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

யாழ். மாவட்டத்தில் முதல் நிலையில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் அச்சுவேலி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் 350 இற்கு மேற்பட்ட உறுப்பினர்களின் (பனம்தொழில் வல்லுநர்கள்) தொழில்விருத்தி மற்றும் நலன் ஒப்பும் நடவடிக்கைகளுடன் கிராமியவங்கி புத்தகசாலை, வெஸ்ரேன்யூனியன் பணப்பரிமாற்ற சேவை, நிழற்படப் பிரதிச்சேவை, வாடகைக் கதிரைச்சேவை, மகளிர்களுக்கான தொழிற்பயிற்சிச் சேவை, போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை, பாலர் முன்பள்ளி ஊக்குவிப்பு, உறுப்பினர், பணியாளர்களின் பிள்ளைகளுக்கான கல்வி அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு சேவைத் திட்டங்ளை முன்னெடுத்து வருகின்றது.

மகளிர் அபிவிருத்தித்திட்டத்தின்கீழ் யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி வழங்கி பயிற்சிபெற்ற யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நோக்குடன் உள்ளூர் மூலப் பொருள்களைப் பயன்படுத்துவதுடன் அதனோடு இணைந்த தொழிலாளர்களுக்கான வேலைவாய்பைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் தூரநோக்குடன் தும்புப்பொருள் தொழிற்சாலையை ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்திவருகின்றது.

தும்புத் தொழிற்சாலையின் அமைவிடம் தொழில் விருத்திக்கான பின்புலத்தில் அமைந்திருப்பதோடு தொழிற்சாலை 50 பரப்பு, நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. தொழிற்சாலைக்குப் பின்புலத்தில் வல்லைப்பாலத்தோடு இணைந்த பரவைக்கடல் உள்ளது.

பரவைக்கடலில் தேங்காய் மட்டையை ஊற வைத்து பொருத்தமான முறையில் தும்பு வகைகளைப் பெறக்கூடியதாக இருக்கும். 45லட்சம் ரூபா முதலீட்டில் நிறுவப்பட்ட தும்பு உற்பத்தித் தொழிற்சாலையில் 30 யுவதிகள் தொழில் முயற்சிகளில் ஆர்வத்தோடு ஈடுபட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

தொழிற்சாலையில் தும்புத்தடி வகைகள், வீடு தூசுதட்டி, சுவர்களுக்கு நிறம்பூசும் பிறஸ் வகைகள், பாசி உரஞ்சி, நிலம் உரஞ்சி, மேசை துடைப்பான், கயிறுதிரித்தல், கால்மிதி பின்னல் உள்ளிட்ட பல்வேறு தொழில்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பனம்தும்பு, தென்னம்தும்பு ஆகியவற்றைப் பயன்படுத்தி நாளாந்தம் ஒவ்வொரு வகையிலும் 200 வரையான உருப்படிகள் தயாரிக்கப்படுவதாகத் தொழிற்சாலை மேற்பார்வையாளர் செல்வி என்.வனிதா தெரிவித்தார்.

தற்பொழுது இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் சங்கத்தின் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படுவதோடு ''ஒமேகா'' ஸ்தாபனத்துக்கூடாக சந்தைப்படுத்தல் செய்யப்படுவதாகவும் எதிர்காலத்தில் வெளிமாவட்டங்களுக்கும் எடுத்துச்சென்று விற்பனை செய்வதற்கும் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவித்த சங்கத்தின் பொதுமுகாமையாளர் பொ.செல்வராசா ''தொழிற்சாலை அமைந்துள்ள வளாகத்தில் பல்வேறு கைத்தொழில் முயற்சிகளை உள்ளூர் மூலப்பொருள்களை கொண்டு மேற்கொள்ள விருப்பதாகவும் அதற்கான முன்மொழிவுகள் தொழில்நுட்ப ஆலோசனைகள் பரிசீலனையில் இருப்பதாகவும், இந்தவகையில் நூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கமுடியும் என மேலும் தெரிவித்தார்.



கவர்ச்சிகரமான அமைப்புடன் கூடிய தரமான தயாரிப்புக்கள் இங்கு இடம்பெறுகின்றன. வெளிமாவட்டங்களில் இருந்து எடுத்துவரப்படுவன வற்றோடு ஒப்பிடும் போது நீண்டகாலப் பாவனையுடன் கூடியது எனக் கூறப்படுகின்றது.

தொழிற்சாலையின் உற்பத்திப் பொருள்களுக்கு உள்ளூரில் நல்ல வரவேற்பு இருப்பதாகவும் உரிய தரக்கட்டுப்பாட்டுடன் தரமான முறையில் உறுதியானவையாகத் தயாரிக்கப்படுவதால் உற்பத்திச் செலவு கூடியதாக இருந்தாலும் பணிபுரியும் அனைவருக்கும் பொருத்தமான அளவு ஊதியம் வழங்கப்படுவதோடு சேமிப்புப் பழக்கத்தோடு கூடியதாக கிராமிய வங்கிக்கு ஊடாகக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவ தாக உற்பத்தி முகாமையாளர் கி. வரதராசன் தெரி வித்தார்.


தொழிற்சாலையின் எதிர்காலம் தூரநோக்கோடும் கிராமிய மட்டத்தில் இளைஞர், யுவதிகளின் குறிப்பாக சங்கத்தின் உறுப்பினர்களர்ன ''பனம் தொழில் வல்லுஞர்களின்'' குடும்ப உறுப்பினர்களுக்கு முன்னுரமையுடன் வழங்கி முன்னெடுக்கப்பட்டு வருவதோடு எதிர்கால வளர்ச்சியை நோக்கியதாக உள்ளது. தொழிற்சாலையின் வளர்ச்சி நவீன தொழில் நுட்ப உத்திகளுடன் கூடியதாக மேலும் முன்னெடுக்கப்படுவது குறித்த நோக்கத்தின் உயர் எல்லையை எட்டக்கூடியதாக இருக்கும். தொடர்ந்தும் இச் சங்கத்தின் புதிய தொழில் முயற்சிகளுக்கு அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் பொருத்தமான உதவிகளை வழங்க முன்வரவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

*(முற்றும்)*

# வல்லைப் பரவைக்கடல் மீன்பிடி

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

தொகுப்பு: ஞான ஆதவன்.



வல்லைப் பரவைக்கடலில் பெரும் பகுதி மாரி காலத்தில் கடலாகவும் கோடையில் மேய்ச்சல் தரவையாகவும் காணப்படும் நிலப்பரப்பாகும். வருடத்தில் பெரும்பகுதி உவர் நிலமாகவும் வைகாசி, ஆனி மாதங்களில் உப்பு விளை நிலமாகவும் விளங்கும். இயற்கையான நிலவுருவம் அதன் சுற்றாடலில் உள்ளவருக்கு கணிசமான அளவு வருமானம் தரும் தொழில் வாய்ப்பையும் மாமிசப் பிரியர்களுக்கு மாறுபட்ட சுவையுடன் கூடிய கடல் உணவு வகைகளையும் வழங்கி வருவது இயற்கையின் கொடையாகும்.

வல்லைப் பரவைக் கடல் மீன்பிடியில் நவீன கடற்றொழில் உத்திகளுக்கோ படகு, கட்டுமரம் போன்ற மீன்பிடிச் சாதனங்க ளுக்கோ இடமே இல்லை. முழுவதும் மரபு ரீதியி லான மீன்பிடிச் சாதனங்கள், மனித முயற்சியுடன் கூடியதாகப் பயன்படுத்தப்பட்டு வருவது உண்டு. அங்கு வீச்சு வலையாகவும் படுக்கை வலையாக வும் பயன்படுத்தப்படும் ''நைலோன்'' வலை மட்டும்தான் வெளியில் இருந்து பெறப்படுவது. மற்றவை எல்லாம் உள்ளூரில் பெறப்படுபவை.

சம்பந்தப் பட்ட தொழிலாளர்களின் முயற்சியின் வெளிப்பாட் டால் உருவாக்கப்படுபவை.

தென்னோலை, தென்னோலையில் இருந்து பெறப்படும் ஈர்க்கு, ஈச்சம்மட்டை, தாழைவிழுது நார், சூழலில் கிடைக்கும் புல்லாந்திச் செடியின் கம்புத்தடி மற்றும் சிறுகம்புகள், பனை ஓலையினால் பின்னப்படும் மீன் வைக்கும் கூடை, இது தற்பொழுது மறைந்து உரப்பசளை எடுத்துவரப்படும் ''பை'' என்பன பயன்படுத்தப்படுகின்றன. நூற்றுக்கு நூறு வீதம் மனிதவலுவுடன் கூடிய இந்த மீன்பிடி முயற்சியில் பிடிக்கப்படும் மீன்வகை ஜஸ் மற்றும் இரசாயனக் கலவைகளுக்கு உட்படாமல் துடிக்கத்துடிக்கச் சந்தைப்படுத்தப்படுவதும் அதன்சுவைக்கு சிறப்பாக உரிய காரணமாகும்.

வல்லைப்பரவைக் கடலில் மீன்பிடிக்கப்படும் இடங்களுக்கும், கண்டிகளுக்கும் இடப்பெயரும் காரணப்பெயரும் பயன்படுத்தப்படுவது உண்டு. அடி யாறு, உப்புக்கழி , மேற்கு மாதுவில், கிழக்கு மாதுவில் ஆனைபிரிகல்லு, பாலத்தடி, முன்வளை கண்டி, பின்வளைகண்டி, அலவாய்க்கடல், பருக்கு வெட்டி, முழக்கன், வாய்க்கால், மண்டான், மலையடி, பாலையடி, ஒற்றைப்பனை, காட்டுவாய்க்கால், பேராறு உள்ளிட்ட பல பெயர்களில் வழங்குவது உண்டு. தற்பொழுது இந்தப் பெயர்வகைகூட மறைந்து செல்கின்றன.

வல்லைப் பரவைக்கடல் மீன்பிடியில் அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர்ப் பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு வழிவழியாக சந்ததி உரிமை பேணப்பட்டதோடு, ஆங்கிலேயரது ஆட்சிக் காலத்தில் அந்த உரிமைகளுக்கு உறுதிகள் மற்றும் பதிவுகளும் உண்டு. இந்தக் கடலில் மீன்பிடிப்பது யாழ். குடாநாட்டின் மரபு ரீதியிலான '' சாதி குலம்'' சார்ந்த தொழில் முறையை கடந்து அந்தணர் அல்லாத மாமிசம் உண்ணும் சகல தரப்பினராலும் ஆரம்ப காலத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்ததாகவும், அது சுயதேவையை அடிப்படையாகக் கொண்டு நாளாந்த உணவுக்காக எல்லோரும் பயன்படுத்தியதாகவும் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக ஆரம்பகாலப் பதிவுகளில் உள்ளது என்றும் பிற் காலத்தில் உரிமைகள் பணக் கொடுப்பனவுகளுடன் கைமாறியதாகவும் கூறப்படுகின்றது. இதனை அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த 76 வயதிலும் பகுதிநேர மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வரும் து.குணராசா பொருத்தமான ஆதாரங்களுடன் முன் வைத்தார்.

குறித்த காலப்பகுதியில் பரவைக்கடல் மீன்பிடி தொடர்பான அடிபிடி சண்டைகளும், தலைமைக்காரர்களின் சமாதானத் தீர்வுகளும், நடுத்தீர்ப்புக்களும் மேற்கொள்ளப்பட்டதோடு அவை தற்பொழுது நடைமுறையில் உள்ளன.

சமகாலத்திலும் கண்டி அமைக்கும் இடங்களில் படுக்கை வலை விரிப்பது, வலை வீசுவது குறித்த எல்லையை மீறி மீன்பிடியில் ஈடுபடுவது தொடர்பாக பிணக்கு கள், கைப் பரிமாறல்கள் ஏற்படாமல் இல்லை.

வல்லைப் பரவைக் கடல் மீன்பிடியில் ஈடுபடும் தொழிலாளர்கள் தமது உரிமைகளையும் தொண்டு நிறுவனங்கள் இடையே உதவிகளையும் பெறுவதைக் கருத்தில் கொண்டு ''பரவைக் கடல் மீன்பிடித் தொழிலாளர்சங்கங்களை'' உருவாக்கி நிர்வகித்து வருகின்றனர். இந்த வகையில் அச்சுவேலியிலும், புத்தூர், ஆவரங்கால் பகுதிகளை உள்ளடக்கியும் தனித்தனியாகச் சில அமைப்புக்கள் செயற்படுகின்றன.

இந்த அமைப்புக்களில் உறுப்புரிமை பெற்றவர்களுக்குச் சில உதவிகளைத் தொண்டு நிறுவனங்கள் வழங்கியுள்ளபோதிலும் தொடர்ந்து காத்திரமான உதவிகள் கிடைப்பதில்லை எனக் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆழம் குறைந்த ஆபத்து இல்லாத பரவைக்கடலில் தனிமனித சுய முயற்சியாக மேற்கொள்ளப்படும் தொழில் முயற்சிக்குப் பொருத்தமான முறையில் தொழில்நுட்ப ஆலோசனை வழிகாட்டலும் உதவிகளும் வழங்கினால் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் மேலும் உயர்வடையும்.

*(முற்றும்).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பக்கற்றில் விட்டமின் A,D தேவையை நிறைவு செய்யும் றிச்லைட் பால் மா அறிமுகம்



உடல் ஆரோக்கியத்துக்குத் தேவையான விட்ட மின் A,D வேண்டிய அளவு அடங்கிய செழுமையான றிச்லைஃப் பால் மா இப்போது புதிய பக்கற்றுக்களில் அறிமுகம் செய்யப் பட்டுள்ளது.

அறிமுக நிகழ்வு சமீபத்தில் கொழும்பிலுள்ள கால்நடை அபி விருத்தி அலுவலகத்தில் நடை பெற்றது.

புதிய நீல நிறப் பைக்கட்டில் பால் மா பொதி செய்யப் பட்டுள்ளது. அதை றிச்லைஃப் நிறு வனத்தின் தலை வர் குமார் பெரேரா, கால்நடை அபிவி ருத்தி அமைச்சர் ஆறுமுகம் தொண் டமானுக்கு வழங் கினார்.

புதிய பக்கற்றுக் களில் உள்ள பால் மா முற்று முழுதாக உள்நாட்டு பால் பண்ணையாளர் களிடமிருந்து அதியுயர் தரத்திற்கமையக் கொள்வனவு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்டதாகும். இந்தப் பாலில் சேர்க்கப்படும் விட்ட மின் A மற்றும் D யை விநியோகிப்பது உலகப் புகழ்பெற்ற DSM நிறு வனமாகும்.

- றிச்லைஃப் பசும்பாலில் 3.5 வீதம் கொழுப்பு அடங்கியுள்ளதன் கார ணமாகப் பாலின் செழுமை அதி கரித்துக் காணப்படுவதுடன் பாற் செறிவும் போஷாக்கும் அதிக மாக உள்ளமை விசேட அம்சமாகும்.

உலகில் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள உணவு தயா ரிப்பு முறைகளில் ஒன்றான 'அல்ட்ரா ஹை ரெம்பரேச்சர்' முறைப்படி றிச்லைஃவ் பசும்பால் தயாரிக்கப் படுவதால் அது நீண்ட நாள்கள் காலாவதியாகாமல் இருக்கும்.

றிச்லைஃப் 1 லீற்றர் மற்றும் 200 மி.லீ. பக்கட்டுகளில் சந்தையில் கிடைக்கிறது.

இலங்கையின் முன்னணி பசும் பால் தயாரிப்பு நிறுவனமான, றிச் லைஃவ் டெய றிஸ் நிறுவனம், தமது தயாரிப்புகளின் பாது காப்புத் தன்மையைப் பேணுவதற்காக ISO 22000:2008 சர்வதேச தரச் சான்றி தழையும் பெற்றுள்ளது.

# கிருமிகளிலிருந்து பூரண பாதுகாப்பு அளிக்கும் புதிய டெட்டோல் சோப்

கிருமிகளிலிருந்து பூரண பாதுகாப்பு அளிக்கும் புதிய டெட் டோல் சோப் வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

கிருமிகளை எதிர்த்துப் போராடுவதற்குச் சர்வதேச ரீதியில் பெயர்பெற்ற டெட்டோல் சோப்வகைகளின் தயாரிப்பாளர்க ளான ''றெக் கிட்பென்கீசர்'' நிறுவனத்தினரே இந்தப் புதிய சோப் வகைகளை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

புதிய டெட்டோல் சோப் வகைகள் கையாள்வதற்கு இலகுவான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளதால் பாவனையாளர்கள் எவ்வித சிரமமும் இன்றி இச் சோப் கட்டியை உபயோகிக்கமுடியும்.

அத்துடன் புதிய நறுமணமும் நுரைக்கும் தன்மையும் பாவ னையாளர்களுக்குப் புத்துணர்வான குளியலை வழங்குகின்றன.

அனைத்து இலங்கையர்களினதும் நன்மதிப்பை வென்ற டெட்டோல், நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் கிருமிகளின் தாக்கங்களுக்கு எதிராகப் போராடுகிறது.

''றெக்கிட் பென்கீசர்'' நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப் பாளர் ரியாகல் சௌத்திரி கருத்துத் தெரிவிக்கையில்,

''இலங்கையின் தாய்மார்களின் மனதை வென்ற தயாரிப்பாக மட்டும் டெட்டோல் திகழாமல் இலங்கையில் அறிமுகமான பல புதிய தயாரிப்புகளில் முன்னணியில் திகழ்கின்றமையும் குறிப் பிடத்தக்கது'' என்றார்.

டெட்டோல் சோப் தயாரிப்புகளுக்கு மேலதிகமாகச் சந்தையில் டெட்டோல் அன்டிசெப்டிக் லிக்விட், ஹான்ட்வோஷ், பிளாஸ்டர், ஷேவிங் கிறீம் போன்ற தயாரிப்புகளும் காணப்படுகின்றன.

# Alfa மோட்டார் சைக்கிள் சவாரி செலவு கிலோ மீட்டருக்கு 20 சதம்

Alfa Plus மற்றும் Alfa Smart என்று இரு வகை மோட்டார் சைக் கிள்களை இலங்கையில் இலத் திரனியல் மோட்டார் சைக்கிள் களை அறிமுகப்படுத் துவதற்குப் பெயர் பெற்ற விண்டி டிரே டிங் (Vindy Trading) நிறுவனம் புதிதாக அறிமுகப்படுத் தியிருக்கிறது.



இவற்றில் பிரயா ணம் செய்வதற்குச் செலவு மிகவும் குறைவு. ஒரு கிலோ மீட்ட ருக்கு ஆக 20 சதம் மட்டுந்தான் என்று தெரிவிக் கப்படுகிறது.

இந்த நவீன மோட்டார் சைக் கிள்கள் 4 ஸ்ட்ரோக் பெற்றோல் என்ஜின்களைக் கொண்டவை.

மின்சார சக்தியில் இயங்கக் கூடிய வகையிலும் அல்பா பிளஸ், அல்பா சிமார்ட் ஆகிய இரு ரக மோட்டார் சைக்கிள்களும் தயா ரிக்கப்பட்டுள்ளன. சிக்கன சவாரி வேண்டுமானால் மின்சார சக்தியில் மோட்டார் சைக்கிள் களை ஓட வைக்கலாம். மின்சார சக்தியில் மோட்டார் சைக்கிள் ஓடும் போது ஒரு கிலோ மீட் டருக்கு 20 சதம் மட்டுமே செல வாகும்.

மின்கலங்களில் பூரணமாக மின்சாரம் சேமிக்கப்பட்ட நிலை யில் மோட்டார் சைக் கிள்கள் 55 கிலோ மீற்றர் தொடக்கம் 60 கிலோ மீற்றர் வரை பயணிக்கக் கூடியவை.

இதில் முக்கிய சிறப் பம்சம் எதுவெனில் வீட்டிலே கையடக் கத் தொலைபேசிக ளுக்கு மின்சாரத்தைப் பெற்று சேமிப்பது போன்று இந்த மோட் டார் சைக்கிள்களின் பட்டறித் (மின்கலம்) தொகுதிகளுக்கும் மின்சாரத்தைப் பெற்று பூர ணப்படுத்திச் சேமித்துக் கொள்ள லாம்.

இந்தக் கலப்பு மோட்டார் சைக் கிள்களில் இன்னொரு நன்மை யும் உண்டு. இவை 60 கிலோ மீற்றர்கள் ஓடி நின்ற பின்னர் மின்சாரம் நிரப்பப்படாத நிலை யில் பெற்றோல் எஞ்ஜினை இயக்கி மீதித்தூரத்தைக் கடக் கலாம். விண்டி டிரேடிங் கம்பனி யின் காட்சியறை கொழும்பு பொரளை குறுக்கு வீதி 20ஆம் இலக்கத் தில் உள்ளது.

# கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பிரதான தளத்திற்கு முன்னேறும் CDB

அண்மையில் கொழும்புப் பங் குப் பரிவர்த்தனை நிலையத் தில் பிரவேசித்த சிட்டி ஸ்ன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினா ன்ஸ் லிமிட்டட் (CDB) நிறுவ னம் 2010 டிசம்பர் 3ஆம் திகதி யிலிருந்து கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் பிரதான தளத்தில் (Main Board) பட்டியல் இடும் வகையில் தரமுயர்த் தப்பட்டுள்ளது.

CDB நிறுவனத்தின் 39, 685.048 பங்குகள் 2010 ஒக்டோ பர் 06ஆம் திகதி கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட் டியலிடப்பட்டன. தற்போது CDB நிறுவனத்தினது சந்தை மூலதனவாக்கம் சுமார் 2 பில்லி யன் ரூபாவாகக் காணப்படு கின்றது.

CDB ஆனது பட்டியலிடப் பட்ட நிறுவனமாக மாறியுள் ளமை தொடர்பாகத் தனது உணர் வலைகளை வெளிப்படுத் திய CDB இன் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியு மான மஹேஷ் நாணயக்கார ''யுத்தத்திற்குப் பின்னரான புதியதொரு தசாப்தத்தில் இலங் கைப் பொருளாதாரத்தின் போக் கினைப் பிரதிபலிக்கும் முக்கிய அடையாளங்க ளுள் ஒன்றாக கொழும்புப் பங்குச்சந்தையின் செயற் பாடு காணப்படுகின்றது.



வர்த்தக நிறுவனங் கள் தமது நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் பொருட்டு தமக்குத் தேவையான மூலதனத்தைத் திரட்டிக் கொள்வதற்கான மிகச் சிறந்த வழிமுறையைப் பங்குச்சந்தை வழங்கு கின்றது. அதன் மூலம், பொருளாதார வளர்ச்சிக்கு வலுவூட்டப்படுவதுடன் வேலை வாய்ப்புக்களை உருவாக்கவும் முடிகின் றது'' என்றார்.

நிதி வசதியளித்தல் மற் றும் கடன் வழங்குதல் ஆகிய வற்றில் கிராமிய மற்றும் நகர்த் துறைகளை ஒன்றாக இணைத் துள்ள CDB நிறுவனத்தின் வர்த் தக மாதிரியானது அந்நிறுவனத் தைக் கிராமியத் துறையினருக் கான மொத்த நிதி வசதியளிக் கும் நிறுவனமாக நிலை நிறுத் தியுள்ளதுடன், கிராமிய மற்றும் நகர்ப்புறத் துறைகள் இரண் டும் பிரமாண்டமான வளர்ச் சியை எட்டுவதற்கான சக்தி யையும் அளிக்கின்றது. இல ங்கை மத்திய வங்கியில் நிதிக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள, ஒழுங் குபடுத்தப்பட்ட 36 நிதி நிறு வனங்களிடையே மொத்தச் சொத்துக்களின் அடிப்படை யில் தற்போது CDB நிறுவனம் 7ஆவது இடத்தில் உள்ளது.

# ஜனசக்தியின் விளையாட்டு காப்புறுதித் திட்ட ஆரம்பவிழா

இலங்கையிலுள்ள அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் நன்மை யளிக்கக் கூடிய இணையற்ற விளையாட்டுக் காப்புறுதித் திட் டம் ஒன்றினை ஜனசக்தி இன் சூரன்ஸ் பி.எல்.சி. நிறுவனம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளது.

விளையாட்டில் ஏற்படும் காயங்கள், விளையாடும்போது ஏற்படும் காயங்களுக்கான வைத்தியசாலைச் சிகிச்சைச் செலவுகள், வீட்டில் சிகிச்சை அளிப்பதற்கான செலவுகள், மாணவர்களுக்கு நன்மைய ளிக்கும் உதவிகள் ஆகியவற்றை இந்தக் காப்புறுதித் திட்டம் வழங்குகின்றது. இவற்றுடன் பெற்றோருக்கு ஏற்படும் அசௌ கரியத்தைப் போக்கும் வகையி லான நன்மைகளையும் இத்திட் டம் வழங்குகின்றது.

விளையாட்டு வீரர்களுக் கான இந்தப் பாதுகாப்புத் திட் டம் ரக்பி, ஹொக்கி, கால்பந்து, கிரிக்கெட், மெய்வல்லுனர், பூப்பந்தாட்டம், கூடைப்பந்து, உள்ளக் கிரிக்கெட், ஓட்டப் போட்டி, ஸ்னூக்கர், சைக்கி ளோட்டம், கோல்ப், சாகசம், மரத னோட்டம், வலைப்பந்தாட் டம், படகோட்டம், ஸ்குவாஷ், நீர்ச்சறுக்கு விளையாட்டு, நீச்சல், டெனிஸ், ஒருங்கிணை ந்த போட்டிகள், கரப்பந்தாட் டம், வேகநடை, (பந்தயம் மட் டும்), நீர்ப் பந்தாட்டம் மற்றும் சக்கர நாற்காலியைப் பயன்படுத் தும் டெனிஸ்/ கூடைப்பந் தாட்டம் என பரந்தளவிலான விளையாட்டுகளுக்கான காப்புறு தியை வழங்கும்.

இந்தக் காப்புறுதித் திட்டம் ஒரு விளையாட்டு வீரனுக்கு ஏற்படக்கூடிய விபத்து, மரணம், நிரந்தர அங்கவீனம் மற்றும் நிரந்தர பகுதியளவிலான அங்கவீனம் போன்றவற்றி னால் உருவாகும் இழப்பினை ஈடுசெய்யும். இதற்கு மேலதி கமாகக் காப்புறுதி செய்துகொண்ட நபர் விளையாட்டில் ஈடுபடும் போதோ, விளையாடச் செல் லும் போதோ அல்லது திரும்பி வரும் போதோ அல்லது பயிற் சிக்குச் செல்லும் போதோ, விபத்து சம்பவித்து சிகிச்சைக் காக மருத்துவமனையில் சேர்க் கப்பட நேர்ந்தால், அவருக்கு மேற்கொள்ளப்படும் சிகிச்சை களுக்காக ரூபா 1,00, 000 பெறு மதியான மருத்துவ செலவுக் கொடுப்பனவுகளையும் இத் திட்டம் உள்ளடக்கியுள்ளது.




ஜனசக்தி காப்புறுதிக் கொள் [illegible] ஒருத்த நபர் வீட்டில் சிகிச்சை பெறு வதற்கான சேவைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஒரு மருத் துவ பராமரிப்பு முகவர் நிறு வனத்திற்கு வழங்கி வந்த கொடுப்பனவுகளும் காப்புறுதி நிறுவனத்தால் வழங்கப்படும்.

ஜனசக்தி காப்புறுதிக் கொள் கையின் மேலதிக நன்மைகளா வன மாணவர்களுக்கான உதவி, வீட்டில் சிகிச்சை அளிப்பதற் கான செலவுகள், பெற்றோருக்கு ஏற்படும் அசௌகரியங்களுக் கான கொடுப்பனவு மற்றும் பிசியோதெரபி என்பனவாகும்.



முதலாவது ஜனசக்தி விளையாட்டுக் காப்புறுதியை இலங்கை நட்சத் திரக் கிரிக்கெட் வீரர் களில் ஒருவரான அஜந்தா மென்டிஸுக்கு ஜன சக்தி பொது முகாமையாளரும் சந்தைப்படுத்தல் முகாமையாளருமான ரவி லியனகே (இடமிருந்து மூன்றாமவர்) வழங்குகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும்போதே எழுத்தாளர்களை நாம் கௌரவிக்க வேண்டும்

## திருமலை நூல் வெளியீட்டு விழாவில் உரை

திருகோணமலை, டிசெ.23

எழுத்தாளர்களை அவர்கள் வாழும்போதே கௌரவித்து ஊக்கப்படுத்த வேண்டும். அதுதான் அவர்களது பணிக்கு நாம் செய்யும் நன்றிக் கடனாகும் என்று எழுத்தாளரும், இலக்கிய ஆர்வலருமான தமிழ்மணி அகளங்கன் தமது உரையில் தெரிவித்தார்.

கவிஞர் நிலா தமிழின் தாசன் எழுதிய 'நெருப்புக்கிடையே நீந்தும் நிலாக்கள்' குறுங்காவியம், 'இளைஞர்கள் ஏற்கவேண்டிய சபதம்' கவிதைத் தொகுதி ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழாவில் அவர் நயப்புரை யாற்றினார்.

திருகோணமலை நகராண்மைக்கழகப் பொது நூலக கேட்போர் கூடத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை இவ்வெளியீட்டு விழா இடம்பெற்றது.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நிலா தமிழின்தாசன். திருகோணமலை மண்ணின் நிலாவெளியூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அவர் எழுதிய இந்த இரு நூல்களும் தமிழ் மக்களின் துயரங்கள் பற்றிய பதிவுகளாக இடம்பெற்றுள்ளன.

நெருப்புக்கு இடையே நீந்தும் நிலாக்கள் மூலம் 1983 ஆம் ஆண்டில் சுவாலை விட்டெரிந்த ஜூலைக் கலவரத்தின் பயங்கரத்தைப் பதிவு செய்துள்ளார். இவ்வாறான திறமை உள்ளவர்களை ஊக்கப்படுத்தவேண்டும்- என்றார்.

இந்த நிகழ்வில் வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி, கலாசார பண்பாட்டலுவல்கள் அமைச்சின் முன்னாள் செயலாளர் சுந்தரம் டிவகலால பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

சிரேஷ்டசட்டத்தரணி ஆஜெகசோதி இவ்வெளியீட்டு விழாவுக்குத் தலைமை வகித்தார். கவிஞர் க.கோணேஸ்வரன் நூல் அறிவுரையும் கவிஞர் கே.எம்.எம்.இக்பால் விமர்சனவுரையும் நிகழ்த்தினர். (ளி)




# தங்கத்துடன் இரு பெண்கள் விமான நிலையத்தில் கைது

அம்பாறை, டிசெ.23

ஐம்பத்தி இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தைக் கடத்தி வந்த அம்பாறைப் பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பெண்கள் கடந்த 19ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பெண்கள் சவூதியிலிருந்து இலங்கை திரும்பிய வழியிலேயே அவர்கள் திருட்டுத்தனமாகத் தங்கத்தைக் கடத்தி வர முயன்றுள்ளனர் என விமான நிலைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட தங்கம் சுமார் ஒன்றரைக் கிலோவுக்கும் அதிகமான எடையைக் கொண்டிருந்ததுடன் செயின், கைச்செயின், வளையல் என்பனவும் அவற்றில் உள்ளடங்கியிருந்துள்ளன.

கைது செய்யப்பட்ட பெண்களில் ஒருவர் 60 வயதானவர் என்றும் மற்றையவர் நடுத்தர வயதினர் என்றும் மேலதிக தகவல்கள் தெரிவிக் கின்றன. கைப்பற்றப்பட்ட தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர் என அறிய வருகின்றது. (ளி)

# மாகாண சபை உறுப்பினர்களின் காவலர்கள் வெளிமாவட்டங்களில் ஆயுதம் வைத்திருக்கத் தடை

மட்டக்களப்பு, டிசெ.23

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்யும்போது அவர்களின் பாதுகாப்புக்கு நியமிக்கப்பட்டுள்ள பொலிஸார் ஆயுதங்களை அவ்வப் பகுதிப் பொலிஸ் நிலையங்களில் ஒப்படைத்துவிட்டுச் செல்ல வேண்டுமெனப் பணிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை, மாகாண சபை உறுப்பினர்களின் பாதுகாப்புக்கு நியமிக்கப்பட்டுள்ள பொலிஸார் மாகாணசபை உறுப்பினர்கள் சகிதம் வெளியிடங்களுக்குச் செல்லும்போது பொலிஸ் நிலையத்தில் அறிவித்துவிட்டுச் செல்லும் நடைமுறை இருந்தது.

இது குறித்து மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரட்ணம் கூறுகையில், மாகாண சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக திருமலைக்குச் செல்வது குறித்து மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் அறிவித்துவிட்டு வருமாறு தனது பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டுள்ள பொலிஸாரைப் பணித்தபோது, ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டுச் செல்லுமாறு பொலிஸ் நிலைய அதிகாரிகள் கூறினர் எனத் தெரிவித்தார்.

மட்டக்களப்புக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடமும் பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபரிடமும் தான் இது குறித்துக் கேட்டபோது இது மேலிடத்து உத்தரவு எனப் பதிலளிக்கப்பட்டது என்றும் இரா.துரைரட்ணம் தெரிவித்தார். (ளி)

# இஸ்லாமியக் கலாசார நிலைய நிர்மாணப் பணிகள் முடக்கம்

அம்பாறை, டிசெ.23

அம்பாறை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட இஸ்லாமிய கலாசார நிலைய நிர்மாணப் பணிகள் நீண்ட காலமாக முடங்கிப் போயுள்ளன. இதனால் இதுவரை எழுப்பப்பட்ட கட்டடம் சிதைந்துபோகும் நிலையில் உள்ளது எனக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் அம்பாறை மாவட்டத்தின் காரைதீவுப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மாவடிப்பள்ளியில் இக்கலாசார நிலைய நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது பணிகள் கைவிடப்பட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

அம்பாறை மாவட்டத்தில் இஸ்லாமிய கலாசார விழுமியங்களைப் பாதுகாப்பதற்கும், பேணுவதற்குமான நீண்டகாலக் கோரிக்கையின் பயனாக இந்த நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் பூர்த்தி செய்யப்படவில்லை எனப் பலரும் வருத்தம் தெரிவிக்கின்றனர்.

இக்கலாசார நிலையத்தின் எஞ்சியுள்ள நிர்மாணப் பணிகளை உடனடியாகப் பூர்த்தி செய்வதற்கு முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களம் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (ளி)

# பெருந்தோட்ட மக்களின் வீடமைப்புக்கு தோட்டக் கம்பனிகள் தடையிடக் கூடாது

## பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.23

பெரும் தோட்டத் தொழிலாளர்கள் தமது குடியிருப்புகளை தற் போதுள்ள நவீன காலத்திற்கு ஏற்ப, அவர்களது சொந்தப் பணத்தில் நவீன துறையில் அமைத்துக் கொள்ள தோட்ட முகாமையாளரோ அல்லது தோட்டக் கம்பனிகளோ தடை விதிக்கக் கூடாது எனப் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தொழிலாளர்கள் தமது சொந்தப் பணத்திலேயே அவர்களது குடியிருப்புகளை திருத்திக் கட்டுகின்றனர். அதை தடுத்து நிறுத்த யாருக்கும் அதிகாரம் இல்லை.

அவர்கள் தோட்ட லயன் குடியிருப்புகளில் 185 ஆண்டுகள் வாழ்ந்து விட்டனர். அவர்கள் பத்தடி காம்பராக்க்ளிலேயே வாழ்ந்து வந்தனர். தற்போது குடும்பங்கள் பெருத்து விட்டதால் அவர்களது குடியிருப்புகளை அவர்களே முன்வந்து அமைத்துக் கொள்வதை யாரும் தடுக்க முடியாது.

தோட்டக் குடியிருப்புகள் யாவும் தோட்ட நிர்வாகத்திற்கு உரித்தானது எனத் தோட்ட கம்பனிகள் தெரிவிக்கின்றன.

ஆனால் தோட்டத் தொழிலாளர்கள் சார்ந்த தொழிற்சங்கம் என்ற வகையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பெருந்தோட்டப் பகுதியில் சொந்தப் பணத்தைக் கொண்டு மனைகளைத் திருத்துபவர்களுக்கு உதவி செய்யும் - இவ்வாறு முத்துசிவலிங்கம் தெரிவித்தார். (ளி)

# முஸ்லிம்களின் கலாசாரத்திற்கு அரசு குந்தகம் விளைவிக்காது

## அமைச்சர் எஸ்.பி.கெலிஓயாவில் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.23

முஸ்லிம்களின் கலாசாரத்திற்குக் குந்தகமாக எந்தவித நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளாது -என அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை கெலிஓயா கலுகமுவ தரீக்காக்கள் சம்மேளனம் நடத்திய பாராட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:- முஸ்லிம்கள் மத கலாசார, பண்பாடுகளை மிகவும் இறுக்கமாகப் பின்பற்றுபவர்கள். ஒவ்வொரு சமூகமும் எந்த வொரு சந்தர்ப்பத்திலும் தமது சமய, கலாசார விடயங்கள் தொடர்பாக எச்சரிக்கையுடன் இருப்பதில் தவறில்லை.

ஒவ்வொரு மனிதனுக்கும் சமயம் முக்கியமாகும். சமயத்தை கலாசாரத்தை பின்பற்றாத மனிதன் வழி தவறுவது நிச்சயம். எந்தவொரு மதத்தையும் பின்பற்றாத மனிதன் கூட ஒரு மரத்தையாவது வணங்க வேண்டும் என்பதே எனது அபிப்பிராயமாகும் - இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார். (ளி)

# நூறு கோடி ரூபா பெரும் முதலீட்டுடன் ஹாலிஎலவில் குடிதண்ணீர்த் திட்டம்

கொழும்பு, டிசெ.23

ஹாலிஎல பிரதேசத்தில் ஹாலிஎல, போக ஹாமடின்ன, ஜயந்திபுர, சிங்கபுர, அபயபுர உள்ளிட்ட பல பகுதிகளுக்குக் குடிதண்ணீர் வழங்குவதற்காக 100 கோடி ரூபா முதலீட்டில் பெரும் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் மூலம் சுமார் ஆயிரம் தண்ணீர் இணைப்புகள் மேற்கொள்ளப்படு மென அரச நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் பிரதி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

பதுளை தேசிய நீர் வழங்கல் முகாமைத்துவ சபையின் பிரதிப் பொது முகாமையாளர் ருவன் லியனகேயின் நேரடிக்




கண்காணிப்பின் கீழ் அச்சபையின் உதவிப் பொறியியலாளர் சரத் ரணசிங்கவின் மேற்பார்வையில் இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (ளி)

# குருநாகலில் 21,000 சாரதிகள் போக்குவரத்து விதிகளை மீறியுள்ளனர்

குருநாகல்,டிசெ. 23

இந்த வருடத்தின் கடந்த 11 மாதங்களில் குருநாகல் பொலிஸ் வலயத்தில் போக்குவரத்து ஒழுங்கு விதிகளை மீறிய 21,000 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் குருநாகல் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களுள் 14,625 பேர் மதுபோதையில் வாகனம் செலுத்தியமைக்காவும், 6,215 பேர் போக்குவரத்து ஒழுங்கு விதிகளை மீறியதற்காகவும், 118 பேர் கவனயீனமாக வாகனங்களைச் செலுத்தியமைக்காகவும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இவ்வருடத்தில் விபத்துகளால் உயிரிழந்தோரின் தொகை அதிகரித்துள்ளது.

அதிக மதுபோதையுடன் அல்லது கவனயீனமாக வாகனங்களைச் செலுத்தியதாலும், போக்குவரத்து விதிகளை மீறியதாலுமே மரணங்கள் அதிகரித்துள்ளன எனக் குருநாகல் வலயப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பதிகாரி சன்ன வேத்தேவ சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த வருடம் 98 விபத்து மரணங்கள் நிகழ்ந்துள்ளன. இவ்வருடத்தின் 11 மாதங்களில் மட்டும் 118 மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

குருநாகல் பொலிஸ் வலயத்துக்குட்பட்ட கொகரெல்ல பிரதேசங்களிலேயே அதிகப்படியான விபத்து மரணங்கள் நடந்துள்ளன.

இவ்வருடம் ஜனவரி முதல் நவம்பர் வரை போக்குவரத்து ஒழுங்கு விதிகளை மீறிய 4,715 சாரதிகள் கைதாகியுள்ளனர். இவர்களிடமிருந்து 14,61,52, 95 ரூபா அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது. இக்காலப் பகுதியில் 252 மோசமான விபத்துகள் நடந்துள்ளன. அவ்விபத்து களில் 118 பேர் உயிரிழந்துள்ளனர். 395 பேர் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர். -இவ்வாறு சன்ன வேத்தேவ தெரிவித்தார். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூகத்தில் காணப்படும் ஏழு வகையான பாவங்கள்

★ கொள்கைகள் அற்ற அரசியல்
★ மனச்சாட்சிக்கு விரோதமாக அனுபவிக்கும் இன்பம்
★ உழைக்காது செல்வந்தனாதல்
★ நல்லொழுக்கம் இன்றிச் செயற்படும் அறிவு
★ ஒழுக்கவியல் கடைப்பிடிக்காத வியாபாரம்
★ மனிதாபிமானமற்ற விஞ்ஞானம்
★ அர்ப்பணிப்பற்ற வழிபாடு

- சிலையூர் தனம்

## ஊஞ்சல்

ஆல மரத்து ஊஞ்சலாம்
அமர்ந்து ஆடிப் பாடலாம்
காலை உயர நீட்டியே
கீழும் மேலும் ஆடலாம்.

விண்ணை நோக்கிப் போகலாம்
வடக்குத் தெற்குப் பார்க்கலாம்
பண் இசைத்துப் பாடலாம்
பகல் முழுதும் ஆடலாம்.

பழக்க மில்லாப் பிள்ளைகள்
பையப் பைய ஆடலாம்
பழக்கமான போதிலே,
பறந்து விண்ணில் ஆடலாம்.

பிருந்தா

## பொதுஅறிவு

★ஆயிரங்கால் மண்டபத்தைக் கட்டிய மன்னன் யார்? துட்டகைமுனு
★எகிப்தின் தலைநகரம் எது? கெய்ரோ
★பர்மாவின் தேசியப் பறவை எது? மயில்
★யாழ். பல்கலைக்கழகம் எத்தனையாம் ஆண்டு உருவாக்கப்பட்டது? 1974 ஆம் ஆண்டு
★உலகிலே தங்கக் கோபுர நாடு என அழைக்கப் படுவது? தென்னாபிரிக்கா
★ ஜேர்மனியின் தேசியப் பறவை எது? வெள்ளைக் கொக்கு
★அமெரிக்காவின் தேசியப் பறவை? கழுகு
★உரோம மக்களின் மொழி எது? இலத்தீன்
★உலகிலே காய்கறிகளை அதிகமாக உற்பத்தி செய்யும் நாடு? சீனா
★உலகிலே ஆறுகள் இல்லாத இடம்? சவூதி அரேபியா

ச.சாத்வீக சர்மா

## காலகள் முளைத்த மீன்கள்




(தொடர்ச்சி)

''சபாஷ்! சரியான யோசனை!'' என்று முட்டாளைப் பாராட்டினார், பரமார்த்தர்.

அவன் யோசனைப்படி படகிலிருந்த ஆணிகளால், ஆளுக்கு ஒரு ஓட்டை போட்டனர்.

அவ்வளவு தான்! அப்போதே கடல் நீர் குபுகுபு என்று படகுக்குள் பாய்ந்து வந்தது.

அதைக் கண்ட சீடர்கள் ''ஐயோ'' என்று கத்திக் கொண்டு எகிறிக் குதித்தனர். அதனால் இன்னும் கொஞ்சம் ஆட்டம் கண்டது படகு. அதற்குள் படகு முழுவதும் நீர் நிரம்பி விடவே, படகு கடலுக்குள் மூழ்கியது. குருவும் சீடர்களும் லபோ திபோ என்று அலறியபடி நீருக்குள் தத்தளித்தனர்.

அவர்கள் போட்ட சத்தத்தைக் கேட்டு, அங்கு வந்த சில மீனவர்கள் நீந்திச் சென்று அனைவரையும் காப்பாற்றினர்.

மடத்துக்கு வந்து சேர்ந்த சீடர்கள், 'நம் படகு எப்படிக் கவிழ்ந்தது?' என்று கேட்டனர்.

''கடலும், மீன்களும் சேர்ந்து சதித் திட்டம் செய்து தான் நம் படகைக் கவிழ்த்து விட்டன!'' என்றார் பரமார்த்தர்.

''அப்படியானால், எப்படியாவது கடலின் திமிரையும் மீன்களின் கொட்டத்தையும அடக்க வேண்டும்'' என்றான் மட்டி

''குருவே! முடிந்தவரை மீன்களைப் பிடித்துக் கொன்று விடுவோம்'' என்றான் மடையன்.

''ஆமாம்! சும்மா விடக்கூடாது. மறுபடியும் மீன் பிடிப்போம், வாருங்கள்'' என்றான் முட்டாள்.

மறுநாளும் மீன்பிடிக்கப் புறப்பட்டனர்.

கடலுக்குள் சென்றதும், ''குருவே! எங்களை விட உங்கள் மீது தான் மீன்களுக்குக் கோபம் அதிகமாக இருக்கும். அதனால், தூண்டில் போடுவதற்குப் பதில், உங்களையே கயிற்றில் கட்டி கடலுக்குள் இறக்கி விடுகிறோம்'' என்றான் மட்டி.

''உங்களைக் கடிப்பதற்காகக் கடலில் உள்ள எல்லா மீன்களும் வரும். உடனே நாங்கள் எல்லா மீன்களையும் பிடித்து விடுகிறோம்'' என்றான் மடையன்.

குரு சற்று நேரம் யோசித்தார். ''நீங்கள் சொல்வதும் சரியே'' என்றார்.

உடனே சீடர்கள் அவரைக் கயிற்றில் கட்டி, கடலில் தூக்கிப் போட்டனர். நீச்சல் தெரியாத பரமார்த்தர், நீருக்குள் மூழ்கியதும் மூச்சுவிட முடியாமல் துடித்தார்.

நீரின் மேற்பரப்பில் காற்றுக் குமிழிகள் வருவதைக் கண்ட சீடர்கள், ''அடேயப்பா! நம் குரு நிறைய மீன்களைப் பிடிக்கிறார் போலிருக்கிறது'' என்றனர்.

பரமார்த்தரின் வயிறு முழுவதும் நீர் நிரம்பியதால் குமிழிகள் வருவது நின்றன.

எல்லா மீன்களையும் பிடித்து விட்டார் என்று நினைத்த சீடர்கள், நீரிலிருந்து குருவைத் தூக்கினர்.

ஆனால் பரமார்த்தரோ மயங்கிக் கிடந்தார்.

''மீன்களோடு நீண்ட நேரம் சண்டை போட்டதால் களைத்து விட்டார்!'' என்றான் மட்டி.

கண் விழித்த பரமார்த்தர்,''சீடர்களே! இன்னும் நம் மீது, கடலுக்கு இருக்கும் கோபம் தீரவில்லை. எப்படியோ இந்தத் தடவை தப்பித்துக் கொண்டோம். இனிமேல், கடல் பக்கமே போகவேண்டாம்!'' என்றார்.

(முற்றும்)




## கற்றுக் கொள்

கல்வியைப் பாடசாலையில் கற்றுக்கொள்
மனித நேயத்தை வீட்டில் கற்றுக்கொள்
தோல்வியை சகிக்கக் கற்றுக்கொள்
அடக்கத்தைப் பெண்ணிடம் கற்றுக்கொள்
அறிவை நல்லாசானிடம் கற்றுக்கொள்
அன்பைப் பெற்றோரிடம் கற்றுக்கொள்
பண்பைப் பெரியாரிடம் கற்றுக்கொள்
பொறாமையை விலக்கி நடக்கக் கற்றுக்கொள்

சிலையூர் தனம்

## இலங்கையின் வரலாறு

இலங்கை ஒரு சிறிய தீவு. ஆனாலும் இது 2500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்டது. இலங்கையின் காலத்தால் முந்திய வரலாற்று நூலாகக் கருதப்படும் மகாவம்சத்தின்படி இலங்கையின் வரலாறு கி.மு. 6ஆம் நூற்றாண்டிலிருந்து அறியப்படுகிறது. இந்தியாவின் கலிங்க நாட்டிலிருந்து விரட்டி விடப்பட்ட அந்நாட்டு இளவரசனான விஜயனும் அவனது 700 தோழர்களும் இலங் கையில் வந்தடைந்ததுடன் இந்த வரலாறு ஆரம்பமாகின்றது. எனினும் இதற்கு முன்னரே இயக்கர், நாகர் ஆகிய இரண்டு இனத்தவர்கள் இலங்கையில் வாழ்ந்ததுள்ளனர். என்பது, அவர்கள் இங்கே அரசமைத்து ஆண்டது பற்றியது மான குறிப்புக்களும் மகாவம்சத்தில் காணப் படுகின்றன. இலங்கையின் ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரம் கொண்டவராக, 6 ஆண்டுப் பதவிக் காலத் துக்கு மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்படுகி றார். இவர் ஒரே நேரத்தில் நாட்டின் தலைவராகவும், அரசின் தலைவராகவும், ஆயுதப் படைகளின் பிரதான கட்டளைத் தளபதியாகவும் செயற்படு கிறார். ஜனாதிபதி, அரசமைப்பினதும், ஏனைய சட்டங் களினதும் அமைவாகத் தமது கடமைகளை நிறைவேற்றுவதில் நாடாளு மன்றத்துக்குப் பொறுப்புடை யவராவார். ஜனாதிபதி, நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புள்ள அமைச்சரவை ஒன்றை நியமித்து, அதற்குத் தலைமை தாங்குவார்.

சிவானி.

(தொடரும்)

## மனிதனுக்கு இருக்கவேண்டிய மூன்று குணங்கள்

01. நாம் பேண வேண்டியவை
தீமை செய்யமை, உண்மை, தூய்மை
02. நாம் பெற்றிருக்க வேண்டியவை
நம்பிக்கை, பொறுமை, இனிய பண்பு
03. எம்மிடம் இருக்க வேண்டியவை
நாணயம், நேர்மை, ஒழுக்கம்
04. நாம் கைக்கொள்ள வேண்டியவை
உண்மை, ஒழுக்கம், ஊக்கம்
05. எம்மிடம் இருந்து அழிக்க வேண்டியவை
இறுமாப்பு, வீண் பெருமை, நான் எனும் அகந்தை
06. நாம் வெற்றி கொள்ள வேண்டியவை
காமம், சினம், பேராசை
07. என்னிடம் இருந்து விட்டு விட வேண்டியவை
தன்னலம், ஆசை, கபடம்
08. நாம் கட்டுப்படுத்த வேண்டியவை
மனம், புலன்கள், பேச்சு
09. என்னிடம் விசாரணை செய்ய வேண்டியவை
நான் யார்?, உண்மை எது?, மாயை எது?
10. எம்மிடம் வளர்க்க வேண்டியவை
தர்மம், சமாதானம், நலம்
11. நாம் ஆதரிக்க வேண்டியவை
ஒற்றுமை உணர்வு, அறிவாற்றல், நட்பு
12. நாம் செய்ய வேண்டியவை
மறை நூல்கள் ஓதுதல், கேட்பதைச் சிந்தித்தல், ஆழ்ந்த தியானம்.
13. நாங்கள் பின்பற்ற வேண்டியவை
குருவின் அறிவுரைகள், மறைகளின் கட்டளைகள், மனச்சாட்சியின் ஆணைகள்.

ஆ. தர்மிகா
கொக்குவில் இந்துக் கல்லூரி

## தேனீக்கள்

பூவின் மகரந்தத்தில் இருந்து தேனை உறிஞ்சி அவற்றை தேன் கூடுகளில் சேகரித்து வைக்கும் அரிய செயலைச் செய்யும் தேனீக்களைப் பற்றிய ஒரு கதை இது.

பொதுவாக உலகில் அதிக அளவில் கண்டுபிடிக்கப்பட்ட இனம் பூச்சி இனமாகும். இந்தப் பூச்சி இனங்களில் மனிதனுக்கு பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தும் இனங்களே அதிகம். ஆனால் மனிதனுக்குப் பயன்படும் தேனை உற்பத்தி செய்து, பல்வேறு நோய்களுக்கும் மருந்தாக இருக்கும் தேனை அளிக்கும் தேனீக்கள், ஈ வகையைச் சேர்ந்தவையாகும்.

தேனீக்கள் ஆபிரிக்காவில் தோன்றியுள்ளன. அப்படியே ஒவ்வொரு கண்டமாகப் பரவி தற்போது பூமியில் அந்தாட்டிக்காவைத் தவிர மற்ற அனைத்துப் பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றன.

தேனீக்களில் ராணித் தேனீ, ஆண் தேனீ, வேலைக்காரத் தேனீக்கள் என மூன்று வகைகள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு உடல் அமைப்பைப் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

- அபிஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய். தலைநகர் பாங்கொக்கில் அவசரகால நிலைமை இரத்து

பாங்கொக், டிசெ. 23

தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில், கடந்த எட்டு மாதங்களாகநிலவிவந்தஅவசரநிலையை, அரசு இரத்து செய்ய உத்தரவிட்டுள்ளது.

மேலும், எதிர்க்கட்சியினரின் போராட்டம் ஜனநாயக ரீதியிலானது என்பதையும் ஏற்றுக்கொண்டுள்ளது. தாய்லாந்தில், தேர்தலை விரைவில் கொண்டு வர வேண்டுமென கோரி கடந்த மார்ச்சில், எதிர்க்கட்சியினரான சிவப்புச் சட்டையினர் நாடாளுமன்றத்தை முற்றுகையிட்டனர்.

இப்போராட்டத்தால் தலைநகர் பல நாள்களுக்கு ஸ்தம்பித்தது. அதன்பின், ஏப்ரல், பாங்கொக் உள்ளிட்ட நாட்டின் பெரும் பகுதிகளில் அரசு அவசர நிலைக்கு உத்தரவிட்டது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர், பாங்கொக்கிலும், அதனருகிலுள்ள சில மாகாணங்களை தவிர, பல மாகாணங்களிலும் இருந்த அவசர நிலை இரத்துச் செய்யப்பட்டது.

இந்நிலையில், செவ்வாய்க்கிழமை அரசின் துணை செய்தித்தொடர்பாளர் சுபாச்சி ஜெய்சாமத் கூறுகையில், "பாங்கொக்கிலுள்ள அவசர நிலையை அமைச்சரவை இரத்துச் செய்துள்ளது. மேலும், எதிர்க்கட்சியினர் மிகவும் அமைதியாக, சட்டப்பூர்வமாக, அடையாளபூர்வமாக தங்கள் ஆர்ப்பாட்டங்களை நிகழ்த்துகின்றனர் என்பதையும் அது உணர்ந்துள்ளது'' என்றார்.

அதேநேரம், வன்முறை ஏற்பட்டால், உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் அமுலுக்கு வரவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனினும் இச்சட்டம், ஊரடங்கு உத்தரவு, தடை உத்தரவு ஆகியவற்றை பிறப்பிப்பதில் அதிகாரிகளுக்கு சில கட்டுப்பாடுகளை விதிக்கிறது.

அடுத்தாண்டு பொதுத் தேர்தல் நடக்கவுள்ள நிலையில் பிறப்பிக்கப்பட்டுள்ள அரசின் இந்த உத்தரவு குறிப்பிடத் தகுந்ததாகக் கருதப்படுகிறது. (சி)

# அமெ. ஹோட்டல் உணவுப் பண்டங்களில் விஷம் கலக்க தீவிரவாதிகள் சதி முயற்சி!

## பாதுகாப்புத்துறை எச்சரிக்கை

வாஷிங்ரன், டிசெ. 23

அமெரிக்காவிலுள்ள ஹோட்டல்களின் உணவுப் பண்டங்களில் விஷம் கலக்கத் தீவிரவாதிகள் சதி செய்துள்ளனர் எனப் பாதுகாப்புத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகையின்போது டெட்ராய்ட் வந்த அமெரிக்க விமானத்தை குண்டு வைத்து தகர்க்க அல்-குவைதா தீவிரவாதிகள் திட்டம் தீட்டினர். அந்த சதி வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது. அதேபோன்று, இந்த ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகையின் போது புதுவித சதித் திட்டம் தீட்டியுள்ளனர். பண்டிகையின்போது அமெரிக்க நகரங்களிலுள்ள ஹோட்டல்கள், உணவு விடுதிகள் ஆகியவற்றில் மக்கள் கூட்டம் பெருமளவில் இருக்கும்.

அதிகளவில் உணவுப் பொருள்கள் விற்பனையாகும். அதில் விஷத்தை கலக்கத் திட்டமிட்டுள்ளனர். குறிப்பாக சால்ட்பன், பப்பட்ஸ் ஆகிய உணவுப் பொருள்களில் ரிசின், சயனைட் ஆகிய விஷத்தை கலக்க உள்ளனர். இச்சதியை இந்த வாரத்திற்குள் செயற்படுத்தவும் முடிவு செய்துள்ளனர்.

எனவே, ஹோட்டல் உரிமையாளர்களும், பொதுமக்களும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என அமெரிக்காவின் பாதுகாப்புத்துறையும், உளவுத் துறையும் எச்சரிக்கை விடுத்துள்ளன.

மேலும் இதற்காக எவரும் பீதியோ, கலக்கமோ அடைய வேண்டாம். அவர்களின் சதி முறியடிக்கப்படும். பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என உள்நாட்டுப் பாதுகாப்புத்துறை அறிவித்துள்ளது.

# பிரி. ஆளும் கூட்டணிக்குள் கருத்து வேறுபாடு, மோதல்

லண்டன், டிசெ. 23

பிரிட்டனில் ஆளும் கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடு, இப்போது மோதலாக உருவெடுத்துள்ளது.

கூட்டணி அமைச்சர் ஒருவர், "கன்சர்வேடிவ் கட்சியினருடன் பேச்சுகளில் ஈடுபட வேண்டும் என்று என்னைக் கட்டாயப்படுத்தினால், நான் அமைச்சர் பதவியிலிருந்து வெளியேறுவேன். அதனால் கூட்டணி முறியும். ஆட்சி கவிழும்'' என வெளிப்படையாக எச்சரித்துள்ளார்.

பிரிட்டனில் கன்சர்வேடிவ் கட்சியினரும், லிபரல் குடியரசுக் கட்சியினரும் கூட்டணி வைத்துள்ளனர். சமீபத்தில், பிரதமர் டேவிட் கெமரூன் தலைமையிலான கன்சர்வேடிவ் கட்சியினர், மாணவர்களின் கல்விக் கட்டணத்தை உயர்த்தவேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்தனர்.

ஆனால் லிபரல் கட்சியினர் ஆரம்பம் முதலே இதை எதிர்த்து வந்தனர். இவ்விவகாரத்தில் ஆளும் கூட்டணிக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடு இப்போது மோதலாக வெடித்துள்ளது.

லிபரல் கட்சியைச் சேர்ந்தவரும், ஆளும் கூட்டணியில், தொழில்துறை அமைச்சராக இருப்பவருமான வின்ஸ் கேபிள் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பவை வருமாறு:-

இவ்விவகாரத்தில் கூட்டணிக்குள் கடும் சண்டை நடந்து வருகிறது. இந்தச் சண்டை நம் அனைவரையும் அழித்துவிடும். கன்சர்வேடிவ் கட்சியினருடன் இவ்விவகாரம் குறித்துப் பேச வேண்டும் என்று என்னைத் தொடர்ந்து நிர்ப்பந்தித்தால், நான் பதவியை இராஜிநாமாச் செய்வேன்.

இதற்காக நான் வருந்துகிறேன். ஆனால் கூட்டணியிலிருந்து விலகும் எண்ணம் இல்லை. தொடர்ந்து என் கடமையைச் செய்வேன். அதனால் கூட்டணியில் முறிவு ஏற்படும். ஆட்சி கவிழும். இதுபோன்ற பிரச்சினைகள் வராமல் கையாள வேண்டும்.

சுகாதாரம், நிர்வாகம், சீர்திருத்தம் ஆகிய துறைகளில் மாவோ காலத்துப் புரட்சி போல அதிரடியாக அரசு மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. லிபரல் கட்சியினர் இதற்குத் தடை போட வேண்டும்.இவ்வாறு கேபிள் தெரிவித்தார்.

இம்மோதலால், பிரிட்டனில் ஆளும் கூட்டணி, தன் பதவி காலமான 2015ஆம் ஆண்டு வரை சுமுகமாக ஆட்சியை தொடருமா என்பது குறித்து சந்தேகம் எழுந்துள்ளது.



வடகொரியாவுக்கும், தென்கொரியாவுக்குமிடையில் யுத்தச் சூழ்நிலை சூல் கொண்டுள்ளது. இத்தருணத்தில் வடகொரியாவின் எல்லையோடு ஒட்டிய பகுதியில், தென்கொரியா உருக்கால் உருவாக்கப்பட்ட பாரிய நத்தார் மரமொன்றை அமைத்துள்ளது. இதை ஆத்திரமூட்டும் செயல் என வடகொரியா சுட்டிக்காட்டுகிறது.
பலத்த பாதுகாப்புக்கும் மத்தியில் செவ்வாய்க்கிழமை மாலை நத்தார் மரத்தைத் தென்கொரியா திறந்து வைத்தது. இந்நிகழ்ச்சியில் உள்ளூர் அரச அதிகாரிகள் உட்பட 4000 இற்கு மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.
300 மீற்றர் உருக்கால் நிர்மாணிக்கப்பட்ட இதன் கோபுரம் கிறிஸ்தவக் குழுவொன்றால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

# ஈரானில் பூகம்பம் 7 பேர் உயிரிழப்பு

தெஹ்ரான், டிசெ. 23

ஈரானில் ஏற்பட்ட கடுமையான பூகம்பத்தில் சிக்கி 7 பேர் உயிரிழந்தனர். 100இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர். 6.5 அலகுகளாக ரிச்டர் அளவு கோலில் பூகம்பத்தின் அளவு பதிவாகியுள்ளது.

ஈரானின் தென் கிழக்குப் பகுதியில் கடுமையான பூகம்பம் ஏற்பட்டது. திங்கள் இரவு 10.12 மணியளவில் தொடங்கிய பூகம்பம் நள்ளிரவு வரை நீடித்தது.

கெம்ரான் மாகாணத்தில் அடுத்தடுத்து 22 தடவை பூகம்பம் ஏற்பட்டது. இதில் அதிகபட்சமாக ரிச்டர் அளவு கோலில் 5 அலகுகள் வரை பதிவானது. இத்தகவலை தெஹ்ரான் பல்கலைக்கழகத்திலுள்ள புவி இயற்பியல் துறை தெரிவித்துள்ளது.

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் மீட்புப் பணிகள் முழு வீச்சில் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இதுவரை 7 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. காயமடைந்தவர்களில் சிலரது நிலை மிகுந்த கவலைக்கிடமாக உள்ளது. இதனால் இறந்தோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

பூகம்பம் ஏற்பட்டதில் இப்பகுதி முழுவதும் உள்ள தொலைத்தொடர்பு வசதி துண்டிக்கப்பட்டது. மலைப்பாங்கான பகுதியில் பூகம்பம் ஏற்பட்டதால் இந்தப் பகுதிக்கு மீட்புக் குழுவினர் செல்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

# மணப்பெண், நண்பரைச் சுட்டுக்கொன்ற மணமகன் துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை

பிராசிலியா, டிசெ. 23

பிரேஸிலில் உள்ள ரியோடி ஜெனீரோ நகரைச் சேர்ந்தவர் ரொஜேரியோ தமஸ்செனா (வயது - 29). இவர் அங்குள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் விற்பனை மேலாளராகப் பணி புரிந்தார்.

இவருக்கும், ரெனாடா அலெக்காண்ட்ரோ கோஸ்டா கோயல்கோ (வயது - 25) என்ற பெண்ணுக்கும் திருமணம் நடந்தது. திருமணம் முடிந்ததும் வரவேற்பு நிகழ்ச்சி நடந்தது.

மணமக்களுடன், மணமகளின் நண்பர் மார்செலோ குய்மாராஸ் மாப்பிள்ளை தோழனாக மேடையில் நின்றிருந்தார்.

மணமகன் ரோஜெரியோ திடீரென ஒரு அறிவிப்பு விடுத்தார். எனவே, அனைவரும் அவர் பக்கம் கவனத்தைத் திருப்பினர். அப்போது எவரும் எதிர்பாராத விதமாக அவர் தான் மறைத்து வைத்திருந்த கைத் துப்பாக்கியை எடுத்தார்.

பின்னர் மணமகள் ரெனாட்டாவையும், தனது நண்பர் குய்மாராசையும் சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டார். இதில், அவர்கள் இருவரும் இரத்த வெள்ளத்தில் பிணமானார்கள். அதைத் தடுக்க வந்த மணமகளின் அண்ணனுக்கும் காயம் ஏற்பட்டது. இச்சம்பவம் அங்கு பதற்றத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தியது. இந்த நிலையில் மணமகன் ரொஜேரியோ தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார். (சி)

உலக அரங்கில்

# ஜப்பானின் தெற்கே சக்திவாய்ந்த பூகம்பம்

டோக்கியோ, டிசெ. 23

ஜப்பானின் தெற்கே சக்தி வாய்ந்த பூகம்பம் ஏற்பட்டதால் ஆழிப்பேரலை எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இது குறித்து அமெரிக்க புவியியல் ஆராய்ச்சி மையம் வெளியிட்டுள்ள தகவலில், ஜப்பானின் தெற்கே சிச்சி ஷிஹிமா எனும் பகுதியிலுள்ள போனின் தீவில் கடலுக்கடியில் 14 கிலோமீற்றர் தொலைவில் உள்ளூர் நேரப்படி அதிகாலை 3.19 மணியளவில் இந்தப் பூகம்பம் ஏற்பட்டுள்ளது. ரிச்டர் அளவில் 7.4 புள்ளிகளாக இதன் தாக்கம் பதிவாகியுள்ளது.

இந்தப் பூகம்பம் பசிபிக் கடலின் ஹவாய் தீவுகளை மையம்கொண்டு ஏற்பட்டது என்றும் இதனால் ஆழிப்பேரலை எச்சரிக்கை விடப்பட்டுள்ளது என்றும் அந்த ஆராய்ச்சி மையம் குறிப்பிட்டுள்ளது.

# பாகிஸ்தானிலுள்ள அல் - குவைதாவினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அனுமதி தருக!

வாஷிங்ரன், டிசெ. 23

பாகிஸ்தானின் எல்லையோரப் பகுதியில் பதுங்கியிருக்கும் அல்-குவைதா தலிபான், ஹக்கானி கும்பலை ஒடுக்குவதற்கு பாகிஸ்தான் இராணுவம் எதுவும் செய்யவில்லை.

இந்நிலையில், அங்கு புகுந்து இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு அனுமதி அளிக்கவேண்டும் என்று ஆப்கானிஸ்தானில் நிறுத்தப்பட்டிருக்கும் அமெரிக்க இராணுவத் தளபதிகள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அமெரிக்க இராணுவ அதிகாரிகளின் இந்தத் திட்டத்துக்கு அமெரிக்க அரசு இன்னும் அனுமதி அளிக்கவில்லை. இருந்தபோதிலும் இராணுவ அதிகாரிகள் அரசின் கொள்கையில் மாற்றம் ஏற்படும் என்றும், அனுமதி கிடைக்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்கள்.

அமெரிக்க அரசு இதற்கு அனுமதி கொடுத்தால் தலைமறைவாக இருக்கும் அல்-குவைதா தலிபான் தலைவர்களைப் பிடித்து விடமுடியும் என்றும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை அனர்த்த அழிவுகளில் இருந்து பயிர்களை பாதுகாக்கும் தந்திரோபாயங்கள்

யாழ்.மாவட்டத்தில் 62,269 விவசாயக் குடும்பங்களும், 30,408 விவசாயத் தொழிலாளர்களும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். மொத்த நிலப்பரப்பில் 32,362 ஏக்கர் விஸ்தீரணம் நெற்செய்கைக்கும், 20,994 ஏக்கர் விஸ்தீரணம் மேட்டு நிலப்பயிர்ச் செய்கைக்கும் உட்படுத்தக் கூடிய காணிகளாக உள்ளன. 7,207 ஏக்கர் விஸ்தீரணத்தில் தென்னை மரங்களும், 31,554 ஏக்கர் விஸ்தீரணத்தில் பனை மரங்களும் காணப்படுகின்றன.

பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் காலபோகம், இடைப்போகம், சிறுபோகம் எனும் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காலபோகத்தில் மானாவாரியாக மழையை நம்பி வருடாந்தம் சராசரியாக 25,000 ஏக்கர் விஸ்தீரணத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. மரக்கறிப் பயிர்கள் காலபோகம் மற்றும் இடைப்போகத்தில் 14,145 ஏக்கர் விஸ்தீரணத்திலும், சிறுபோகத்தில் 6,292 ஏக்கர் விஸ்தீரணத்திலும் செய்கை பண்ணப்படுகின்றது. மரக்கறிப் பயிர்கள் கால போகம் மற்றும் இடைப்போகத்தில் 5,236 ஏக்கர் விஸ்தீரணத்திலும், சிறுபோகத்தில் 3,552 ஏக்கர் விஸ்தீரணத்திலும் செய்கை பண்ணப்படுகின்றது. அதே வேளை பழப்பயிர்கள் 5,038 ஏக்கர் விஸ்தீரணத்தில் செய்கை பண்ணப்படுகின்றன.




இடைப்போகத்தில் நெல் அறுவடையின் பின்னர் இருக்கக் கூடிய நில ஈரத்துடன் எள்ளு, உழுந்து, கௌபீ, பயறு, போன்ற உப உணவுப்பயிர்கள் செய்கை பண்ணப்பட்டு வருகின்றன. அதே வேளை நீர்ப்பாசன் வசதியைக் கொண்டிருக்கும் நெற்காணிகளில் மரக்கறி மற்றும் வெங்காயம், மிளகாய், புகையிலை போன்ற பணப்பயிர்களும் செய்கை பண்ணப்பட்டு வருகின்றன.

**காலநிலைக் காரணிகளும் பயிர்ச்செய்கையில் அவற்றின் பாதிப்பும்**

பயிர்ச்செய்கை நடவடிக்கைகளின் வெற்றியானது காலநிலைக் காரணிகளான மழைவீழ்ச்சி, வெப்பநிலை, காற்று, சாரீரப்பதன் என்பனவற்றில் பெருமளவு தங்கியுள்ளது. மழைவீழ்ச்சியின் அளவு, பரம்பல் பயிர்களின் தேவைக்கு ஏற்ப அமையும் பொழுது பயிர்களிலிருந்து நல்ல அறுவடையைப் பெறக்கூடியதாக இருக்கும். கடந்த 5 வருடங்களில் கிடைக்கப் பெற்ற மழைவீழ்ச்சியின் அளவும், நாள்களின் எண்ணிக்கையும் மாதவாரியாக அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளது.

**பயிர்ச்செய்கையில் நிஸா புயலின் தாக்கம்**

2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 16 நாட்களில் 830.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பெறப்பட்டுள்ளது. இது மற்றைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் பொழுது மிகவும் அதிகளவாகக் காணப்படுகின்றது. குறிப்பாக இம் மாதத்தின் பிற்பகுதியில் (24,25.26 ஆகிய மூன்று நாள்களிலும்) மொத்தமாக 647.3 மில்லிமீற்றர் எனும் அதிஉயர் மழைவீழ்ச்சி யும், மணிக்கு 60 கி.மீ எனும் வேகத்தில் வீசிய நிஸாப் புயலும் இணைந்து விவசாயத் துறைக்குப் பாரிய சேதத்தை ஏற்படுத்தி ஓய்ந்தன. இந்த இழப்பின் விவரம் அட்டவணை 2 இல் காட்டப்படுகின்றது.

விவசாயத்துறைக்கு ஏற்பட்ட இழப்பினைக் குறித்துரைக்கும் வகையில் விதைக்கப்பட்ட / நடுகை செய்யப்பட்ட மொத்த விஸ்தீரணமான 12669.3 ஹெக்ரெயரில் (31293.1 ஏக்கரில்) 2766.3 ஹெக்ரெயர் (6833 ஏக்கர்) விஸ்தீரணம் முற்றாக அழிவடைந்ததை அட்டவணை 2 காட்டுகின்றது. பொருளாதார ரீதியாக நோக்கும் பொழுது எதிர் பார்க்கப்பட்ட உற்பத்தி கிடைக்காமை காரணமாக ஏற்பட்ட இழப்பு ரூபா 1210.4 மில்லியன் ஆகும். ஆண்டுப் பயிர்கள், பல்லாண்டுப் பயிர்கள் எனும் வேறுபாடின்றிப் பரந்துபட்டு பெரும் சேதத்தை நிஸாப் புயல் ஏற்படுத்தியுள்ளது என்பதை அட்டவணை 2 தெளிவுபடுத்துகின்றது.

| மாதங்கள் | கிடைக்கப்பெற்ற மழைவீழ்ச்சி | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்டு 2006 | | ஆண்டு 2007 | | ஆண்டு 2008 | | ஆண்டு 2009 | | ஆண்டு 2010 | |
| | அளவு (மி.மீ) | நா.எ | அளவு (மி.மீ) | நா.எ | அளவு (மி.மீ) | நா.எ | அளவு (மி.மீ) | நா.எ | அளவு (மி.மீ) | நா.எ |
| ஜனவரி | 149.9 | 6 | 12.5 | 3 | 22.5 | 03 | 6.9 | 5 | 47.1 | 3 |
| பெப்ரவரி | 0 | 0 | 19.2 | 5 | 35.1 | 03 | 0 | 0 | 0 | 0 |
| **மார்ச்** | 45.7 | 9 | 0 | 0 | **249.7** | **18** | 149.5 | 5 | 0.1 | 1 |
| ஏப்ரில் | 26.4 | 4 | 39 | 7 | 88.2 | 08 | 204.4 | 5 | 66.6 | 8 |
| மே | 1 | 1 | 33 | 1 | 22.9 | 02 | 13.8 | 2 | 94.5 | 7 |
| யூன் | 0 | 0 | 19.7 | 5 | 28.45 | 01 | 2.4 | 1 | 29.7 | 2 |
| யூலை | 0 | 0 | 18.9 | 4 | 26 | 02 | 3.1 | 1 | 5.1 | 6 |
| ஆகஸ்ட் | 23.5 | 3 | 81.2 | 4 | 92.6 | 10 | 41 | 6 | 127.5 | 5 |
| செப்டெம்பர் | 15 | 3 | 95.7 | 8 | 2.2 | 01 | 24.4 | 3 | 142.8 | 8 |
| அக்டோபர் | 240 | 15 | 292 | 12 | 224.6 | 15 | 52.1 | 7 | 115.2 | 11 |
| **நவம்பர்** | 309.9 | 22 | 183.4 | 15 | **830.8** | **16** | 371.6 | 22 | 492.2 | 18 |
| டிசம்பர் | 78.7 | 5 | 373.5 | 9 | 184.5 | 14 | 401.7 | 19 | 216.9 | 11 |
| **மொத்தம்** | **890.1** | **68** | **1168.1** | **73** | **1807.55** | **93** | **1270.9** | **76** | **1337.7** | **80** |

அட்டவணை 1: கடந்த 5 வருடங்களில் கிடைக்கப்பெற்ற மழைவீழ்ச்சியின் அளவும் நாள்களின் எண்ணிக்கையும் (15.12.2010வரை). ஆதாரம்: வானிலை அவதான நிலையம். திருநெல்வேலி. (நா.எ.: நாள்களின் எண்ணிக்கை)

**மரக்கறிச்செய்கையில் உயர் மழைவீழ்ச்சியின் தாக்கம்**

மற்றைய மாதங்களுடன் ஒப்பிடும் போது ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் கூடியளவு மழைவீழ்சசி பெறப்படுவதை அட்டவணை 1 தெளிவாகக் காட்டுகின்றது. இந்தக் காலப்பகுதியில் மரக்கறிகளின் விலை மிகவும் அதிகரித்திருப்பதை வரைபு 1 காட்டுகின்றது. இக் காலப்பகுதியில் பெறப்படும் உயர் மழைவீழ்ச்சி காரணமாக ஏற்படும் வெள்ளப்பெருக்கு, நீர்தேங்கி நிற்றல் என்பனவற்றின் காரணமாக மரக் கறிப் பயிர்களுக்கு சேதம் ஏற்படுகின்றது. அதே நேரத்தில் மரக்கறிப் பயிர்களில் பூக்கள், காய்களின் விருத்தியும் குறைவடைகின்றது. இதன் காரணமாக மரக்கறிகளின் உற்பத்தி வீழ்ச்சி அடைகின்றது. உற்பத்தி வீழ்ச்சியானது அக்காலத்தில் ஏற்படும் மரக்கறிகளின் விலை அதி கரிப்பற்குரிய பிரதான காரணியாக அமைகின்றது. இக்காலப்பகுதியில் மேலே கூறப்பட்ட மரக்கறிகளின் விலை கள் உயர்வாக இருப்பதனை வரைபு 1 காட்டுகின்றது.

| பயிர் | இலக்கு | | விதைக்கப்பட்ட விஸ்தீரணம் (கெக்) | 100% அழிவடைந்த விஸ்தீரணம (கெக்) | உற்பத்தி இழப்பு (மெ.தொ) | உற்பத்தி இழப்பின் பெறுமதி (மில்லியன ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| | விஸ்தீரணம் (கெக) | உற்பத்தி (மெ.தொ) | | | | |
| நெல் | 9389 | 19467 | 9357.5 | 969 | 8951.5 | 379.55 |
| மிளகாய் | 398 | 736 | 90.85 | 54.85 | 98.73 | 14.8 |
| சி.வெங்காயம் | 769 | 9570 | 88.5 | 86.5 | 1038 | 41.41 |
| புகையிலை | 713 | 3565 | 61 | 59 | 295 | 23 |
| நிலக்கடலை | 108 | 189 | 27.35 | 16.6 | 29.05 | 5.75 |
| கௌபி | 200 | 180.5 | 17 | 17 | 15.3 | 2.14 |
| பயறு | 174 | 174 | 8.75 | 6.85 | 6.85 | 0.89 |
| உழுந்து | 235 | 188 | 26 | 22 | 17.6 | 2.64 |
| சோளம் | 111 | 222 | 42 | 34.5 | 69 | 4.83 |
| சிறுதானியம் | 64 | 73.8 | 12.75 | 11.5 | 20.12 | 1.41 |
| கிழங்கு வகை | 344.5 | 6890 | 244.5 | 61 | 1220 | 24.4 |
| மரக்கறிகள் | 1646 | 20753.2 | 820.2 | 548.7 | 5080.8 | 262.31 |
| பழப்பயிர் | 1847.45 | 30805 | 1847.45 | 863.8 | 22617 | 428.5 |
| வெற்றிலை | 25.42 | 30 | 25.42 | 15 | 18 | 18.75 |
| **மொத்தம்** | **16024.37** | | **12669.27** | **2766.3** | **38449.33** | **1210.38** |

அட்டவணை 2: 2008 நவம்பரில் பெறப்பட்ட உயர் மழைவீச்சி மற்றும் நிஸாப் புயலால் பயிர்செய்கைக்கு ஏற்பட்ட இழப்பு

**இடைப்போகப் பயிர்ச்செய்கையில் உயர் மழைவீச்சியின் தாக்கம்**

கடந்த சில ஆண்டுகளாக நெற்செய்கையின் பின்னான நிலத்திலுள்ள ஈரத்துடன் இடைப்போகத்தில் செய்கை பண்ணப்படும் எள்ளு, உழுந்து, கௌபீ, பயறு, போன்ற பயிர்கள் கூடிய மழை காரணமாக அல்லது மழை இன்மை காரணமாக முற்றாகவோ அல்லது பகுதியாகவோ சேதத்திற்குள்ளாகி வருகின்றன.

2008 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் வழமைக்குமாறாக 18 நாட்களில் 249.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி எனும் உயர் மட்ட மழைவீழ்ச்சி காரணமாக இந்தக் காணிகளில் வெள்ளம் தேங்கியிருந்தது. இதன் காரணமாக மரக்கறிகள் மற்றும் மரக்கறிப் பயிர்கள் பெருமளவில் சேதமடைந்தன.

**வறட்சியின் தாக்கம்**

அதேவேளை 2006,2007,2009,2010 ஆகிய நான்கு ஆண்டுகளின் ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மூன்று மாதங்களிலும் மழை குறைவாகக் கிடைத்தமையினால் நெற்செய்கையின் பின்னர் நீர்ப்பாசனம் இன்றித் தாய் ஈரத்துடன் மேற்கொள்ளப்பட்ட இடைப்போகப் பயிர்ச்செய்கை சேதத்துக்கு உள்ளாகியது.

**சிறுபோக மரக்கறிச் செய்கையில் உயர் வெப்பநிலையின் தாக்கம்**

சூழல் வெப்பநிலை $30^{0}$ C இக்கு மேல் அதிகரிக்கும் போது கத்தரி, தக்காளி, போன்ற பயிர்களின் உற்பத்தி திறன் வீழ்ச்சி அடையும். அதே போல் $31^{0}$ C இக்கு மேல் பயிற்றையினதும், $28^{0}$ C இக்கு மேல் மிளகாய், கறிமிளகாய் என்பனவற்றினதும் உற்பத்தித்திறன் வீழ்ச்சி அடையும். மற்றைய மாதங்களுடன் ஒப்படும் போது ஏப்ரல், மே, யூன் ஆகிய மாதங்களில் வெப்பநிலை உயர்வாகவுள்ளது என்பதனை அட்டவணை 3 காட்டுகின்றது. மே, யூன் மாதங்களில் உயர் வெப்பநிலை காரணமாக மரக்கறிப் பயிர்களின் உற்பத்தி வீழ்ச்சியடைவதே இக் காலப்பகுதியில் மரக்கறிகளின் விலை உயர்வதற்குப் பிரதான காரணியாக அமைகின்றது.

| | வெப்பநிலை அளவு (பாகை செல்சியஸ்) | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாதங்கள் | ஆண்டு 2006 | | ஆண்டு 2007 | | ஆண்டு | | ஆண்டு 2009 | | ஆண்டு 2009 | |
| | குறைந்தளவு | அதிகளவு | குறைந்தளவு | அதிகளவு | குறைந்தளவு | அதிகளவு | குறைந்தளவு | அதிகளவு | குறைந்தளவு | அதிகளவு |
| ஜனவரி | 21.7 | 28.9 | 22.2 | 29.7 | 21 | 29.5 | 26.1 | 29.5 | 21.9 | 29.9 |
| பெப்ரவரி | 21.4 | 30.7 | 22.0 | 30.8 | 21 | 31.1 | 20.5 | 31.3 | 21.7 | 31.3 |
| மார்ச் | 23.5 | 32.7 | 22.1 | 33.4 | 23 | 30.7 | 23.0 | 32.4 | 23.7 | 33.8 |
| **ஏப்பிரல்** | **26.0** | **33.6** | **25.5** | **33.8** | **25** | **32.4** | **26.0** | **32.3** | **27.3** | **35.1** |
| **மே** | **27.8** | **33.1** | **28.4** | **33.2** | **27** | **32.0** | **28.0** | **32.5** | **27.7** | **33.4** |
| **யூன்** | **27.6** | **32.9** | **27.5** | **32.7** | **27** | **32.3** | **27.5** | **32.0** | **27.7** | **32.5** |
| யூலை | 27.2 | 32.6 | 26.6 | 31.7 | 26 | 32.0 | 27.2 | 32.3 | 27.3 | 33.2 |
| ஆகஸ்ட் | 26.9 | 32.1 | 25.5 | 31.8 | 26 | 31.5 | 26.5 | 32.4 | 26.6 | 32.2 |
| செப்டெம்ப | 26.4 | 32.2 | 26.6 | 31.5 | 26 | 32.0 | 26.9 | 32.4 | 26.1 | 30.8 |
| அக்டோபர் | 25.2 | 31.3 | 25.3 | 30.9 | 24 | 31.8 | 25.1 | 32.6 | 25.9 | 30.3 |
| நவம்பர் | 23.6 | 29.9 | 22.9 | 30.0 | 23 | 28.8 | 24.1 | 30.4 | 24.1 | 29.9 |
| டிசம்பர் | 23.0 | 29.7 | 22.5 | 28.9 | 23 | 29.3 | 23.4 | 28.7 | | |

அட்டவணை 3: கடந்த 5 வருடங்களில் கிடைக்கப்பெற்ற வெப்பநிலை அளவு மாதவாரியாக (15.12.2010வரை). ஆதாரம்: வானிலை அவதான நிலையம். திருநெல்வேலி.

**தவிர்க்கக் கூடிய தந்திரோபாயங்கள்**

✱ காலபோகத்தில் ஏற்படும் வெள்ள அனர்த்தத்திலிருந்து நெற்செய்கையினைப் பாதுகாத்தல்

காலபோகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் நெற்செய்கையினைக் கூடியளவு மழை வீழ்ச்சினால் ஏற்படும் வெள்ளம் விரைவாக வடிந்து செல்வதற்குரிய வடிகாலமைப்பனைச் சரியான முறையில் பேணுவதுடன், தேவைப்படும் இடத்தில் புதிய வடிகாலமைப்பினை உருவாக்குதலும், பேணுதலும். (வளரும்)

**சி.சிவகுமார்,**
**பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி),**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலில் காங்.-அ.தி.மு.க. கூட்டணி அமைய வாய்ப்பு

## தை பிறந்தால் நல்ல வழிபிறக்கும் என்கிறார் இளங்கோவன்



கோபி, டிசெ. 23

தமிழகத்தில் நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் - அ.தி.மு.க. கூட்டணி அமைய வாய்ப்பு உள்ளது - என்று மத்திய முன்னாள் அமைச்சர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

கோபியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு பேசியவை வருமாறு -

ராகுல் காந்தி தமிழகம் வந்து சென்ற 15 நாள்களில் நல்ல வழிபிறக்கும். ராகுல் காந்தி படியேறிச் சென்று யாரையும் சந்திக்க மாட்டார்.

தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் இருப்பது நல்லதல்ல என்பதை காங்கிரஸ் தலைவர் சோனியாவிடம் தெரிவித்திருக்கிறோம்.

தமிழகத்தை ஆளுபவர்கள் ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருக்கின்றனர். தை பிறந்தால் வழி பிறக்கும். தி.மு.கவுடன் கூட்டணி முறியும் காலகட்டத்தில், தி.மு.கவைத் தவிர்த்து மற்ற கட்சிகளுடன் கூட்டணி அமைக்கவும் வாய்ப்பு உள்ளது. அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைக்கவும் வாய்ப்பு உள்ளது.

ஸ்பெக்ட்ரம் ஊழல் தொடர்பாக முன்னாள் அமைச்சர் ஆ.ராசா வீட்டில் சோதனை நடந்துள்ளது. இப்போது விசாரணையும் நடைபெற்று வருகிறது.

தி.மு.க. மீது பொதுமக்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர். கலைஞர் இலவச வீடு வழங்கும் திட்டத்தால், இப்போது மணலை கிலோ கணக்கிலும், செங்கல்லை எண்ணிக்கை அடிப்படையிலும் விற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தமிழகத்துக்கு இது மோசமான சூழலாகும். தி.மு.கவின் திட்டமான ஒருகிலோ அரிசியை ஒரு ரூபாவுக்குக் கொடுப்பதில் அர்த்தமில்லை. ஏனெனில் பருப்பு, புளி போன்ற மளிகைப் பொருள்களை 100 ரூபா கொடுத்து வாங்கினால்தான் சமையல் செய்ய முடியும்.

ஆளும் கட்சியுடன் தொடர்பு உடையவர்கள் ரேஷன் அரிசியை கேரளம் உள்ளிட்ட மாநிலங்களுக்குக் கடத்தி வருகின்றனர்.

மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன், தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த், எஸ்.வி.சேகர் எம்.எல்.ஏ. மற்றும் அ.தி.மு.க., கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர்கள் எனக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தனர்.

ஆனால், தி.மு.க. தரப்பில் இருந்து யாரும் வாழ்த்துத் தெரிவிக்கவில்லை, அதை நான் எதிர்பார்க்கவும் இல்லை.

பெற்றோல் விலை உயர்த்தப்பட்டால்கூட, தமிழக அரசு விற்பனை வரியைக் குறைத்தால் பெற்றோலை பழைய விலைக்கே விற்கலாம். ஆனால், இதைச் செய்ய தமிழக அரசு ஏன் மறுக்கிறது எனத் தெரியவில்லை.

வரும் சட்டப்பேரவைத் தேர்தலில், கோபி செட்டிபாளையத்தில் போட்டியிட காங்கிரஸ் மேலிடம் வாய்ப்புக் கொடுத்தால் போட்டியிடுவேன்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

# 2ஜி விவகாரத்தில் தனது நிலையை தி.மு.க. தெளிவுபடுத்த வேண்டும்!

## பிருந்தா காரத் வலியுறுத்து



2 ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு விவகாரத்தில் தி.மு.க. தனது நிலையைத் தெளிவுபடுத்த வேண்டும் - என்று மார்க்சிஸ்ட் கட்சி அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் பிருந்தா காரத் வலியுறுத்தினார்.

தமிழ்நாட்டில் ஆதிவாசி மக்களுக்கான வன உரிமைச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி, தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கம் சார்பில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தர்ணா போராட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொள்ள சென்னை வந்த பிருந்தா காரத், செய்தியாளர்களிடம் கூறுகையில் -

2 ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் ராசா குற்றம் செய்துள்ளார். எனினும், அவர் ஒருவரை மட்டுமே ஒட்டுமொத்தமாக குற்றம்சாட்ட முடியாது. என்ன நடந்தது என்பது தி.மு.கவில் உள்ள முன்னணித் தலைவர்கள் அனைவருக்கும் முழுமையாகத் தெரியும். எனவே, தனது நிலையைத் தெளிவுபடுத்த வேண்டியது தி.மு.க. தலைமையின் கடமை - என்று தெரிவித்தார்.

பின்னர் சென்னை மெமோரியல் ஹோல் அருகே நடைபெற்ற தர்ணா போராட்டத்தில் கலந்துகொண்டு பிருந்தா காரத் பேசியவை வருமாறு -

தமிழ்நாட்டில் அரூர் தொகுதியில் தி.மு.க. அமைச்சர்களால் ஆதிவாசி மக்களின் 300 ஏக்கர் நிலம் அபகரிக்கப்பட்டுள்ளது. அந்த நிலங்களை ஆதிவாசி மக்களிடம் திரும்ப ஒப்படைக்க தி.மு.க. அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆதிவாசி மக்களுக்கான வன உரிமைச் சட்டம் 2006 இல் கொண்டுவரப்பட்டது.

எனினும், அந்தச் சட்டம் இதுவரை தமிழகத்தில் நிறைவேற்றப்படவில்லை. வன உரிமைச் சட்டத்தின்படி ஆதிவாசி மக்களுக்கான உரிமைகள் வழங்கப்படவில்லை.

ஆதிவாசி மக்கள் அனைவருக்கும் உடனடியாக ஜாதிச் சான்றிதழ் வழங்கவும், வன உரிமைச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தவும் தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். - இப்படி அவர் தெரிவித்தார்.

# மத்திய பிரதேசத்தில் வருடம் ஒன்றுக்கு 2 ஆயிரத்து 937 பெண்கள் வல்லுறவு

மத்தியபிரதேசம், டிசெ. 23

பெண்களுக்கு எதிராக நடக்கும் குற்றங்கள் தொடர்பாக தேசிய குற்றங்கள் பதிவுத் துறை புதிய பட்டியலை வெளியிட்டு உள்ளது. அதில், 2009 ஆம் ஆண்டில் இந்தியா முழுவதும் 21 ஆயிரத்து 397 பெண்கள் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனக் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே மத்திய பிரதேச மாநிலத்தில்தான் அதிக கற்பழிப்பு நடக்கிறது. அங்கு கடந்த ஆண்டில் 2937 பெண்கள் கற்பழிக்கப்பட்டுள்ளனர். இந்தியாவில் 13.7 சதவீதக் குற்றங்கள் அங்குதான் நடக்கின்றன.

2 ஆவது இடத்தை மேற்கு வங்காளம் பிடித்துள்ளது. அங்கு 2,263 பேர் கற்பழிக்கப்பட்டுள்ளனர்.

உத்தரபிரதேசம் 3ஆவது இடத்தில் உள்ளது. அங்கு கடந்த ஆண்டு 1,871 பேர் கற்பழிக்கப்பட்டுள்ளனர்.

**இந்தியச் செய்திகள்**

மராட்டியத்தில் 1558 பேரும், ராஜஸ்தானில் 1,355 பேரும், பீஹாரில் 1,302 பேரும் கற்பழிப்புக்கு உள்ளாகி உள்ளனர். இந்தியாவிலேயே நாகலாந்து மாநிலத்தில்தான் கற்பழிப்பு குறைவாக உள்ளது. அங்கு 19 பேர் மட்டுமே இதில் சிக்கியுள்ளனர்.

கற்பழிக்கப்படும் பெண்களில் 57.2 சதவீதம் பேர் 18 வயதில் இருந்து 38 வயதுக்கு உட்பட்டவர்கள். 91 சதவீத கற்பழிப்புச் சம்பவங்கள் பெண்களுக்கு அறிமுகமானவர்களாலேயே நடக்கிறது. 33.1 சத வீத பெண்கள் பக்கத்து வீட்டுக்காரர்களால் கற்பழிக்கப்படுகின்றனர்.

# 1.76 கோடி ரூபா 2 ஜி ஊழலை மறைக்கவே இந்து அமைப்புகள் மீது காங். குற்றச்சாட்டு

## சுப்பிரமணியம் சுவாமி தெரிவிப்பு

திருநெல்வேலி, டிசெ. 23



ஸ்பெக்ட்ரம் ஊழலை மறைக்கவே இந்து அமைப்புகளுக்கு தீவிரவாதிகளுடன் தொடர்பு இருக்கிறது என காங்கிரஸ் குற்றம்சாட்டி வருகிறது - என்று ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்தார்.

பாளையங்கோட்டையில் நடைபெற்ற ஸ்பெக்ட்ரம் ஊழல் விளக்க பொதுக்கூட்டத்தில் அவர் பேசியவை வருமாறு -

2 ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் ரூபா ஒரு லட்சத்து 76 ஆயிரம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது. இதில் 35 சதவீதத் தொகையான ரூபா 60 ஆயிரம் கோடிக்கு ஊழல் நடந்துள்ளது.

தொலைத்தொடர்புத் துறையில் முன் அனுபவம் இல்லாத இரண்டு வெளிநாட்டு நிறுவனங்கள் உள்ளிட்ட பல நிறுவனங்களுக்கு அலைக்கற்றையை ஒதுக்கீடு செய்து இந்த முறைகேட்டில் ஈடுபட்டுள்ளனர்.

அந்த வெளிநாட்டு நிறுவனங்கள் தீவிரவாத அமைப்புகளுடன் தொடர்பு கொண்டவை என உள்துறை அமைச்சக அறிக்கை கூறுகிறது. அலைக்கற்றை ஒதுக்கீட்டை பெற்ற நிறுவனங்கள் அதை 8 மடங்கு கூடுதல் விலைக்கு வேறு நிறுவனங்களுக்கு விற்பனை செய்துள்ளன.

பிரதமரின் அறிவுரையைக் கேட்காமல் இந்த ஊழலில் ஈடுபட்டுள்ளனர். பிரதமர் நேர்மையான மனிதர். அவர் ஒரு குற்றமும் செய்யவில்லை.

ராசா செய்துள்ள ஊழலை மறைக்க அவர் 'தலித்' என்பதால்தான் குற்றம் சாட்டப்படுவதாக கருணாநிதி கூறுகிறார். உத்தரப் பிரதேச மாநில முதல்வர் மாயாவதிக்கு மத்திய அரசு பல்வேறு தொந்தரவுகளைக் கொடுத்து வருகிறது. அந்த 'தலித்' பெண்ணுக்கு ஆதரவாக கருணாநிதி குரல் கொடுக்கவில்லையே ஏன்?

காங்கிரஸ் கட்சிக்கு ஊழல் மட்டும்தான் தெரியும். அவர்கள்தான் இப்போது ஊழலை ஒழிக்கப் போகிறோம் என்கிறார்கள். காங்கிரஸ் ஒழிந்தால்தான் ஊழல் ஒழியும்.

இந்த ஊழலை மறைக்க தீவிரவாதிகளுடன் இந்து அமைப்புகளுக்குத் தொடர்பு இருக்கிறது என ராகுல் காந்தி கூறியிருக்கிறார்.

அப்படி ஒரு தகவலை இந்தியாவின் எந்த ஒரு புலனாய்வுப் பிரிவும் கூறவில்லை. காங்கிரஸ் மட்டும் எப்படி அவ்வாறு கூறி வருகிறது?

தமிழ்நாட்டில் நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் - தி.மு.க. இடையிலான உறவு முறியாது. அதனால் அ.தி.மு.கவானது இதர அனைத்துக் கட்சிகளையும் ஒருங்கிணைத்து தேர்தலைச் சந்திக்க வேண்டும். அதற்கு பொதுமக்கள் ஆதரவு வழங்க வேண்டும். அவ்வாறு ஆதரவு அளித்தால் கருணாநிதியை வீட்டுக்கு அனுப்பலாம்.

- இப்படி அவர் தெரிவித்தார்.



ஆந்திராவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான நிவாரணத்தொகையை உயர்த்தித்தரக்கோரி முன்னாள் காங்கிரஸ் எம்.பி. ஜெகன்மோகன்ரெட்டி விஜயவாடாவில் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார்.

# உண்ணாவிரதத்தைக் கைவிட சந்திரபாபு நாயுடு மறுப்பு

ஹைதராபாத்,டிசெ.23

மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணத்தை வழங்கும் வரை உண்ணாவிரதத்தைத் தொடருவேன் - என்று ஆந்திர முன்னாள் முதல்வர் சந்திரபாபு நாயுடு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

ஹைதராபாத் நிஜாம் மருத்துவமனையில் இருந்தவாறே நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை 5 ஆவது நாளாக உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்ந்தார்.

சந்திரபாபு நாயுடுவின் உடல்நிலை மேலும் மோசமடைந்துள்ளது. அவரது உடல்நிலையை 6 பேர் கொண்ட டாக்டர் குழுவினர் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

# இந்திய அரியவகை கடலட்டைக்கு இலங்கை ஹெரோயின் பரிமாற்றம்

## தமிழக வனத்துறையினர் மோப்பம்

இராமநாதபுரம், டிசெ. 23

இந்தியக் கடல் அட்டைகளை வைத்து இலங்கையிலிருந்து ஹெரோயின் பரிமாற்றம் நடந்து வருகிறது என இந்திய வனத்துறையினர் சந்தேகிக்கின்றனர்.

இந்தியாவின் மன்னார் வளைகுடாவில் அரிய வகை கடல் அட்டைகள் உள்ளன. இவற்றைச் சேகரிக்க தடை விதிக்கப்பட்டிருந்தும், சமூக விரோதக் கும்பல் தொடர்ந்து அவற்றைக் கடத்தி வருகிறது. ஆண்மை விருத்தி மற்றும் பல்வகை நோய்களுக்கு மருந்தாகக் கருதி, கடல் அட்டைகள் சீனாவுக்குக் கடத்தப்படுவது தெரியவந்துள்ளது.

இலங்கையில் கடல் அட்டைகள் பிடிக்கத்தடை இல்லை என்றபோதும் தமிழகக் கடல் பகுதியில் கிடைப்பதைப் போன்ற அரியவகை அட்டைகள் அங்கு கிடைப்பதில்லை. இதனால்தான் கடத்தல் கும்பல் இந்தியக் கடல் அட்டைகளை இலங்கைக்குக் கடத்திச் சென்று பண்டமாற்ற முறையில் ஹெரோயின் பெற்றுக் கொள்வது தெரியவந்துள்ளது.

கடல் அட்டை கடத்தலைத் தடுக்க வனத்துறை தீவிர நடவடிக்கை எடுத்துவருகிறது. இதன் ஒரு பகுதியாக, காலியாக உள்ள கடற்பகுதி வனத்துறைக் கண்காணிப்பாளர் பணியிடங்களை நிரப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின் டெண்டுல்கரிடம் முதலிடத்தை பறிகொடுக்கும் நிலையில் இலங்கை அணித்தலைவர் சங்கக்கார!

துபாய், டிசெ. 23

ஐ.சி.சி. டெஸ்ட் துடுப்பாட்ட தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் இலங்கைக் கிரிக்கெட் அணியின் தலைவரான குமார் சங்கக்கார, இந்திய அணியின் நட்சத்திர வீரரான சச்சின் டெண்டுல்கரிடம் முதலிடத்தைப் பறிகொடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தியா - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே செஞ்சூரியனில் நடந்த முதலாவது டெஸ்ட் போட்டியின் முடிவுக்குப் பிறகு, வீரர்களின் தரவரிசையை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) வெளியிட்டுள்ளது.

இதில், டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசையில், கடந்த மாதம் இலங்கை அணித் தலைவரான சங்கக்காரவிடம் முதலிடத்தைப் பறிகொடுத்த இந்திய வீரரான சச்சின் டெண்டுல்கர், செஞ்சூரியனில் நடந்து முடிந்த டெஸ்ட் போட்டியில் சதம் அடித் ததன் மூலம் மீண்டும் முதலிடத்தைத் தட்டிப்பறிக்கும் நிலையை நெருங்கியிருக்கிறார்.

டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் 880 புள்ளிகளுடன் சச்சின் 2ஆவது இடத்தில் இருக்கிறார். முதலிடம் வகிக்கும் சங்கக்கார அவரை விட வெறும் 2 புள்ளிகளால் மட்டுமே முன்னிலையில் இருப்பதால், அடுத்த டெஸ்ட் போட்டியின்போது டெண்டுல்கர் மீண்டும் முதலிடத்தைப் பிடிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.



டெஸ்ட் தரவரிசையில் முதல் 10 இடங்களைப் பிடித்துள்ள துடுப்பாட்ட வீரர்கள் விவரம் வருமாறு-

01. சங்கக்கார (இலங்கை)
02. டெண்டுல்கர் (இந்தியா)
03. கலிஸ் (தென்னாபிரிக்கா)
04. ஷேவாக் (இந்தியா)
05. டிவில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா)
06. மைக் ஹஸி (ஆஸ்திரேலியா)
07. மஹேல ஜெயவர்த்தன (இலங்கை)
08. சந்திரபோல் (மே.இ.தீவுகள்)
09. அம்லா (தென்னாபிரிக்கா)
10. ஜோனதன் டிராட் (இங்கிலாந்து)

டெஸ்ட் தரவரிசையில் முதல் 10 இடங்களைப் பிடித்துள்ள பந்து வீச்சாளர்கள் விவரம் வருமாறு-

01. ஸ்ரெயின் (தென்னாபிரிக்கா)
02. ஸ்வான் (இங்கிலாந்து)
03. மோர்னேமோர்கல் (தென்னாபிரிக்கா)
04. ஜோன்சன் (ஆஸ்திரேலியா)
05. அண்டர்சன் (இங்கிலாந்து)
06. முகமது ஆஸிப் (பாகிஸ்தான்)
07. சஹீர்கான் (இந்தியா)
08. ஷகிப் அல்ஹசன் (பங்களாதேஷ்)
09. முகமது ஆமிர் (பாகிஸ்தான்)
10. ஹர்பஜன்சிங் (இந்தியா)

## கலிஸ் சென்ற கார் விபத்து



ஜோகனஸ்பேர்க்,டிசெ.23


தென்னாபிரிக்க வீரரான கலிஸ் சென்ற கார் கேப்டவுணில் விபத்துக்குள்ளாகியுள்ளது. எனினும், அவர் காயமேதுமின்றித் தப்பியுள்ளார்.

தென்னாபிரிக்க அணியின் சகலதுறை வீரரான கலிஸ் (வயது -35), இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்டில் இரட்டைச் சதம் அடித்து, ஆட்ட நாயகன் விருதையும் வென்றிருந்தார்.

போட்டி முடிவடைந்த அன்று நள்ளிரவு வேளையில், தனது காரில் கலிஸ் வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்தார். காரை அவரே ஓட்டிச்சென்றுள்ளார்.

அப்போது வெயின்பார்க்கில் உள்ள வீடு ஒன்றின் கேட் மீது அவரது கார் பலமாக மோதியுள்ளது. இதனால், கார் பலத்த சேதமடைந்தது. எனினும், கலிஸ் காயமேதுமின்றித் தப்பினார்.

## பந்துவீசத் தடை!



துபாய்,டிசெ.23

சர்ச்சைக்குரிய முறையில் பந்துவீசிய மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரரான ஷேன் சிலிங் போர்ட்டுக்கு, பந்துவீசுவதற்கு சர்வதேசக் கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) தடைவிதித்துள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சுழற்பந்து வீச்சாளரான ஷேன் சில்லிங் போர்ட் (வயது-27), சமீபத்தில் தென்னாபிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அறிமுகமானார்.

இலங்கைக்கு எதிரான காலி டெஸ்ட் போட்டியின்போது இவரது பந்துவீச்சு முறையில் சந்தேகம் கொண்ட, அப்போது களத்தில் பணிபுரிந்த நடுவர்களான ஸ்ரீவ் டேவிஸ், ரிச்சர்ட் கெட்டில்புரோ மற்றும் மூன்றாவது நடுவர் ஆஸாத் ராப், ஜெயவர்தன ஆகியோர் ஐ.சி.சியிடம் முறையிட்டனர்.

இதையடுத்து, கடந்த 9ஆம் திகதி பேர்த்தில் வைத்து, ஐ.சி.சியால் ஷில்லிங் போர்ட் மீது சோதனை நடத்தப்பட்டது.

இதன்போது, பந்துவீசிய அவர், விதியை மீறி (15 டிகிரி) முழங்கையை 17 டிகிரி அளவுக்கு வளைத்துள்ளார்.

இதையடுத்து சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்க அவருக்குத் தடை விதிக்கப்பட்டது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து 14 நாட்களுக்குள், ஷில்லிங்போர்ட் மேன்முறையீடு செய்ய வேண்டும் என்றும் ஐ.சி.சி. தெரிவித்துள்ளது.

## புதுமுக வீரர்கள் ஏழு பேருடன் நியூஸிலாந்து உத்தேச அணி!

2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான 30 வீரர்களைக் கொண்ட உத்தேச நியூஸிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் 7 பேர் புதுமுகங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பங்களாதேஷ், இந்திய அணிகளுக்கு எதிராக ஒருநாள் தொடர்களில் படுதோல்வியடைந்ததையடுத்து பயிற்சியாளராக ஜோன் ரைட் நியமிக்கப்பட்டார்.

பெப்ரவரி 19ஆம் திகதி ஆரம்பமாகும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடருக்கான நியூஸிலாந்தின் இறுதி 15 வீரர்கள் கொண்ட அணி ஜனவரி மாதம் அறிவிக்கப்படவுள்ளது.

இந்நிலையில், உத்தேச அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அதில், இளம் வீரர்கள் 7 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஜேகப் ஓரம் இந்த உத்தேச அணியில் இடம்பெற்றுள்ளார். ஹாப்கின்ஸ் நீக்கப்பட்டுள்ளார்.

அணி விவரம் வருமாறு:-

பிரெண்ட் ஆர்னெல், ஹமிஸ் பென்னேற், டௌக் பிராஸ்வெல், டியன் பிரவ்ன்லி, இயன் பட்லெர், டானியல் பிளின், மார்டின் குப்தில், ஜமி கௌவ், ஜமேஸ் பிராங்ளின், கெய்ல் மில்ஸ், அடம் மில்னே, பிரண்டன் மக்கலம், நதன் மக்கலம், பீற்றர் மைக்கலம், அன்டி மைக்கேய், ரொப் நிகோல், ஜகப் ஓரம், ஜீரன் பெடெல், ஜசீ ரைடர், ரிம் சௌத்தீ, ஷான் ஸ்ரீவார்ட், ஸ்கோற் ஸ்ரைரிஸ், ரோஸ் ரெய்லர், டரில் ரிவ்வி, டானியல் வெற்றோரி, வாட்லிங், கானே வில்லியம்சன், லூகே வூட்குக், ரீஸ் யங்.




## 4ஆவது ஐ.பி.எல். தொடரிலும் பாகிஸ்தான் வீரர்கள் இல்லை!

2011ஆம் ஆண்டு நடைபெறவுள்ள நான்காவது ஐ.பி.எல். தொடரிலும் பாகிஸ்தான் வீரர்கள் பங்கேற்கமாட்டார்கள் எனத் தெரியவருகிறது.

முதலாவது ஐ.பி.எல். பருவகாலத்தில் பாகிஸ்தான் வீரர்கள் கலந்துகொண்டு விளையாடினார்கள்.

அதன்பிறகு மும்பைத் தாக்குதல் சம்பவத்தின் எதிரொலியாக 2ஆவது ஐ.பி.எல். தொடரில் அவர்களுக்குத் தடை விதிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து 3ஆவது ஐ.பி.எல். தொடருக்கான ஏலப்பட்டியலிலிருந்த [illegible] அணி உரிமையாளர்களும் அவர்களை வாங்க முன்வராததால் சர்ச்சையானது.

இந்நிலையில் 4ஆவது ஐ.பி.எல். போட்டியிலும் அவர்கள் பங்கேற்கமாட்டார்கள் என்பது உறுதியாகியுள்ளது.

ஐ.பி.எல். வீரர்களின் ஏலத்தில் பங்கேற்க விரும்பும் வீரர்கள், சம்பந்தப்பட்ட நாடுகளின் கிரிக்கெட் சபைகள் மூலம் அணுக வேண்டும். ஆனால், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடமிருந்து வீரர்களின் பட்டியல் எதையும் தாம் பெறவில்லை என்று ஐ.பி.எல். [illegible] தெரிவித்துள்ளனர்.

### தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட்:

## களம் திரும்புகிறார் சச்சின்; கழற்றிவிடப்பட்டார் ரோஹித்!



புதுடில்லி,டிசெ.23

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒரு நாள் கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணியில் டெண்டுல்கர் மீண்டும் இடம் பிடித்துள்ளார்.

சுழற்பந்து வீச்சாளரான பயுஷ் சாவ்லாவுக்கு 2 ஆண்டுகளுக்குப் பின்னர் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதேசமயம் ரோஹித் சர்மா கழற்றிவிடப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி, தற்போது 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடிவருகிறது.

டெஸ்ட் தொடர் முடிந்ததும் தென்னாபிரிக்காவுக்கு எதிராக ஓர் 'இருபது-20' போட்டி மற்றும் 5 போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் மோதவுள்ளது.

ஒரு நாள் கிரிக்கெட் தொடர் அடுத்த வருடம் ஜனவரி 12ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது 'இருபது-20', ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடருக்கான இந்திய அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

சுமார் 10 மாதங்களுக்குப் பின்னர் ஒரு நாள் போட்டி அணிக்கு சச்சின் திரும்பியுள்ளார். குவாலியரில் கடந்த பெப்ரவரி மாதம் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் இரட்டைச் சதம் அடித்த பிறகு, ஒரு நாள் போட்டிகளில் தொடர்ந்து ஓய்வு எடுத்து வந்த டெண்டுல்கர், உலகக் கிண்ணத் தொடர் நெருங்குவதால் அதற்குப் பயிற்சி பெறும் விதமாக அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இதேபோல் சமீபத்தில் நியூஸிலாந்துத் தொடரின்போது ஓய்வு வழங்கப்பட்டிருந்த அணித்தலைவர் டோனி, ஷேவாக், ஹர்பஜன்சிங் ஆகியோரும் அணிக்குத் திரும்புகிறார்கள்.

அதேவேளை, சுழற்பந்து வீச்சாளரான பயுஷ் சாவ்லா அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் கடைசியாக 2008ஆம் ஆண்டு ஒரு நாள் போட்டியில் ஆடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கு முன்பாக இந்திய அணி பங்கேற்கும் கடைசித் தொடர் இதுவென்பதால், உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்கக் கூடிய வீரர்கள் அடங்கிய அணி களமிறக்கப்படுகிறது.

அணி விவரம் வருமாறு:-

டோனி (அணித்தலைவர்), ஷேவாக், கௌதம் கம்பீர், சச்சின் டெண்டுல்கர், விராத் கோஹ்லி, சுரேஷ் ரெய்னா, யுவராஜ் சிங், ஹர்பஜன்சிங், சஹீர்கான், நெஹ்ரா, பிரவீன்குமார், முனாப் பட்டேல், அஷ்வின், யூசுப்பதான், பியுஷ் சாவ்லா, ஸ்ரீசாந்த்.

'இருபது - 20' கிரிக்கெட் போட்டிக்கும் இதே அணியே அறிவிக்கப்பட்டிருந்தாலும், டெண்டுல்கர் 'இருபது-20' சர்வதேசக் கிரிக்கெட் போட்டியிலிருந்து ஏற்கனவே ஓய்வுபெற்றுவிட்டார். இதனால் அவர் இந்தப் போட்டியில் பங்கேற்பது சந்தேகமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.சி.சியின் 'கனவு அணி'யில் சங்கக்கார, முரளிதரன் தெரிவு

துபாய், டிசெ. 23

ஐ.சி.சியின் 'கனவு அணி'யில் இலங்கை அணியின் முன்னாள் வீரர்கள், தற்போது விளையாடி வரும் வீரர்களது பெயர்கள் இடம்பிடித்துள்ளன.

அதன்படி சனத் ஜெயசூரிய, அரவிந்த டி சில்வா, களுவிதாரண, குமார் சங்கக்கார, சமிந்த வாஸ், முத்தையா முரளிதரன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

ஐ.சி.சி.யின் 40ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு தனது இணையதளத்தில் வாக்கெடுப்பு ஒன்றை நடத்துகிறது. இற்காக பல பிரிவுகளின்கீழ் வீரர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

'கனவு அணி' என்ற தலைப்பில் 48 வீரர்களைத் தேர்ந்தெடுத்துள்ளது. இதில் 6 பிரிவுகள் உள்ளன.

ஆரம்ப வீரர்கள், மத்திய வரிசை வீரர்கள், சகலதுறைவீரர், விக்கெட் காப்பாளர், வேகப்பந்து வீச்சாளர், சுழல் பந்து வீச்சாளர் ஆகிய பிரிவுகளைக் கொண்டதாகும்.

தெரிவுசெய்யப்பட்ட வீரர்கள் விவரம் வருமாறு:-

ஆரம்ப வீரர்கள் - சச்சின், சயித் அன்வர், சௌரவ் கங்குலி, கோரன் கிரிண்டச், மத்தியூ ஹடன், சனத் ஜெயசூரிய, வீரேந்தர் ஷேவாக், கிலேன் டர்னர்.

மத்திய வரிசை வீரர்கள் - மைக்கல் பெவன், மார்ட்டின் கிரோ, அரவிந்த டி சில்வா, இன்ஸமாம் உல் ஹக், பிரைன் லாரா, ஜவத் மியான்டாட், ரிக்கி பொண்டிங், வி.வி. ரிச்சர்ட்ஸ்.

சகலதுறை வீரர்கள் - இயன் பொத்தம், கபில்தேவ், அன்ரூ பிளின்ரொப், ரிச்சர்ட் ஹட்லி, ஜக் கலிஸ், இம்ரான்கான், லான்ஸ் குலுஸ்னர், சான் பொல்லாக்.

விக்கெட் காப்பாளர்கள் - மார்க் பௌச்சர், டோனி, அன்டி பிளவர், அடம் கில்கிறிஸ்ட், களுவிதாரண, மொயின்கான், அலெக்ஸ் ஸ்டிவர்ட், குமார் சங்கக்கார.

வேகப் பந்து வீச்சாளர்கள் - வசிம் அக்ரம், அலன் டோனால்ட், ஜொயல் கார்னர், மைக்கல் ஓய்டிங், டென்னிஸ் லீலி, மெக்ராத், சமிந்த வாஸ், வக்கர் யூனிஸ்.

சுழல் பந்து வீச்சாளர்கள் - அப்ரிடி, கார்ல் ஊப்பர், அனில் கும்ளே, முத்தையா முரளிதரன், சக்லென்முத்தாக், ஹர்பஜன் சிங், ஷேன் வோர்ண், டானியல் வெற்றோரி.

## இன்று நடைபெறும் கூடைப்பந்தாட்டங்கள்

வலி.வடக்கு, டிசெ. 23

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் யாழ்.மாவட்ட ஆண்கள், பெண்கள் கூடைப்பந்தாட்ட கழகங்களுக்கு இடையே நடத்திவரும் கூடைப்பந்தாட்டப் போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு -

**பெண்கள்**

கொக்குவில் மத்திய ச.ச. விளையாட்டுக்கழக அணி எதிர் யாழ்ப்பாணம் பட்டபிளை வி.க.

**ஆண்கள்**

யாழ்ப்பாணம் ஜொலிஸாரர் விளையாட்டுக்கழக 'பி' அணி எதிர் யாழ். கேகஸ் விளையாட்டுக்கழகம். (ஒ-86)

# விளையாட்டு அலுவலர் நியமனம்: பரீட்சை முடிவுகள் வெளிவந்தன

வலி.வடக்கு, டிசெ. 23

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தில் நிலவும் விளையாட்டு அலுவலர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் வட மாகாணத்துக்கு உட்பட்ட மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்ட இப்பரீட்சைக்கு ஆயிரக்கணக்கான பரீட்சார்த்திகள் தோற்றி இருந்தார்கள்.

கடந்த பத்து ஆண்டு கால இடைவெளியின் பின்னர் நடைபெற்றுள்ள பரீட்சையில் சித்தியெய்துபவர்கள் மூலம் வடமாகாணத்தில் காணப்படும் விளையாட்டு அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

ஏற்கனவே வடமாகாணத்துக்கு உட்பட்ட மாவட்டங்களில் இருந்து விளையாட்டு அலுவலர்கள் பன்னிரண்டு பேர் விளையாட்டுப் பயிற்றுநர்களாக நியமனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து வெற்றிடங்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது.

தற்போது ஆகக் குறைந்தது 28 பேருக்கான வெற்றிடங்கள் காணப்படுவதாகவும், தற்போது வெளியான பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் அந்த வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளதாகவும் கூறப்பட்டது.

இந்த விளையாட்டு அலுவலர் நியமனத்துக்கு 110 புள்ளிகள் வெட்டுப் புள்ளிகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-86)




**புதிய முயற்சி...**



வெற்றி: யாழ்.மாவட்ட பாடசாலைகள் ஹொக்கி விளையாட்டுச் சங்கம் முதல் முறையாக யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவுப் பெண்களுக்கு இடையே நடத்திய ஹொக்கிப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட உடுவில் மகளிர் கல்லூரி அணி. (த-86)

# கொமன்வெல்த் ஆவணங்கள் மாயம்

கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் முக்கிய ஆவணங்கள் சில மாயமாகியுள்ளன. மத்தியப் புலனுய்வுக்கழக விசாரணைக் குழுவினர் இந்த ஆவணங்கள் ஒன்று சேதப்படுத்தப்பட்டிருக்கலாம் அல்லது மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதுகின்றனர்.

முக்கியமான ஒப்பந்த கோப்புகள், ஒப்பந்தப் புள்ளிகள் விவரங்கள் அடங்கிய ஆவணங்கள், நிதிஒதுக்கீடு பற்றிய ஆவணங்கள் ஆகியவை குறிப்பாகக் காணாமல் போயுள்ளதாக அதிகாரபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொமன்வெல்த் விளையாட்டு ஒருங்கிணைப்புக் குழுவின் சில பெயர் தெரியாத நபர்கள் இந்த ஆவணங்களை சேதம் செய்ததற்கான அல்லது அதிலுள்ள தகவல்களை திருத்தியிருப்பதற்கான தகுந்த ஆதாரங்களை மத்திய புலனாய்வுக் கழகம் தன்னிடம் வைத்துள்ளதாக அதிகாரபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது போன்று காணாமல் போயுள்ள ஆவணங்களை மத்திய புலனாய்வுக் கழகத்தினர் பட்டியலிட்டுள்ளனர்.

# உலகக் கிண்ண அணியில் ஜெயசூரிய வேண்டாம்

கொழும்பு, டிசெ.23

விளையாட்டுத்துறைக்குள் அரசியல் புகுத்தப்படக்கூடாது என ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் பங்கேற்று உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போதைய விளையாட்டுத்துறை அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளுக்காக ஸ்ரீலங்காவின் ஆளும் கட்சியினது நாடாளுமன்ற உறுப்பினர் சனத் ஜெயசூரிய எந்த அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டார் என அவர் அரசிடம் கேள்வி எழுப்பினார்.



தற்போது விளையாட்டுக்கான தகுதியற்ற நிலையில் உள்ள சனத் ஜெயசூரிய எந்த வகையில் விளையாடப் போகிறார் என்பது கேள்விக்குரியதாகும்.

எனினும் அவரை உலகக் கிண்ண அணியில் சேர்ப்பதன் காரணமாக இளம் வீரர்களின் திறமைகள் மழுங்கடிக்கப்படுவதாக ஹரின் பெர்னாண்டோ குற்றம் சுமத்தியுள்ளார். (த)

# சானியாவை என்னுடன் ஒப்பிடுவதா?

**சாய்னா கோபம்**





புதுடில்லி, டிசெ. 23

'கிராண்ட்ஸ்லாம்' பட்டத்திற்கு நிகரான 'சூப்பர் சீரிஸ்' பட்டங்களை 4 தடவைகள் நான் வென்றிருக்கிறேன். ஆனால், சானியா ஒரு 'கிராண்ட்ஸ்லாம்' (ஒற்றையர்) பட்டத்தைக் கூட வென்றதில்லை. எனவே, என்னுடன் சானியாவை ஒப்பிட்டுப் பார்ப்பது கேலிக்குரியது.

- இவ்வாறு இந்தியா பட்மிண்டன் வீராங்கனையான சாய்னா கோபத்துடன் தெரிவித்துள்ளார்.

இந்திய விளையாட்டுத்துறையில் சானியா மிர்ஷா (டென்னிஸ்), சாய்னா நேவால் (பட்மிண்டன்) இருவரும் மிகவும் பிரபலமானவர்கள்.

இவர்கள் இருவருக்கும் ஏராளமான ரசிகர்கள் பட்டாளமும் உண்டு. சானியா-சாய்னா இருவரையும் ஊடகங்களும், ஒரு சில முன்னாள் பிரபலங்களும் ஒப்பிட்டுக் கூறுவதும் உண்டு.

ஆனால், இருவரையும் ஒப்பிட்டுப் பார்ப்பதை உலகத் தரவரிசையில் 2ஆவது இடத்தை வகிக்கும் சாய்னா நேவால் விரும்பவில்லை.

இது தொடர்பான கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த சாய்னா,

''உலகத் தரவரிசையில் நாங்கள் இருவரும் ஒரே மாதிரியாக 2ஆவது இடத்தில் இருந்தால் ஒப்பிட்டுப் பேசுவதில் அர்த்தம் உண்டு.

ஆனால், இங்கு அப்படி இல்லை. அதுமட்டுமின்றி சானியா இரட்டையரில் உண்மையிலேயே நன்றாக ஆடியுள்ளார். ஆனால், ஒற்றையரில் குறிப்பிடும்படியாக இல்லை. அதேபோல 'கிராண்ட்ஸ்லாம்' பட்டத்திற்கு நிகரான 'சூப்பர் சீரிஸ்' பட்டங்களை 4 தடவைகள் நான் வென்றிருக்கிறேன்.

ஆனால், அவர் ஒரு 'கிராண்ட்ஸ் லாம்' (ஒற்றையர்) பட்டத்தைக் கூட வென்றதில்லை.

எனவே, சானியாவுடன் என்னை ஒப்பிட்டுப் பார்ப்பது கேலிக்குரியது. - என்றார்.

சானியா மிர்ஷா டென்னிஸ் ஒற்றையர் தரவரிசையில் 14ஆவது இடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வரலாற்றில் சிறந்த துடுப்பாட்ட வீரர் சச்சின் - அக்ரம்

''கிரிக்கெட் வரலாற்றில் இந்தியக் கிரிக்கெட் வீரரான சச்சின் தான் சிறந்த துடுப்பாட்டவீரர்'' என்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரரான வசிம் அக்ரம் கூறியுள்ளார்.

சச்சின் டெண்டுல்கர் செஞ்சூரியனில் அடித்த, அவரது 50ஆவது டெஸ்ட் சதம் குறித்த கட்டுரையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அதில் மேலும் கூறியிருப்பவை வருமாறு:-

1989ஆம் ஆண்டில் பாகிஸ்தானுக்கு எதிராக தனது முதல் டெஸ்ட் போட்டியில் களமிறங்கினார் சச்சின். அப்போதே எனக்கும், எனது அணி வீரர்களுக்கு இந்த வீரர் நிச்சயம் மிகப் பெரிய சாதனைகள் படைப்பார் என்று தோன்றியது. இதற்குக் காரணம் அந்த 16 வயதிலேயே அவர் அவ்வளவு துணிச்சலுடன் பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களின் பந்துகளை எதிர்கொண்டது தான்.

அவருடைய தைரியத்தைப் பார்த்து எங்களுக்கு அப்படித்தான் தோன்றியது. சிறப்பாக விளையாட அவர் செய்த முயற்சிகளை முதல் போட்டியிலேயே நாங்கள் பார்த்தோம்.

ஆனால், இப்போது கிரிக்கெட் வரலாற்றில் முழுமையான துடுப்பாட்ட வீரராக இருக்கிறார். ஒருநாள் போட்டிகளிலும், டெஸ்ட் போட்டிகளிலும் அவர் ஓட்டங்களைக் குவிப்பதைப் பார்த்தாலே அது தெரிகிறது அவருக்கு கிரிக்கெட் மீதிருக்கும் ஆர்வம். அந்த அளவுக்கு கிரிக்கெட்டுக்காக தன் வாழ்வை அர்ப்பணித்தவர்.

என்னுடைய புத்தகத்தில் சச்சினுக்கு எப்போதும்மிகவும் சிறப்பான துடுப்பாட்ட வீரர் என்ற இடம் உண்டு.''-என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரெழு கணேச வித்தியாசாலை

மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்



திருமதி

## லோகாம்பிகை இரகுநாதன்

உப அதிபர், (இ.ஆ.சே.தரம் I)

எமது பாடசாலையின் ஆசிரியையாக, பதிலதிபராக உப அதிபராக 18 ஆண்டுகளாக தன்னிகரல்லா சேவையை சிறார்களுக்கு வழங்கி இன்று வியாழக்கிழமை (23.12.2010) பணியோய்வு பெறும் நாயகியின் சேவையை வாழ்த்தி அவரது ஓய்வுகாலம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகனை வேண்டுகின்றோம்.

**ஆசிரிய சேவையில்:**

பண்டாரவளை தேமோதா சவுதம் த.க.பாடசாலை 01.07.1970 - 31.12.1977
மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலை 01.01.1978 - 31.12.1979
கல்முனை - காரைதீவு விபுலானந்த மத்திய மகா வித்தியாலயம் 01.01.1980 -19.03.1982
சம்மாந்துறை சொறிக்கல் முனை றோ.க.த.க பாடசாலை 20.03.1982- 01.05.1983
கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரி 02.05.1983-14.03.1985
கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை 15.03.1983-02.03.1993

ஊரெழு கணேச வித்தியாசாலை
*ஆசிரியராக 03.03.1993 - 29.08.2006*
*பதிலதிபராக 30.08.2006 - 10.10.2006*
*உப அதிபராக 11.10.2006 - 22.12.2010*

(சி-574014)

ஊரெழு கணேச வித்தியாசாலை, சுன்னாகம். ஆசிரியர் கழகம்


# மு.காங்கிரஸையும் இணைப்பது குறித்து அடுத்த சந்திப்பில் ஆராய்வு

### சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.23

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட முஸ்லிம் கட்சிகளையும், மலையகக் கட்சிகளையும் இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்த பேச்சுகளில் இணைத்துக்கொள்வது குறித்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான அடுத்த சந்திப்பில் ஆராயப்படுமென தமிழ்க் கட்சிகளின் அரங்கப் பேச்சாளர் எம்.கே. சிவாஜிலிங்கம் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து நடத்தும் பேச்சுகளில் தானும் இணைந்து கொள்வதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விடுத்த வேண்டுகோள் குறித்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழ்க் கட்சிகளின் அரங்கமும் பேச்சு நடத்த தலாமூவரைக் கொண்ட குழுவொன்றை நியமித்திருப்பது தெரிந்ததே.

(ஒ-சி)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும், வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
1927
★
04
★
02



மறைவு
2010
★
11
★
24

### செல்லத்துரை அன்னலிங்கம்

கடந்த 24.11.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவியவர்களுக்கும், ஆறுதல் கூறியவர்களுக் கும், கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், ஆறுதல் கூறி ஆகாரம் அளித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி செய்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (24.12.2010) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

*"கணேசன் கருணை"*
*பிள்ளையார் கோயிலடி,*
*மானிப்பாய் வீதி,*
*தாவடி, கொக்குவில்.* (874015) குடும்பத்தினர்.



# சாவகச்சேரியில்...

க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான விசேட புலமைப்பரிசில் திட்டங்களுடன்.......

GATEWAY CICT

ICDL International Computer Driving Licence
Approved Test Centre



IT ISLAND GATEWAY CENTRE

New Market Building, Chavakacheri
021 227 0323

IT TRAINING & APPROVED ICDL TEST CENTRE

| Diploma Courses | | Certificate Courses | |
|---|---|---|---|
| Diploma In Computer Studies / ICDL | ICDL CAD | e-Citizen | Computer Hardware and Networking |
| Advanced ICDL | ICDL WEBSTARTER | Computer Awareness | Web Designing and Development |
| ICDL IMAGEMAKER | Diploma in ICT | E-TYPE | Computerised Accounting |
| Diploma In Desktop Publishing | Diploma In Accounting Package | Adobe Photoshop | Java Programming |

ASTA 0770219582

எமது யாழ்ப்பாணம், நெல்லியடி பயிற்சி நிலையங்களிலும் மேற்படி கற்கைநெறிகளைப் பயில முடியும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கரைச்சிப் பிரதேச சபை - கிளிநொச்சி

# வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2011

01.01.2011 தொடக்கம் 31.12.2011 வரை கீழ்க்காணும் பொருள்களையும், சேவைகளையும் வழங்குவதற்காக கரைச்சிப் பிரதேச சபையுடன் தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் வழங்குநர்கள், ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழ்க்காணும் ஒவ்வொரு பொருள்களுக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2011 எனக் குறிப்பிட்டு, செயலாளர், கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி என்ற முகவரிக்கு 30.12.2010ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அல்லது நேரில் வழங்க வேண்டும்.

| தொ. இல | வழங்கல்கள் | மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 01 | எழுத்து உபகரணங்கள் | ரூபா 1500.00 |
| 02 | அலுவலக உபகரணங்கள் (பைலிங் கபினட்டுக்கள், உருக்குக் கபினட்டுக்கள், கணினி இயந்திரங்கள், கணினி உதிரிப்பாகங்கள்) | ரூபா 1500.00 |
| 03 | தளபாடங்கள் | ரூபா 1500.00 |
| 04 | மலகூடத் தொட்டி வேலை, களஞ்சியப் பொருள்கள் (தும்புத்தடி, பிரம்புக் கூடைகள், ஈக்கிள் தடிகள், கிருமி நாசினிகள், தெளிகருவிகள், குளோரின், சவர்க்காரம், கையுறை) | ரூபா 1500.00 |
| 05 | அச்சடித்தல் வேலைகள் | ரூபா 1500.00 |
| 06 | இரும்புப் பொருள்கள், தீந்தைகளும் (எல்லா வகையான இரும்புப் பொருள்கள தீந்தைகள்) | ரூபா 1500.00 |
| 07 | கட்டட, வீதி வேலைகளுக்கான பொருள்கள் (ஆற்று மணல், கிறவல், சரளைக்கற்கள், செங்கற்கள், ஓடுகள், களிமண்) | ரூபா 1500.00 |
| 08 | நீர் விநியோகப் பொருள்கள் (பி.வி.சி பைப்புகள், குழாய்கள், பொருத்துக்கள் என்பன) | ரூபா 1500.00 |
| 09 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் (வாகனங்களுக்கான பற்றரி, ரயர், ரியூப், உதிரிப்பாகங்கள்) | ரூபா 1500.00 |
| 10 | நீர் இறைக்கும் இயந்திரம், ஏனைய இயந்திரங்கள். | ரூபா 1500.00 |
| 11 | வாகனங்கள் | ரூபா 1500.00 |
| 12 | மின்சாரப் பொருள்கள் (வயர், மின்குமிழ், சுவிச், மின் இணைப்பு உபகரணங்கள்) | ரூபா 1500.00 |
| 13 | நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் | ரூபா 1500.00 |

| தொ இல | சேவைகள் | மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 01 | கட்டடங்கள் பழுது பார்த்தலும், பேணலும் | ரூபா 1500.00 |
| 02 | மோட்டார் வாகனங்களைப் பழுது பார்த்தலும், சேவிஸ் இடுதலும் | ரூபா 1500.00 |
| 03 | தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் பழுது பார்த்தல் | ரூபா 1500.00 |
| 04 | இலத்திரனியல், இயந்திரங்கள் திருத்துதலும் சேவிஸ் செய்தலும் | ரூபா 1500.00 |
| 05 | பட வரைஞர்கள், கட்டட ஒப்பந்தக்காரர்கள் (கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் உட்பட) கட்டடக் கலைஞர்களைப் பதிவு செய்தல் | ரூபா 1500.00 |

மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு இலக்களுக்கு எதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணங்கள் காசாக அல்லது காசுக் கட்டளையாக செயலாளர், கரைச்சிப்பிரதேச சபை, கிளிநொச்சி என்று எழுதப்பட்டு பதிவு செய்வதற்கான விண்ணப்பத்துடன் வியாபார அனுமதிப்பத்திர சான்றிதழின் பிரதியையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள், ஒப்பந்தகாரர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படும், ஆனால் அவசியம் ஏற்படின் ஏனைய வழங்குநர்களிடமிருந்தும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் கூறுவிலை கோரவும், கொள்வனவு செய்யவும் கரைச்சிப் பிரதேச சபை செயலாளருக்கு உரிமையுண்டு. குறிப்பிட்ட கால எல்லைக்குள் கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டு உரிய காலத்தினுள் நிறைவேற்றத் தவறும் அல்லது வழங்கப்பட்ட சேவைகள், பொருள்கள் கோரப்பட்ட தரத்துக்கும் வழங்கப்பட்ட விவரக் கூற்றுக்களுக்கும் ஏற்ப அமையத்தவறும் வழங்குநர்களின், ஒப்பந்தக்காரர்களின் பெயர் கள் அறிவித்தலின்றி பதிவேட்டிலிருந்து நீக்கப்படும். ஏற்கனவே தவறிழைத்த வழங்குநர்களிடமிருந்தும், ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.

*கரைச்சிப் பிரதேசசபை,*
*கிளிநொச்சி.*
*09.12.2010*

மோ. அருள்சோதி,
*செயலாளர்,*
*கரைச்சிப் பிரதேசசபை,*
*கிளிநொச்சி.*

(கி/574018)

## சாதாரண தரப் பரீட்சை இன்று முடிவு

கொழும்பு, டிச.23

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை முடிவடைந்ததும் மாணவர்கள் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய எந்த ஒரு செயலிலும் ஈடுபடாமல் நேரடியாக தத்தம் வீடுகளுக்குச் செல்லுமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

கடந்த 13 ஆம் திகதி ஆரம்பமான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை இன்று வியாழக் கிழமை முடிவடையும் என்பது குறிப்பிடத்தக்கது.

விசேடமாக கொழும்பு பிரதேசத்திலுள்ள மாணவர்கள் இவ் விடயம் தொடர்பில் கவனம் செலுத்துமாறு கொழும்பு பிரதேசத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனநாயக்க கேட்டுக்கொண்டுள்ளார். (ஒ-சி)

## ஆசிரிய ஆலோசகர் அறுவர் நியமனம்

தென்மராட்சி, டிசெ.23

தென்மராட்சி கல்வி வலயத்தில் வெற்றிடமாகவுள்ள ஆசிரிய ஆலோசகர் பதவிகளுக்கு ஆறு பேர் மாகாண கல்வி அமைச்சினால் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம், முறைசாராக் கல்வி, விவசாயம், சங்கீதம், சித்திரம், உடற் கல்வியும் சுகாதாரமும் ஆகிய பாடங்களுக்கு ஆசிரிய ஆலோசகர்கள் நியமனம் பெற்றுள்ளனர்.

திருமதி சிவநங்கை உருத்திரமூர்த்தி (தகவல் தொழில்நுட்பம்) திருமதி சுகிர்தராணி நகுலேஸ்வரன் (முறைசாராக்கல்வி) துரைசிங்கம் செல்வராஜா (விவசாயம்), திருமதி புனிதகுமாரி ஈழநேசன் (சங்கீதம்), கனகரத்தினம் இராஜன் (சித்திரம்), நடராசா ஸ்ரீகாந்தா (உடற்கல்வியும் சுகாதாரமும்) ஆகியோரே நியமிக்கப்பட்டுள்ளனர். (ஒ-207)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுப்பிரமணியம் சின்னப்பிள்ளை



மாதகலைப் பிறப்பிட்மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் சின்னப்பிள்ளை (22.12.2010) புதன்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, இராசசிங்கம் ஆகியோரின் சகோதரியும், நாகேஸ்வரி, தவமணிதேவி, இராசேஸ்வரி, இரத்தினாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற முருகேசப்பிள்ளை மற்றும் கணேசரத்தினம், தங்கராசா, கணேசலிங்கம் ஆகியோரின் மாமியாரும் வரதளசா (கனடா), நவீந்திரராசா(கனடா) காலஞ்சென்ற நகுலேஸ்வரி, தயானந்தராசா, கடம்பேஸ்வரி (ஜேர்மனி), மகேஸ்வரன், ஜெயந்தி, இளங்குமரன்(பிரான்ஸ்), வாசுகி, கவிதா, இளமதி, இளங்குமரன், சரவணன், கலையரசி, சுரேகா, சாருலதா, மேகலா, மணிவண்ணன், மயூரன், தேவலிங்கம்(கட்டார்), ஆனந்தசொரூபன் ஆகியோரின் பேர்த்தியும் விஜயராகவன், விஜயசாரங்கன், விஜயதாரணி, அஜித், பிரவீன்,நிவேதா, நரேஷ்கபில், யூலியா, யுகர்னியா, கரிகரன், தனுஷ்கா, விஷால், திருவளகன், சியாம், அனோஜன், சுவாதி, தர்ஷன், விஸ்வா, ரவிசங்கர், யனுஷன், சௌமியா, ஆகேஷ், மதுவர்ஷன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2010) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மாதகல் போதி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விபுலானந்தர் வீதி,
மாதகல்.

(107825)

தகவல்:
குடும்பத்தினர்.

## பொன்னையா முத்துச்சாமி ஆச்சாரியார்

*(சுழிபுரம் பத்திரகாளி கோயில் தர்மகர்த்தாக்களில் ஒருவர்)*



உடுவில் காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி பத்திரகாளி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா முத்துச்சாமி அவர்கள் நேற்று (22.12. 2010) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா சுந்தரம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - சிவக்கொழுந்து தம்பதியினரின் மருமகனும், பவளக்கொடியின் அன்புக்கணவரும், சிறிநிவாசன், சந்திரகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் தகப்பனாரும், அமரர் பாக்கியம் மற்றும் தங்கம்மா, செல்லம்மா மற்றும் கணபதிப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும், விஜயரட்ணத்தின் மைத்துனரும், கிருஷ்ணவேவி, பத்மா ஆகியோரின் மாமனாரும் சிந்துஜா, நர்மதா (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.12.2010) பி.ப. 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

காளி கோயிலடி,
திருநெல்வேலி.

(107821)

தகவல்:
சிறிநிவாசன் (சிறி - மகன்).

## திருமதி தம்பையா கண்மணி



சாவகச்சேரி, மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா கண்மணி 12.12.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை தம்பையாவின் அன்புத் துணைவியும் இராமநாதன் (கனடா), சிவசோதிநாதன் (லண்டன்), செல்வராணி (கனடா), பரஞ்சோதிநாதன் (நோர்வே), மங்களம் (சுவிஸ்), சோமநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் குணமணியின் (ஆச்சிப்பிள்ளை) வளர்ப்புத் தாயும் இன்பராணி, கந்தசாமி, கமலாசினி, ஜெயசோதி, பாஸ்கரி ஆகியோரின் அன்பு மாமியும் ஸ்ரீராமஜோதி - ராஜி, பாலஜோதி - சைலா, பிரதீபன் - சாந்தினி, குஜேந்தினி, சிவாஜினி, தபோதினி, காலஞ்சென்ற யசோதரன், கேஸீதரன் தவநிதி, ரமேஸ்தரன் - பிரியா, தாரணி - பகீரதன், தர்சிகா, லபீனா, குஜேலா - விஜயகாந்தன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சஞ்சேய், சாயித், பறீயே, பவிக்கா, பாவனா, பவேஷ், கிஷோத், துவிக்கா, கிஷாந்தன், வர்ஷா, வமிலா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2010) வியாழக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி, நுணாவில்,*
*சாவகச்சேரி.*

*தகவல்:*
தாரணி பகீரதன் *(பேர்த்தி).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரியன்னை பேராலய நத்தார் திருப்பலி

யாழ்ப்பாணம்,டிசெ.23

யாழ்.மரியன்னை போரலயத்தில் நத்தார் நள்ளிரவுத் திருப்பலி நாளை வெள்ளிக்கிழமை இரவு 11.30 மணிக்கு யாழ்.ஆயரினால் ஒப்புக்கொடுக்கப்படும். மறுநாள் காலை 6 மணிக்கு நத்தார் முதல் திருப்பலியும் காலை 7.15 மணிக்கு இரண்டாவது திருப்பலியும் இடம்பெறும்

## ஐ.நா.நிபுணர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேட்கும் என்று கற்றுக்கொண்ட பாடங்கள், நல்லிணக்க ஆணைக் குழுவின் உயர் அதிகாரி ஒருவர் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''ஐ.நா.வின் நிபுணர் குழு இலங்கைக்கு விஜயம் செய்யுமா, இல்லையா என்பது தொடர்பாகப் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன. எவ்வாறாயினும், அந்த நிபுணர் குழு இலங்கைக்கு விஜயம் செய்து, நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்க முன்வந்தால் அதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.

நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் இதுவரை சாட்சியமளித்தவர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகளை விட விசேட சலுகைகள் அந்த நிபுணர் குழுவுக்கு வழங்கப்பட மாட்டா. நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் எவரும் சாட்சியமளிக்க முடியும். அவர்களையும் சாட்சியாளர்கள் என்ற கண்ணோட்டத்திலேயே நல்லிணக்க ஆணைக்குழு நோக்கும். - என்றார். (ஒ-சி)

## அபிவிருத்திப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையை தீர்த்துக்கொள்வதற்கு உதவமாட்டாது.

அதனாலேயே, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு நியமிக்கப்பட்டமை, அரசாங்கத்துக்கும் சிறுபான்மை இன மக்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் ஆகிய அரசின் நடவடிக்கைகளால் கனேடிய மக்கள் உற்சாகமுற்றுள்ளனர், வரவேற்கின்றனர்.

சட்டபூர்வமான மற்றும் உறுதியான அரசுகளைக் கட்டியெழுப்புவதற்கு ஜன நாயக நடைமுறைகளைப் பலப்படுத்துவது அவசியம். மக்களால் தெரிவுசெய்யப்பட்ட, வெளிப்படையான, பொறுப்புக்கூறவல்ல மற்றும் தம்மக்களின் தேவைகளுக்குப் பதில் கூறுகின்ற அரசுகள் கால ஓட்டத்தில் மிகச் சிறந்த, பயனுள்ள சேவைகளைப் புரிவதாக இருக்கும். தமது அரசு தமக்காக பணியாற்றுகின்றது, தேசிய அடையாளத்தை உறுதிப்படுத்துகின்றது, என்று மக்கள் நினைக்கத் தொடங்குவார்கள்.

அமைதியைத் தோற்றுவிக்கும் வகையில் தேர்தல்களை நடத்துவதானது ஜனநாயகத்தின் முதல்கட்ட வெளிப்பாடாகவே கருதப்படுகின்றது. ஆனால் ஜனநாயகம் வளர்ந்து பரிணமிக்கத் தேர்தல்கள் மட்டும் போதுமானவையன்று, முரண்பாடுகளிலிருந்து வெளிப்பட்டுவரும் சமூகங்களின் சமீப கால அனுபவங்கள், பலவீனமான திட்டங்கள், அல்லது காலத்துக்கு முந்திய தேர்தல் நடைமுறைகளின் சவால்களை வெளிப்படுத்தியுள்ளன. ஜனநாயக நடைமுறைகள், விழுமியங்கள் மற்றும் ஆழமான புரிந்துணர்வுகள் பல பத்தாண்டு காலங்களிலேயே வளர்ச்சியடைவதாக இருக்கும். இதுவே பயனளிக்கும் சட்டத்துறை. சுதந்திரமான ஊடகத்துறை, தகுதிய வாய்ந்த நிர்வாகத்துறைகள் வளர வழிவகுக்கும். - என்றார். (அ-ப)

**கட்டட வேலைகள் செய்துகொடுக்கப்படும்**

வீடு கட்டுதல், திருத்துதல், குளியலறை கட்டுதல், மாபிள் பதித்தல், சுற்றுமதில் கட்டுதல், வர்ணம் பூசுதல், Electric வேலைகள், Plumbing வேலைகள் அனைத்தும் தரமாகவும் நியாயவிலையிலும் செய்துகொடுக்கப்படும்.

AXSHAYA CONSTRTUCTION, JAFFNA.

தொ.பே: 0776679564, 0213207202, 0213218088

**அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு**

சுந்தர்சன் நிறுவனத்தின் மாபெரும் மலிவு விற்பனையில் கொள்வனவு செய்த வாடிக்கையாளர்களின் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு நாளை [24.12.2010] வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு சுந்தர்சன் நிறுவனத்தில் நடைபெறும்.

சுந்தர்சன்,
மானிப்பாய்.

(பி/574012)

## எதிர்காலத்திற்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செவிப்புலனற்றோர் பாடசாலையில் கற்றவர்கள்.

இவர்களுடன் மேலும் மூன்று பார்வையற்ற மாணவர்களும் நவீல்ட் பாடசாலையில் இருந்து சாதாரண தர பரீட்சை எழுதி வருகின்றனர். பாடசாலையின் 56 வருட கால வரலாற்றில் முதல் தடவையாக இம்முறையே பார்வையற்ற மாணவர்கள் சாதாரண தரப் பரீட்சை எழுதியிருக்கிறார்கள் என்று அதிபர் வி.எஸ்.மகேந்திரன் தெரிவித்தார்.

சிவயோகன் மாதினி, விக்கினராசா விஜயலக்ஷ்மி, கிளைமன் கிறிஸ்ரில்டா, பழனிமுத்து ராஜலக்ஷ்மி, வியகுமார் வியலாதன், சந்திரராசா விக்னேஸ்வரன் ஆகிய ஆறு மாணவர்களுமே தமது விசேட தேவை நிலையை சவாலாக எடுத்துக் கொண்டு வெற்றிகரமாக சாதாரண தரப் பரீட்சையை எழுதி வருகின்றனர்.

வன்னியின் இறுதிப் போரினுள் அகப்பட்ட இந்த மாணவர்கள் சொல்லொணாத் துன்பங்களை எதிர்கொண்டவர்கள். பின்னர் முகாம்களிலும் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொண்டுள்ளனர். வெடி குண்டுகள் மற்றும் விமானக் குண்டு வீச்சுக்களால் இவர்கள் தமது பார்வையை இழந்ததுடன் அவயங்களையும் இழக்க நேரிட்டது.

எனினும் எதிர்காலத்தில் கல்வியே தமக்குத் துணை நிற்க முடியும் என்பதைப் புரிந்துகொண்டுள்ள இவர்கள் கடந்த 8 மாதங்களாக நவீல்ட் பாடசாலையில் கல்வி கற்று சாதாரண தரப் பரீட்சையை எதிர்கொண்டுள்ளனர்.

இவர்களில் சிலர் மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெறக் கூடியவர்கள் என்று அதிபர் தெரிவித்தார். தாம் பரீட்சையை நன்றாகவே செய்திருக்கின்றனர் எனத் தெரிவித்த இந்த மாணவர்கள் எனினும் வரலாறு மற்றும் விஞ்ஞானம் போன்ற பாடங்களை அடிப்படையாகக் கொண்ட கேள்விகள் அதிகம் உள்ள பாடங்களில் தங்களால் விடையளிக்க முடியாமல் போனதாகத் தெரிவித்தனர்.

மாணவர்கள் மூவர் பார்வையற்றிருப்பதுடன் கைகளையும் இழந்திருப்பதால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் என இரண்டு மொத்தம் ஆறு மேற்பார்வையாளர்கள் உதவி வருகின்றனர். அவர்களில் ஒருவர் கேள்விகளை வாசித்துவிடுவார் மற்றையவர் மாணவர் வாயால் சொல்லும் பதிலை எழுதுவார். மாணவரின் பதில் ஒலிநாடாவில் பதிவு செய்யப்படும். விடைத் தாளுடன் சேர்த்து அதுவும் அனுப்பப்படும்.

கொழும்பில் இருந்து வந்த பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் மாணவர்களை நேரில் பார்வையிட்டதன் பின்னர் இத்தகைய விடையளிக்கும் முறைக்கு அனுமதி வழங்கிச் சென்றனர் என மகேந்திரன் தெரிவித்தார்.

தாம் எதிர்காலத்தை நோக்கிப் போராடிக் கொண்டிருந்தாலும் தமது அத்தியாவசியத் தேவைகளையே பூர்த்தி செய்ய முடியாத நிலை காணப்படுவதாக மாணவர்கள் கவலைப்பட்டார்கள். இருப்பிடமும் உணவும் கிடைக்கின்றன. அதையும் தாண்டி அத்தியாவசியத் தேவைகள் பல இருக்கின்றன. எமது படிப்புக்கே மேலதிகத் தேவைகள் உள்ளன. இன்னும் நாம் விசேட தேவை உள்ளவர்கள் என்பதால் மற்றையவர்களின் உதவிகளைக் குறைத்து நாமே தனித்துச் செயற்படுவதற்கான கருவிகள் உபகரணங்கள் அதிகம் தேவையாக உள்ளன. எமது பொருளாதார நிலையில் அவற்றையெல்லாம் பெற முடியாத நிலையிலேயே இருக்கிறோம் என்று தெரிவித்தார் மாணவி விஜயலக்ஷ்மி.

பலபேர், தொண்டு நிறுவனங்கள் வந்து பார்த்துச் சென்றபோதும் இதுவரையில் தமது தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய உதவிகள் தம்மை வந்தடையவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர். (உ)

## நல்லிணக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த நிலையில், அதனைக் கவனத்துக்கு எடுத்துக்கொண்ட நல்லிணக்க ஆணைக்குழு இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

### ரணிலுக்கு அழைப்பு

இதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழுமுன் சாட்சியம் அளிக்க வருமாறு எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆணைக்குழுவின் செயலாளர் அத்துகொடவினால் தொலைபேசி மூலம் உத்தியோகபூர்வமற்ற முறையில் நேற்று முன்தினம் அழைப்பு விடுக்கப்பட்டது.

இதன்போது உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுக்குமாறு எதிர்க் கட்சித் தலைவர் பதிலளித்தார் என்றும், ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிப்பது குறித்து தீவிர கவனம் செலுத்த வேண்டியுள்ளதென அவர் தெரிவித்தார் என்றும் ஆணைக்குழுவின் உயரதிகாரி மேலும் கூறினார். (ஒ-சி)

## சிரேஷ்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பு திருத்தப்பட்டு கட்சி மீது சுமத்தப்பட்டு வந்த குற்றச்சாட்டுகள் நீக்கப்பட்டுள்ளன. கட்சிக்குள் ஜனநாயகம் இல்லை என்று பலர் குற்றம் சுமத்தினர். இப்போது அவ்வாறு கூறமுடியாது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய நிலையைப் பார்த்து மக்கள் மகிழ்ச்சியடைகின்றனர். அரசின் செயற்பாட்டால் அதிருப்தியடைந்திருக்கும் அரச எம்.பிக்கள் பலர் இதனால் பெரிதும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

சிரேஷ்ட அமைச்சர்கள் உட்பட அரச உறுப்பினர்கள் 20 பேர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையத் திட்டமிட்டுள்ளனர். இதுதொடர்பான பேச்சுகள் தற்போது இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

அரசின் செயற்பாட்டால் அரச எம்.பிக்கள் மாத்திரமல்ல, இந்த நாட்டு மக்களும் அதிருப்தியடைந்துள்ளனர். அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசையே எதிர்பார்க்கின்றனர்.

மக்களுக்கு வழங்கிய எந்த ஒரு வாக்குறுதியையும் இந்த அரசு நிறைவேற்றவில்லை. ஊழியர்களுக்கான சம்பள உயர்வு வழங்கப்படவில்லை. யுத்தம் முடிவடைந்துள்ளபோதிலும் பொருள்களின் விலைகள் இன்னும் குறைக்கப்படவில்லை.

அரசின் இந்த செயற்பாட்டைக் கண்டித்து நாம் நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

எமது கட்சியின் யாப்பு மாற்றியமைக்கப்பட்டதைத் தொடர்ந்து நாம் எமது கட்சியை வெற்றிபெறும் கட்சியாக மாற்றுவதற்கு வாய்ப்புக் கிட்டியுள்ளது. - என்றார். (ஒ-சி)

**வீடு வாடகைக்கு**

யாழ். நகருக்கு அண்மையில் சகல வசதிகளுடனான கூடிய வீடு வாடகைக்கு விடப்படும்.

மேலதிக விவரங்களுக்கு : 0779237885

**தேவை**

புத்தகசாலையில் வேலை செய்ய ஆண், பெண் இருபாலாரும் தேவை.

ஸ்ரீ காந் புத்தகசாலை,
இல.165, மின்சாரநிலைய வீதி,
பஸ்நிலையம் முன்பாக,
யாழ்ப்பாணம்.

**MyWay English ஆங்கில பயிற்சி**

ஆரம்பம் : 26.12.2010 சனி, ஞாயிறு 3 மாதம்

ஒருசில இடங்களுக்கே அனுமதி உண்டு

இலக்கண கற்றல், எழுத்துப்பயிற்சி இன்றி ஒரு ஆங்கில சொல்கூட தெரியாதவர்களும் 3 மாதத்தில் ஆங்கிலத்தில் பேச முடியும்

MyWay 077 33 63 456
182, Stanley Rd, Jaffna

**Deutsch - (டொச்)**
Deutsch - (டொச்) Dutch - (டச்)
**Dutch - (டச்)**

எம்பஸி பரீட்சைகளுக்கான Deutsch மற்றும் Nederland- Dutch மொழி புதிய வகுப்புகள் எதிர்வரும் சனி 25.12.2010 ஆரம்பமாகின்றன.

Vivekananda Academy
No.3, 2nd Lane, Palay Road,
Tel: 021 3216928, 077 9927117, 0774842464.




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.slic.lk



# வடக்கில்
## புத்தொளியுடன்
### பாதுகாப்பு மற்றும் உபசரிப்பு

சமாதான ஒளிக்கதிர்கள் பரவும் வடக்கில், நம் மக்கள் வாழ்விலும் புத்தொளி வீசிட சுபதருணம் ஒன்று உதயமாகின்றது. காப்புறுதி துறையின் முன்னோடியும், பாரிய காப்புறுதி நிறுவனமுமான ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் ஆனது வடக்கு வாழ் மக்களுக்கு பாதுகாப்பும் உபசரிப்பும் மிக்க சேவையை மனமுவந்து வழங்கிட 2010 மார்கழி 23ம் திகதியன்று சுபவேளையில் தனது யாழ்ப்பாண கிளையினை புதிய கட்டிடமொன்றிற்கு இடம்மாற்றுவதுடன் புதிய கிளையினை கிளிநொச்சியிலும் திறந்து வைப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றது.



யாழ்ப்பாணத்தில்
**இல. 571, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
கிளிநொச்சியில்
**இல. 31, ஏ9 வீதி, கிளிநொச்சி.**

நாடெங்கிலும் பரவியுள்ள ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸின் ஒருங்கிணைக்கப்பட்ட கிளை வலைப்பின்னலினூடாக உங்களின் அனைத்து காப்புறுதி தேவைகளை பூர்த்தி செய்ய நாம் அர்ப்பணிப்புடன் தயாராகவுள்ளோம்.

TRIAD 23613

AAA RAM RATINGS AA-

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

2 மாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

தொ.பே.: கார்த்திக், 0774669597

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு. முருகையா கேசவன்**

(ஆசிரியர் B.A.)

23.12.2010 இன்று கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் பட்டமேற் கல்வி டிப்ளோமா (P.G. Dip in Ed.) பட்டத்தைப் பெற்றுப் பல கலையும் சிறக்க மேலும் பல பட்டங்கள் பெற்று கல்வியின் சிகரமாய் வாழ்வில் உயர்வடைய வாழ்த்துகின்றோம்.

அப்பா, அம்மா, அண்ணாமார், அக்கா, அத்தான், அண்ணிமார், சித்தப்பாமார், அன்ரிமார்.

தொல்புரம் மத்தி.
சுழிபுரம். (107738)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தேசிய கலாசார மரபுரிமைகள் அமைச்சினால் தேசிய ரீதியில் நடத்தப் பெற்ற 2010 ஆம் ஆண்டுக்கான அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் போட்டிகளில் சிறுகதையில் முதலாம் இடத்தையும், கவிதையில் 3ஆம் இடத்தையும் பெற்று 23.12.2010 இன்று கொழும்பு நூதனசாலை மண்டபத்தில் இடம்பெறும் பரிசளிப்பு வைபவத்தில் கௌரவிக்கப் பெறும் மு/பாலிநகர் மகா வித்தியாலய ஆசிரியரும் எமது நண்பருமான

**திரு.வ.வசந்தகுமார்**

அவர்களைப் பாராட்டுவதோடு அவருடைய இலக்கியப்பணி சிறப்புறத் தொடர இறையருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

மு/பாலிநகர் மகா வித்தியாலயம்,
வவுனிக்குளம். (107743)

வாழ்த்துவோர்:
ஆசிரிய விடுதி நண்பர்கள்,

## கல்விசாரா ஊழியருக்கு நேர்முகத்தேர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.23

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் நிலவும் சமையலாளர், பாடசாலைச் சுகாதாரத் தொழிலாளி ஆகிய பதவிகளின் வெற்றிடங்களுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர் முகப்பரீட்சை இடம்பெறவுள்ளது.

விண்ணப்பித்தவர்கள் எதிர்வரும் 27ஆம், 28ஆம் திகதிகளில் முல்லைத் தீவு வலயக்கல்வி அலுவலகத்திற்கு காலை 8.00 மணிதொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை சமுகமளிக்குமாறு வட மராட்சி கல்விப்பணிப்பாளர் வ. செல் வராசா அறிவித்துள்ளார். (204-313)

## ஒளி விழா

நவாலி,டிசெ.23

வலி.தென்மேற்கு சண்டிலிப் பாய் பிரதேச செயலகத்தில் ஒளி விழா இன்று முற்பகல் 10மணிக்கு பிரதேச செயலர் அ.எழிலரசி தலைமையில் மேற்படி செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (201-100)

* * *

வடமராட்சி,டிசெ.23

வடமராட்சிகிழக்கு செம்பியன் பற்றுக் கிராமத்தில் சமூகமட்டத்திலான ஒளிவிழா எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கட்டைவேலி பருத்தித்துறை சேகர முகாமைக் குரு அருள் திரு.என். அருள் நாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (201-236)

## ஆண்டு நிறைவு விழா

வடமராட்சி,டிசெ.23

பருத்தித்துறை அரசினர் சேகரா வைத்தியசாலை மெதடிஸ்த சிற்றாலயத்தின் 15ஆவது ஆண்டு நிறைவுவிழாவும் ஒளிவிழாவும் எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

கட்டை வேலி பருத்தித்துறை சேகர முகாமைக்குரு அருட்திரு என். அருள் நாதன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வுகளில் ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி விசேட பூசை வழிபாடும் நடை பெறும். (201-236)

## அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் ஆலய உபயகாரப் பெருமக்களே பொதுக்கூட்டத்திற்கான முன்னறிவித்தல்

சென்ற 27.11.2010 மாலை தர்மகர்த்தாக்கள் உறுப்பினர்கள் 07 பேரில் 06 பேருடன் நடைபெற்ற தர்மகர்த்தாக்கள் சபைக் கூட்டத்தில் எதிர்வரும் 2011 ஜனவரி மாதம் பதினாறாம் (16) திகதி உபயகாரர்களது பொதுக்கூட்டம் கூடுவது என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

"கோயிலுக்கு அல்லது அதன் தெய்வத்துக்குக் காணிகள் நன்கொடையாக அளிப்பவர்கள் அவர்கள் உயிரோடு இருக்கும் பொழுதும் அவர்களுக்குப் பின் அவர்களின் ஆண் சந்ததியினர் குறித்த கோயிலின் வழிபாட்டுக்காரராகவும், வருடாந்த திருவிழாக்களை நடத்துபவர்கள், விசேட பூசைகள், விசேட சமயக் கோட்பாடுகளுக்கு அமைய ஏனைய உற்சவங்களை நடத்துபவர்களாகியவர்கள் இக்கோயிலின் உபயகாரர் ஆவர்."

1948இல் யாழ். மாவட்ட நீதிபதியினால் (TR74A) 1917ஆம் ஆண்டின் நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டம் இலக்கம் 09 இற்கு அமைய ஒரு இந்து பொதுசமய நம்பிக்கைச் சொத்தாக கட்டளை இட்டுத் தீர்க்கப்பட்ட சமாதானத் தீர்வுக்கு இணங்க, தர்மகர்த்தாக்கள் தெரிவு செய்யப்பட்டவுடன் கோயிலையும் அதன் அசைவற்ற, அசைவுள்ள சொத்துக்களையும் உடனடியாகப் பெறுப்பேற்று உடைமையாக்கி முகாமைத்துவம் செய்வதற்கேற்ற ஆலோசனைகளை பிரேரணைகள் மூலம் 31.12.2010 இக்கு முன் செயலாளருக்கு அறியத் தரும்படி கேட்டுக்கொள்கின்றேன். (நீதிமன்றத் தீர்ப்பு முகாமைத்துவக் கட்டளை இல 07 ஐப் பார்வையிடவும்)

வழிபாட்டுக்காரரும், உபயகாரரும் வருடம் தோறும் ரூபா 2 சந்தாப் பணம் செலுத்துவதன் மூலம் அமைந்து தர்மகர்த்தாக்கள் தெரிவு செய்யும் நோக்கத்துக்காக தங்கள் பெயர்களைத் தேர்தல் இடாப்பில் சேர்த்துக்கொள்ள சந்தாப்பணமாகிய ரூபா 2 தனாதிகாரியிடம் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும். (நீதிமன்றத் தீர்ப்பு முகாமைத்துவக் கட்டளை இல. 8, 5 ஐப் பார்வையிடவும்)

கணக்காய்வு விவரங்கள் கிடைத்தவுடன் நிகழ்ச்சி நிரல் தெரியப்படுத்தப்படும் என்பதை அன்பாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

உபயகாரப் பட்டியலையும் மற்றும் கோயில் அறிவித்தல்களையும் இணையத்தளம் www.alaveddych ஐ இடைக்கிடை பார்வையிடவும்.

செயலாளர்,
தர்மகர்த்தாக்கள் சபை கும்பளாவளைப் பிள்ளையார் கோயில்,
அளவெட்டி.
16.12.2010

குறிப்பு:
யாழ்.மாவட்ட நீதிபதியின் TR74A இலக்கத் தீர்ப்பின் பிரதியை ஆலய பூசை நேரங்களில் செயலகத்தில் பார்வையிடலாம். உபயகாரர் பட்டியலில் 2009வரை உள்ள பகுதிகளில் உபயகாரராகப் பதியப் பட்டுள்ளவர்களில் அறிவித்தல் கிடைக்காதவர்கள் இந்த அறிவித்தலைத் தனிப்பட்ட அறிவித்தலாக ஏற்றுக்கொள்ளவும். (107747)

## பாராட்டி வாழ்த்துகிறேன்



இன்று (23.12.2010) வியாழக்கிழமை கொழும்பு, பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் Dip. in Edu. பட்டம்பெறும் தொல்புரம் பதியைச் சேர்ந்த எனது பாசமிகு நண்பன்

**திரு. முருகையா கேசவன்**

அவர்கள் கல்வியிலே கருத்தனமாய் காலமெல்லாம் களிப்புடன் வாழ வாழ்த்துகின்றேன்.

பத்திரகாளி கோயிலடி,
சுழிபுரம்.

அன்பு நண்பன்,
ச.யசோதரன்

## மாபெரும் அதிரடி மலிவு விற்பனை

# கவுஸ் ஒவ் செலெக்ஷன்

இல.(22)[J] நவீன சந்தை, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ✱ சில்க் சாறி W.Blouse | ~~850~~ | 590 | ✱ பிளவுஸ் | ~~475~~ | 200 |
| ✱ சில்க் சாறி W.Blouse | ~~1050~~ | 640 | ✱ பிளவுஸ் | ~~600~~ | 350 |
| ✱ சில்க் சாறி W.Blouse | ~~1250~~ | 790 | ✱ பிளவுஸ் | ~~675~~ | 390 |
| ✱ சில்க் சாறி W.Blouse | ~~1300~~ | 890 | ✱ லேடிஸ் T.சேட் | ~~350~~ | 100 |
| ✱ கொட்டன் சாறி | ~~900~~ | 590 | ✱ லேடிஸ் T.சேட் | ~~450~~ | 250 |
| ✱ கொட்டன் சாறி W.Blouse | ~~1250~~ | 790 | ✱ லேடிஸ் T.சேட் | ~~550~~ | 300 |
| ✱ கொட்டன் சாறி W.Blouse | ~~1700~~ | 890 | ✱ சோலிகிற் | ~~1850~~ | 490 |
| ✱ கொட்டன் சாறி W.Blouse | ~~1900~~ | 990 | ✱ சோலிகிற் | ~~2600~~ | 890 |
| ✱ கொட்டன் சாறி W.Blouse | ~~2200~~ | 1290 | ✱ ஸ்கேட்பீஸ் | ~~1250~~ | 790 |
| ✱ சீக்குயின் சாறி W.Blouse | ~~2450~~ | 1390 | ✱ ஸ்கேட்பீஸ் | ~~1350~~ | 890 |
| ✱ சீக்குயின் சாறி W.Blouse | ~~2850~~ | 1450 | ✱ டெனிம் ஜீன்ஸ் | ~~2150~~ | 1390 |
| ✱ சீக்குயின் சாறி W.Blouse | ~~4850~~ | 2990 | ✱ ரவுசர் | ~~1400~~ | 790 |
| ✱ சீக்குயின் சாறி W.Blouse | ~~6750~~ | 3490 | ✱ டெனிம் ஜீன்ஸ் சிறிது | ~~750~~ | 390 |
| ✱ சீக்குயின் சாறி W.Blouse | ~~8500~~ | 4790 | ✱ டெனிம் ஜீன்ஸ் சிறிது | ~~950~~ | 490 |
| ✱ ஆட்சில்க் சாறி | ~~1900~~ | 990 | ✱ சோட்ஸ் சிறிது | ~~475~~ | 290 |
| ✱ ஆட்சில்க் சாறி | ~~2150~~ | 1300 | ✱ சோட்ஸ் சிறிது | ~~650~~ | 390 |
| ✱ ஆட்சில்க் சாறி | ~~2750~~ | 1590 | ✱ சோட்ஸ் சிறிது | ~~850~~ | 490 |
| ✱ ஆட்சில்க் சாறி | ~~4250~~ | 1990 | ✱ T.சேட் | ~~350~~ | 190 |
| ✱ ஆட்சில்க் சாறி | ~~4500~~ | 2490 | ✱ T.சேட் | ~~675~~ | 390 |
| ✱ பஞ்சாபி | ~~1100~~ | 490 | ✱ பேபிகவுன் | ~~750~~ | 490 |
| ✱ பஞ்சாபி | ~~1200~~ | 600 | ✱ பேபிகவுன் | ~~1050~~ | 690 |
| ✱ பஞ்சாபி | ~~1300~~ | 650 | ✱ பாட்டி வுறக் | ~~850~~ | 450 |
| ✱ பஞ்சாபி | ~~1600~~ | 790 | ✱ பாட்டி வுறக் | ~~900~~ | 590 |
| ✱ பஞ்சாபி | ~~2400~~ | 1390 | ✱ சோக்கோ சேட் | ~~850~~ | 390 |
| ✱ பஞ்சாபி பீஸ் சில்க் | ~~1450~~ | 890 | ✱ சோக்கோ சேட் | ~~1050~~ | 690 |
| ✱ பஞ்சாபி பீஸ் சில்க் | ~~1900~~ | 1190 | ✱ சோக்கோ சேட் | ~~1350~~ | 890 |
| ✱ ஸ்கேட் | ~~550~~ | 290 | ✱ சேட் L/S Box | ~~1050~~ | 690 |
| ✱ ஸ்கேட் | ~~775~~ | 490 | ✱ சேட் L/S Box | ~~1250~~ | 750 |
| ✱ ஸ்கேட் | ~~850~~ | 550 | ✱ சேட் S/S | ~~900~~ | 490 |
| ✱ ஸ்கேட் | ~~1250~~ | 690 | ✱ வெள்ளை சேட் (சிறிது) | ~~400~~ | 250 |
| ✱ ஸ்கேட் | ~~650~~ | 390 | ✱ சூட்டிங் 01லெந் | ~~550~~ | 250 |
| ✱ கொட்டன் பிறின் 01m | ~~170~~ | 140 | ✱ ரெறின் 01m | ~~300~~ | 200 |
| ✱ சீத்தை 01m | ~~110~~ | 80 | ✱ கேட்டின் துணி ([illegible]) 01m | ~~210~~ | 170 |
| ✱ பட்ட சில்க் 01m | ~~150~~ | 120 | ✱ கேட்டின் துணி (48'') 01m | ~~190~~ | 150 |

### ஒத்துமாறல்

யாழ்.கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரியர் தென்மராட்சி வலயத்துக்கு ஒத்து மாற விரும்புகின்றார். உடன் தொடர்பு கொள்ளவும் தொ.பே: 0777484553

### ENGLISH CLASS

2010 A/L பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக் கழகம் செல்லவுள்ள மாணவர்களுக் கான ஆங்கில வகுப்பு நடத்தப்படுகின்றது. தனிப்பட்டவர்களுக் கான வகுப்பும் நடத்தப்படும்.
விவரங்களுக்கு: 0718561654

### கைமாறிவிட்டது

21.12.2010 செவ்வாய்க்கிழமை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த Yaal Express பஸ்ஸில் Bag ஒன்று கைமாறி விட்டது. இதை மாறி எடுத்துச் சென்றவர்கள் தயவு செய்து அதனை ஒப்படைத்துத் தனது Bag கைப் பெற்றுக் கொள்ளவும்.

தொடர்பு: தியோகு எமிலியனுஸ்
0217901721, 0775770377

### தவறிவிட்டது

WP JX 8816 இலக்கமுடைய மோட்டார் சைக்கிளின் காப்புறுதி, வரிப் பத்திரங்கள், மோட்டார் சைக்கிள் பதிவுப் புத்தகம் என்பவற்றுடன் வேறு சில ஆவணங்களும் அடங்கிய பை கல்வியங்காட்டிற்கும் நாவலர் சந்திக் கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்த வர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
தொ.பே.: 0755680228

## அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது Butterfly International School இன் பணிப்பாளராகிய திருமதி சுஜாத்தா அவர்களின் கணவரும் தற்போது லண்டனில் உயர்கல்வியைத் தொடர்பவருமாகிய

**திரு.கி.செல்வக்குமாரன்**

இன்று (23.12.2010) கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டம் பெறுவதை உளம் மகிழ்ந்து பாராட்டுவதுடன் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.

Butterfly International School Staff

திரு. தி. முகுந்தன் (M.D)
திருமதி மு.அஜந்தா
[illegible]
செல்வி ச.பபிதா
செல்வி ச.நித்தியா
செல்வி தி.யாழினி
செல்வி தி.நளினி

(107804)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிக்கு வளமான எதிர்காலம்

அதி கௌரவத்திற்குரிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ



"யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டமையினால் எதிர்வரும் ஆறு வருடங்களுக்குள் மிக துரிதமான அபிவிருத்தியை எட்டும் நிலைமையில் நாம் தற்போது இருக்கிறோம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் பயங்கரவாதிகளிடமிருந்து மீட்கப்பட்டமையினால் மிகப் பெரிய நிலப்பரப்பும் கடல் எல்லையும் கிடைத்துள்ளது. எங்களது நாடு உல்லாசப் பிரயாணத்துறைக்கு ஏற்ற பாதுகாப்பான இடமாக இருக்கிறது. சுகாதாரம் மற்றும் வாழ்வதற்கு ஏற்ற சூழலுக்கான பட்டியலில் முதலிடமும், அரச பலப்படுத்தலுக்கு ஆறாம் இடமும், ஆண் பெண் சமத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிலையங்களை கவரும் நாடுகளில் 20 இற்கு உட்பட்ட இடத்தையும் எமது நாடு தக்கவைத்துள்ளது. எங்களது கல்வி மற்றும் சுகாதார செயற்பாடுகள் சாதாரண தரத்தை விட சிறப்பானதாகும்.

கடந்த 26 வருடங்களாக ஏற்பட்டிருந்த நிலைமை மீண்டும் இந்த நாட்டில் ஏற்படாது மேற்குறிப்பிட்ட எங்களது விஷேட சக்திகளையும், திறன்களையும் கொண்டு முடிந்தளவில் பிரயோசனம் பெற வேண்டியுள்ளது. இன்று எங்களுக்கு என்ன தேவைப்படுகிறது? நாட்டின் அனைத்து மாகாணங்களுக்கும், கிராமங்களுக்கும் இந்த அபிவிருத்தியை சமமாக வழங்க வேண்டும். அது அரசியல் தீர்வுக்கும் ஒப்பாகும்."

அதி கௌரவத்திற்குரிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 2010 வரவு செலவு திட்ட உரையின்போது

### கௌரவ அமைச்சரின் செய்தி



"பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக பெரியளவில் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை புனரமைப்பு செய்யும் நடவடிக்கையை அதி கௌரவத்திற்குரிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலுக்கமைய எமது அரசாங்கம் வேகமாக செயற்படுத்தி வருகின்றது. புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் செயற்படும் புனர்வாழ்வு அதிகார சபையானது கடந்த காலங்களில் இந்நடவடிக்கைகளுக்கு பெரும்பங்காற்றியுள்ளது.

வன்முறையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படுவதற்கு மேலதிகமாக வீடுகளை புனரமைப்பு செய்யும் நடவடிக்கை மற்றும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 4% மானிய வட்டி அடிப்படையில் சுயதொழிலுக்கான கடன் உதவி, வீட்டுக் கடன் திட்டம் போன்றவை செயற்படுத்தப்படுகின்றமையானது இங்கு, விஷேடமாக குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும். அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதன் மூலமும் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களினது வாழ்வாதாரத்தை உயர்த்துவதனாலும் நாட்டின் பொருளாதாரம், அபிவிருத்தி போன்றவற்றுக்கு சுயதொழிலுக்கான கடன் திட்டத்தினூடாக கிடைக்கும் பயன்கள் முக்கியமானதாக இருக்கிறது. விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு, சிறு வியாபாரம் என வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திற்கான சிறப்பு உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வருமானத்தை ஈட்ட வழிகாட்ட கிடைத்தமையையிட்டு மகிழ்ச்சியடைகிறோம்.

மற்றைய அமைச்சுக்களின் ஒத்துழைப்புடன் சுயதொழிலில் ஈடுபட்டு வருவோருக்காக வருமானம் ஈட்டுவதற்கான ஆலோசனைகள், தொழில்நுட்ப அறிவு, சந்தை மற்றும் வங்கி செயற்பாடுகளுக்கான பயிற்சி வழங்குதல் போன்றவற்றை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

விஷேடமாக வன்னி பிரதேசத்தில் 1000 இற்கும் அதிகமான வீடுகளை புனரமைப்பு செய்ய கிடைத்தமையானது குறிப்பிட்டுக் கூற வேண்டிய வெற்றியாகும். இந்த நடவடிக்கைகளுக்கு தலைமைத் தாங்கி செயற்பட்ட புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் முன்னால் கௌரவ அமைச்சரும் மனிதவளங்களுக்கான தற்போதைய சிரேஷ்ட அமைச்சருமான டியூ் குணசேகர அவர்களின் வழிகாட்டல் தொடர்பில் இங்கு முக்கியமாக குறிப்பிட வேண்டும். மஹிந்த சிந்தனையின் முன்னோக்கிய பார்வையின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படை வசதிகள் அபிவிருத்தி செய்தல் மற்றும் அவர்களது வாழ்க்கை தரத்தை மேம்படுத்தல் போன்றவற்றை துரிதகதியில் மேற்கொள்வதற்காக நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்."

சந்திரசிறி கஜதீர
புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்

### செயலாளரின் செய்தி



"நாட்டில் முப்பது வருட காலமாக இடம்பெற்று வந்த யுத்தம் முடிவடைந்ததையடுத்து நம் நாட்டு மக்களுக்கு 2009ஆம் ஆண்டு மே மாதம் உண்மையான சுதந்திரம் கிடைத்தது. இந்த பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக எமது நாட்டு மக்கள் பெரும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தமையை நாம் அனைவரும் அறிவோம். அதி கௌரவத்திற்குரிய ஜனாதிபதி அவர்களினது மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அவர்களது தைரியத்தாலும் இராணுவ வீரர்களின் அர்ப்பணிப்பாலும் உருவாகிய சமாதானம் நாட்டு மக்கள் நிம்மதியான வாழ்க்கையை முன்னெடுப்பதற்கு வழிவகுத்துள்ளது.

பயங்கரவாத நடவடிக்கைகளினால் துன்பங்களை அனுபவித்த மக்களின் வாழ்க்கைத் தரம், சொத்து மற்றும் தொழில் போன்றவற்றுக்காக நஷ்ட ஈடு வழங்குதல், அனர்த்தங்களுக்குள்ளான வீடுகளை புனரமைப்பதற்கு நிதி உதவி வழங்குதல், சுயதொழில் ஆரம்பிப்பதற்கான உதவி வழங்குதல் என்பன எங்களது அமைச்சின் கீழ் இயங்கும் ஆட்களையும், ஆதனங்களையும் மற்றும் கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகார சபையினால் முன்னெடுக்கப்படும் காலத்திற்கேற்ற சிறந்த சேவையாகும்.

பயங்கரவாத செயற்பாடுகளினால் நீண்ட காலமாக பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து தங்கியிருந்த வீடு, தொழில் போன்றவற்றையும் இழந்த மக்களும் இந்த நாட்டின் பிரஜைகள் என்பதனால் அவர்களை மீளக் கட்டியெழுப்பி, இந்நாட்டின் வளர்ச்சிக்கு அவர்களது பங்களிப்பையும் பெற்றுக்கொள்வது மிக முக்கியமானதாகும்.

அந்த மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டதன் பின்னர் குடியிருந்த வீடை புனரமைப்பு செய்வதற்காக, வருமானத்தை விருத்தி செய்வதற்காக, சுயதொழிலை ஆரம்பிப்பதற்காக குறைந்த வட்டி அடிப்படையில் கடன் வழங்கப்பட்டமை மற்றும் உயிரிழப்பு, வீடுகள் இழப்பு போன்றவற்றுக்கு நஷ்ட ஈடு வழங்குவதற்கு அதி கௌரவத்திற்குரிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பிரகாரம் கௌரவ அமைச்சர் சந்திரசிறி கஜதீர மக்களுக்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கையானது மக்களுக்கு மிகப்பெரிய ஆசீர்வாதமாக இருக்கிறது. இதன் மூலம் இந்நாட்டின் தேசிய ஒற்றுமை நிலைநாட்டப்பட்டு மீண்டும் இனப்பிரச்சினை ஏற்படாத நாடாக இருக்கட்டும். இந்த நாடு அபிவிருத்தியடைந்த நாடாக மாறி அனைத்து செழிமையும் கொண்ட நாடாகவும் அமையட்டும்."

ஏ.திசாநாயக்க
செயலாளர்
புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதி கௌரவத்திற்குரிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் மஹிந்த சிந்தனை செயற்திட்டத்தின் அடிப்படையில்
புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு கௌரவ அமைச்சர் சந்திரசிறி கஜதீர அவர்களின் தலைமையில்
மனிதவளங்களுக்கான கௌரவ அமைச்சர் டியூ் குணசேகர அவர்களின் மற்றும் வன்னி மாவட்ட அனைத்து மக்கள் பிரதிநிதிகளினது பங்குபற்றலுடன் 2010.12.24 அன்று நாள் முழுவதும்

- கிளிநொச்சியில் அனர்த்தங்களுக்குள்ளான வீடுகளில் 500 வீடுகளை புனர் நிர்மானம் செய்யும் திட்டம் நிறைவடைதல் மற்றும் புதிதாக 500 வீடுகளை புனர்நிர்மானம் செய்யும் திட்டம் ஆரம்பித்தல், கிளிநொச்சி இந்து வித்தியாலய மண்டபத்திலும், நெடுங்கேனி பிரதேச சபை அலுவலகத்திலும் நடைபெறும்
- இலங்கை வங்கியுடன் இணைந்து புனர்வாழ்வு அதிகார சபை ஆரம்பித்துள்ள சுயதொழில் மற்றும் வீட்டுக் கடன் திட்டங்களுக்கான ஆரம்ப கடன் வழங்கும் வைபவம் - கரச்சி பிரதேச சபை அலுவலக மண்டபத்தில் நடைபெறும்

### புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவரின் செய்தி



"பயங்கரவாத வன்முறைகளினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை பலமடையச் செய்ய மஹிந்த சிந்தனையின் வழிகாட்டலில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அரசாங்கம் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தி அவற்றை செயற்படுத்தி வருகிறது.

வடக்கு கிழக்கிலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை செழிப்படையச் செய்யவும், நாட்டின் அபிவிருத்திக்காக வடக்கு கிழக்கு வாழ் மக்களின் பங்களிப்பை பெற்றுத் தருவதற்கும் புனர்வாழ்வு அதிகார சபை நேரடியாக தொடர்புபட சந்தர்ப்பம் கிடைத்தமையானது மகிழ்ச்சிக்குரிய விடயமாக இருக்கிறது. இதன் ஒரு கட்ட நடவடிக்கையாக வன்னி மக்களின் அனர்த்தங்களுக்குள்ளான வீடுகளை குடியிருப்பதற்கு ஏற்ற வகையில் புனரமைப்பு செய்வதற்கு நிதி வழங்கும் முதலாவது திட்டத்தின் மூலம் 500 வீடுகள் முழுமையாக்கப்பட்டுள்ளதோடு, மேலும் 500 வீடுகளுக்கு நிதி வழங்குவதற்கான இரண்டாவது நிகழ்வு 2010ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் திகதி கிளிநொச்சியில் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமையானது மஹிந்த சிந்தனையின் பாதையில் ஒரு பகுதியாக அடையாளப்படுத்தப்படுகிறது.

வடக்கு கிழக்கு மக்களை உற்பத்தி நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபடுத்துவதற்காக இலங்கை வங்கியின் உதவியுடன் மிகவும் குறைந்த மானிய வட்டி அடிப்படையில் சுயதொழிலுக்கான கடன் வழங்கும் புனர்வாழ்வுகள் அதிகார சபையின் நிகழ்ச்சித் திட்டமும் 24ஆம் திகதி கிளிநொச்சியில் ஆரம்பமாகவுள்ளது. இதற்காக அதி கௌரவத்திற்குரிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் வழிகாட்டலில் பொருளாதார அபிவிருத்தி மற்றும் வீடு அபிவிருத்தி அமைச்சு ஒத்துழைப்பு வழங்கியமையை மக்கள் வரவேற்றுள்ளனர்.

இத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு புனர்வாழ்வுகள் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு கௌரவ முன்னால் அமைச்சர் டியூ் குணசேகர அவர்கள் வழங்கிய பங்களிப்பானது மிகவும் வரவேற்கத்தக்கதொன்றாகும். அதேபோன்று புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு கௌரவ அமைச்சர் சட்டவல்லுநர் சந்திரசிறி கஜதீர அவர்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களின் வாழ்க்கைத் தரத்தை வழமைக்கு கொண்டுவருவதற்கு வழிகாட்டியமை நாட்டுக்கு சிறந்த செயற்திறன் மிகு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது."

ஈ.ஏ.சமரசிங்க
தலைவர்
புனர்வாழ்வு அதிகார சபை

### இலங்கை வங்கி தலைவரின் செய்தி



"வடக்கு கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்தை வழமைக்கு கொண்டுவருவதற்காக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு முன்னெடுத்துச் செல்லும் நடவடிக்கைகள் மிக முக்கியமானதாக கருத்திற்கொள்ளப்படுகிறது. அதனடிப்படையில் புனர்வாழ்வு அதிகார சபையுடன் இணைந்து இலங்கை வங்கி செயற்பட கிடைத்தமையானது செயற்திறன்மிகு செயற்பாடாகும்.

புனர்வாழ்வு அதிகாரசபை அறிமுகப்படுத்திய 4% மானிய வட்டி அடிப்படையிலான சுயதொழில் மற்றும் வீட்டுக் கடன் செயற்திட்டத்தின் ஒரு பகுதியினராக இலங்கை வங்கி செயற்படுகிறது. எமது வங்கி மேற்கொள்ளும் இந்நடவடிக்கையானது இலாப நோக்கற்றதாகும். எமது நாட்டின் பிரதான அரச வங்கி என்ற அடிப்படையில் சமூகத்திற்கான பொறுப்பை நிறைவேற்றுவது எமது கடமையாக இருக்கிறது.

பாதிக்கப்பட்ட மக்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்தி நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அவர்களை நேரடியாக ஈடுபடுத்த வேண்டியுள்ளது. இதற்காக புனர்வாழ்வு அதிகார சபையுடன் இணைந்து இலங்கை வங்கி செயற்படுத்தியுள்ள சுயதொழிலுக்கான கடன் உதவியானது பெரியளவில் ஒத்துழைப்பு வழங்கி வருகிறது. இச்செயற்திட்டத்திற்கு கிளிநொச்சி தெரிவு செய்யப்பட்டமையும் மிக முக்கியமானதாகும். நாளைய தினம் கடன் வழங்கும் திட்டம் கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்படுகின்றமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். மஹிந்த சிந்தனையின் கொள்கைக்கமைய எதிர்வரும் காலத்தில் நாட்டை அபிவிருத்தி பாதைக்கு இட்டுச் செல்ல அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்."

கலாநிதி காமினி விக்ரமசிங்க
தலைவர்- இலங்கை வங்கி

## புனர்வாழ்வு அதிகார சபை

### புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு

அனுசரணை இலங்கை வங்கி BOC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

அண்மையில் பெருமை மிக்க அரச விருதான **'கலாபூஷணம்'** விருது மற்றும் நாடளாவிய ரீதியிலான தேசிய விருது ஆகியவை வழங்கிக் கௌரவிக்கப்பட்ட

**விஸ்வப் பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய ஆச்சாரி பாஸ்கரன் ஆச்சாரி**

அவர்களைப் பாராட்டுவதோடு அவர் மேன்மேலும் பல விருதுகளும் பட்டங்களும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.



பாராட்டி வாழ்த்துவோர்: ராஜேந்திரம் (செம்பா), கிருபாகரன் (கிருபா), ஜெயானந்தம் (ஜெயா), துர்க்கேஸ்வரன் (டேவிற்), சசிக்குமார் (சசி) - ஊழியர்கள்


# 770ஆம் இல. பஸ்ஸை இரவு 8மணி வரை நீடிக்குக

வலி. வடக்கு, டிசெ. 23

யாழ்ப்பாணத்தில் இருந்து நடைபெற்று வரும் 770ஆம் இலக்க பஸ் சேவையை இரவு 8.00 மணிவரை நடத்த வேண்டும் என்று அப்பகுதி மக்கள் உடுவில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து இரவு 8.00 மணிக்கு கடைசி பஸ் புறப்படுகின்ற போதிலும் குப்பிளான்வரை செல்லும் மக்கள் மல்லாகம் சந்தியில் இறங்கி சுமார் நான்கு கிலோமீற்றர் தூரம் வரை நடந்து செல்லவோ அன்றி சைக்கிள், ஓட்டோ என்பவற்றில் செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

மாலையில் கடைகளில் வேலை செய்பவர்களும் ஏனையவர்களும் இதனால் கஷ்டங்களுக்கு உள்ளாகி வருகின்றார்கள்.

இவர்களுடைய கஷ்டத்தைப் போக்கவும் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்ட பகுதியாகவும் இருப்பதனால், இரவு 8.00 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும் பஸ்ஸை குப்பிளான்வரை சென்றுவர ஆவண செய்யவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஓ-86)

# புதுக்குடியிருப்பில் குண்டுகள், ரவைகள் மீட்பு

கொழும்பு, டிசெ. 23

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு தோம்பாவிலில் புதைத்து வைக்கப்பட்டிருந்த குண்டுகள் மற்றும் பயன்படுத்தப்படாத ரவைகள் கடந்த 20ஆம் திகதி மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஆர்.பீ.ஜி. எறிகணைகள் - 110, எம்.பீ.எம்.ஜீ. ரவைகள் 2 ஆயிரம், ரீ- 56 ரக ரவைகள் 1, 800, ஆர்.பீ.ஜி. குண்டுகள் - 15, குண்டுகள் - 15, 60 மி.மீ. குண்டுகள் - 02 மற்றும் வேறுரக 15 குண்டுகள் அங்கு மீட்கப்பட்டுள்ளது என பொலிஸார் கூறினர்.

வட மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் காமினி சில்வாவின் வழிகாட்டலில் வடமாகாண விசேட விசாரணைப் பிரிவினராலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-22)


# தேவை

1. கணினி இயக்குநர் (ஆண்கள்)
2. காசாளர் (இருபாலாரும்)
3. சமையற்காரர் (ஆண்கள்)

காலம்: 23.12.2010

நேரம்: மு.ப. 10 மணி

தகைமையுடையவர்கள் உரிய ஆவணங்களுடன் நேர்முகத்தேர்வுக்கு சமுகம்தரவும்.
(5 கிலோ மீற்றருக்கு உட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

**ராம் சுப்ப சிற்றி**

306, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 1252

STUDY& WORK IN

**LONDON | NEW ZEALAND**

USA CANADA | IRELAND | SINGAPORE FRANCE
SWEDEN | MALAYSIA | INDIA | NORWAY | ITALY



1. மேற்கூறிய நாடுகளில் கல்வியைத் தொடர Visa க்கள் உறுதிப்படுத்தப்படும்.
2. IELTS தகைமை இல்லாமல் சில பாடநெறிகளுக்கு Visa பெற்றுத்தரப்படும். (No Need IELTS for Level 6 & 7 program)
3. Courses:- Business Management, Computer Science, Engineering, Travel & Tourism, Beauty Culture and over 200 Courses
4. Expert free guidance for sponsorship
5. எதிர்பார்க்கப்படும் குறைந்த தகைமை (G.C.E. O/L)
6. Part time job guaranteed

**MILLENNIUM BUSINESS ACADEMY (MBA)**
# 286, R. A. De Mel Mawatha, Colombo 03.
(Near the Liberty Plaza, Next to Don Karolis)
Hotline: Hasan - 0773507663
E-mail: hasan_abdul10@yahoo.com
Web: www.millmba.com



# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1253 நீலம்

வெற்றி இலக்கங்கள்

இடபம் 05 13 17 22 21-12-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 4,134,400/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 233,947 | 20/- | 4,678,940/- |
| 2 இலக்கங்கள் | 21,467 | 40/- | 858,680/- |
| 1 இல. + லக்கினம் | 21,238 | 60/- | 1,274,280/- |
| 2 இல. + லக்கினம் | 1,961 | 200/- | 392,200/- |
| 3 இலக்கங்கள் | 576 | 1000/- | 576,000/- |
| 3 இல. + லக்கினம் | 51 | 10,000/- | 510,000/- |
| 4 இலக்கங்கள் | 03 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 4,134,400/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 8,890,100/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 629 | | 913,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 279,872 | | 9,803,100/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 5,179,750/-

## இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

மகரம் 27 34 43 53

ஜக்பொட் பரிசு ரூபா. 400,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 626 | 500/- | 313,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 100,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 400,000/- | 400,000/- |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 629 | | 913,000/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 200,000/-



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 05 . 06 . 1942

மறைவு 04 . 01 . 2010

**சின்னத்துரை பாலசுப்பிரமணியம்** (J.P)
(திதி: திருதியை)

அன்பின் திருவுருவாய் பாசத்தின் இலக்கணமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய் வழிநடத்தி வாழ வைத்த தெய்வமே
ஓராண்டு ஓடி மறைந்தாலும் என்றும் எம் மனதில்
உந்தன் நினைவுகள் நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

மல்ரி ஓயில்,
கே.கே.எஸ்.வீதி,
இணுவில். தொ.பே: 0779472808

உங்கள் பிரிவால்வாடும்,
குடும்பத்தினர்.



உ
சிவமயம்

# தசாக கிருஹயக்ஞ அழைப்பு



கடந்த 15.12.2010 புதன்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவர் சிவாஹமஞானி, வேத சிவாஹம ஞானபானு, பிரதிஷ்டா ரெத்தினம், சிவாஹம கிரியா ரெத்தினம், சிவாஹம அநுசாரித சார்தூல,

**கலாநிதி சிவப்பிரம்மஸ்ரீ சிவானந்தக் குருக்கள் நித்தியானந்த சிவாச்சாரியார்**

அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைக் கிரியைகள் முருகமூர்த்தி வீதி, சங்கானையிலுள்ள அன்னாரது இல்லத்தில் பின்வரும் தினங்களில் நடைபெறவுள்ளன.

தசாகம் : 24.12.2010 வெள்ளிக்கிழமை: மு.ப. 10 மணி
ஏகோதிஷ்டம் மாசியம்: 25.12.2010 சனிக்கிழமை: மு.ப.10 மணி
சபிண்டீகரணம் : 26.12.2010 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணி
கிருஹயக்ஞம், பிராம்மண சமாராதனை : 27.12.2010
திங்கட்கிழமை காலை 10 மணி

அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியைகளில் சிவாச்சாரியார்கள், அன்புள்ள்ங்கள் சகலரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சிவா. நித்[illegible]
முருகமூர்த்தி வீதி, சங்கானை. (107732) [illegible]



## மஹஜன சம்பத / மஹஜன சம்பத / Mahajana Sampatha

21.12.2010

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2334

வெற்றி எழுத்து: O  வெற்றி எண்கள்: 9 8 6 8 4 8

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | எண்ணிக்கை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | O 9 8 6 8 4 8 | ரூபா. 11,371,038/= | பரிசு - |
| 1 பரிசுகள் | 9 8 6 8 4 8 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | 8 6 8 4 8 | ரூபா. 100,000/= | பரிசுகள் 15 |
| 3 பரிசுகள் | 6 8 4 8 | ரூபா. 10,000/= | பரிசுகள் 121 |
| 4 பரிசுகள் | 8 4 8 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1259 |
| 5 பரிசுகள் | 4 8 | ரூபா. 100/= | பரிசுகள் 12774 |
| 6 பரிசுகள் | 8 | ரூபா. 20/= | பரிசுகள் 125744 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | 9 8 6 8 4 | ரூபா. 10,000/= | பரிசுகள் 12 |
| 8 பரிசுகள் | 9 8 6 8 | ரூபா. 1,000/= | பரிசுகள் 127 |
| 9 பரிசுகள் | 9 8 6 | ரூபா. 100/= | பரிசுகள் 1282 |
| 10 பரிசுகள் | 9 8 | ரூபா. 50/= | பரிசுகள் 12593 |
| 11 பரிசுகள் | O | ரூபா. 20/= | பரிசுகள் 50320 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 11,772,530.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு Rs. 12,405,092.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org